கல்வித்தந்தை
அமரர் 'ஐயா'
திரு. சீ. மீனாட்சி சுந்தரனாரின்

# கருத்துக் கருவூலம்



தோற்றம்: 25-12-1898

ஐயா பிறந்ததின நூற்றாண்டு
சிறப்பு வெளியீடு

**கலைமகள் கல்வி நிலையம்**
ஈரோடு.

கல்வித்தந்தை

அமரர் 'ஐயா'

திரு. சீ. மீனாட்சி சுந்தரனாரின்

# கருத்துக் கருவூலம்


தொகுத்தளித்தவர்

**திருமதி. S. மங்களவதி,** *M.A., M.Ed.,*

தாளாளர்,

**கலைமகள் கல்வி நிலையம்,**

**ஈரோடு.**



பதிப்பாளர்: D. பழனிசாமி B.Sc., முருகன் பிரஸ், ஈரோடு ✆ 212768



அமரர் 'ஐயா' திரு. சீ. மீனாட்சி சுந்தரனார், B.A.,L.T.,
நிறுவனர் (1945 - 1973)

**கலைமகள் கல்வி நிலையம்**
**ஈரோடு.**

# முன்னுரை

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய நிறுவனர் எமது பெரு மதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய அமரர். ஐயா உயர்திரு. **மீனாட்சி சுந்தரனார்** அவர்களின் நூறாவது பிறந்த தினத்தை நன்றியுடன் நினைவுகூரும் இவ்வாண்டில் அன்னாரின் உயரிய கருத்துக்களை அனைவரும் அறிந்து கொள்ளச் செய்யும் நல்லெண்ணத்துடன் இந்நூல் வெளியிடப்படுகிறது.

'ஐயா' அவர்கள் பெண் கல்விக்கென ஆற்றியுள்ள அருந்தொண்டினையும், 'ஒரு பெண்ணுக்குக் கல்வியளிப்பது, ஓர் நல்ல குடும்பத்தையே உருவாக்குவதாகும்' என்னும் அவரது உயரிய நோக்கத்தையும் இன்றும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது, ஈரோட்டில் அவர் நிறுவிய கலைமகள் கல்வி நிலையம். இந்நிலையத்தில் பயின்ற, பயிலுகின்ற மாணவ, மாணவியரும் பணியாற்றிய, பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களும் அவரது உயரிய ஆன்மிக, காந்தீய, அறநெறிக்குரிய கருத்துக்கள் பலவற்றையும் பல்லாண்டுகளாகக் கேட்டும், அறிந்தும் பயன்பெற்றுள்ளனர். அவரது சொற்பொழிவுகள், கட்டுரைகள், கடிதங்கள், சமயக்கருத்துக்கள் அனைவரும் அறிந்துபயன்பெற வேண்டியவை.


பள்ளியில் பயிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளும் அவர்தம் பெற்றோரும், பணியாற்றும் ஆசிரியரும், அலுவலரும் ஐயாவின் அரும்பணிகளை நன்றியுடன் நினைவுகூரும் வகையில் இந்நூலை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

'ஐயா'வின் புகழ் என்றும் நிலைத்திருக்க இறைவனின் ஆசி வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

திருமதி. **க. மங்களவதி,**
நிர்வாகி,
கலைமகள் கல்வி நிலையம்

டிசம்பர், '98
ஈரோடு.



அமரர் உயர்திரு. **'ஐயா'**வின் திருவுருவ வெண்கலச்சிலை

பத்மபூஷன் **T.S. அவினாசிலிங்கம்** B.A., B.L., அவர்களால்

உயர்திரு. **S.V. சிட்டிபாபு**, M.A., B.T., அவர்கள் தலைமையில்,

19-4-1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.

# கலைமகள் கண்ட காவலர்

புலவர். செ. இராசு, எம். ஏ.,

## ஐயா அவர்கள் நினைவுச் சின்னம்!

கலைக்கூடம் காண வருகின்றவர்களின் கருத்தினைக் கவரும் வண்ணம், மண்டபத்தின் நடுவே கம்பீரமான தோற்றத்துடன், அழகிய தோடு, கருணை பொழியும் கண்களுடன், நிமிர்ந்த நன்னடையுடனும், நேர்கொண்ட பார்வையுடன் சிலையாக நின்று நிலைத்து வாழ்கின்றார் நம் ஐயா அவர்கள்.

கலைமகள் கலைக்கூடம் ஐயா அவர்கள் கண்ட கனவு! அக்கனவு நனவாகி, நாடும் ஏடும் நல்லறிஞர் உள்ளங்களும் பாராட்டும் பாங்கினைக் கண்டு உளம் பூரித்து உவகை கொள்ளுகின்றார், சிலையாக நிற்கும் செம்மல் நம் ஐயா அவர்கள்!

கலைக்கூடமே அவருக்கொரு நினைவுச் சின்னம்தான். தான் உருவாக்க நினைத்த கலைக்கூடத்தில் தானும் ஒரு கலைச் செல்வமாக மாறிக் காட்சியளிக்கின்றார் ஐயா அவர்கள்!

கலைக்கூடம் காண்பவர் அனைவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் - ஏன் கலைமகளிலே உறையும் தெய்வமாகிய ஐயா அவர்களின் சீர்மிகு நினைவுச் சின்னமாம் சிலையையும் செம்மலின் கல்வெட்டு வாசகத்தையும் கண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தி செல்லுகின்றனர்.

கல்வெட்டுக்களிலும், அதன் தொடர்களிலும் ஆழமாக ஈடுபாடு கொண்ட நம் ஐயா அவர்கள் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற வெள்ளி விழாவில் அளித்த செய்தி கல்வெட்டுத் தொடர்போலவே உள்ள அமைப்பைக் காணுகிறீர்கள்.

"இந்த பள்ளிக்கு எனக்குப் பின்னால் உறு துணையாக இருப்பவர்கள் பாதம் என் தலை மேல்.

இந்த நிலையத்திற்கு எந்த வகையிலும் ஊறு நேராதபடி ஒரு சிறு துரும்பளவு உதவி செய்தாலும் கூட என் ஆன்மா சாந்தியடையும்.

என் உயிர் முழுவதும் இந்நிலையம்தான். இறந்த பின்னும் கூட நான் இதைக் கண் காணித்து வருவேன்"

இந்த இறவாப் பொன்மொழிக்கேற்ப எங்கள் எல்லா முயற்சிகளிலும் தோன்றாத் துணையாக அருமை ஐயா அவர்கள் இருந்தார்கள் - இனியும் இருப்பார்கள் என்றே நாங்கள் நம்புகின்றோம்.

ஐயா அவர்களின் திருவுருவச் சிலையின் கீழ் இன்னும் பல கல்வெட்டுக்கள் கலைமகள் குடும்பத்தினரால் இன்று பலரும் காண வெட்டி வைக்கப்பட்டுள்ளது.

### From Iyya's Will

"The name of Kalaimagal Kalvi Nilayam should not be changed for any reason even to honour me. I have dedicated the Nilayam to the Public of Erode. I want the Public to render all help for its Welfare". 7-11-1969

### My message to Teachers

Work first, Money next,
You are God's Children;
Money first, Work next,
You are Devil's Children;
Children are living, souls,
Make them Nations assets.

### எனது இலட்சியம்

"மனமே
பிறக்கும் போது நீ அழுதாய்
பிறர் சிரித்தார்கள் ;
ஆனால்
இறக்கும்போது நீ சிரி ;
பிறர் அழட்டும்."

ஐயாவின் கருத்தாழமிக்க இத்தொடர்கள் நம்மை வழி நடத்திச் செல்லட்டும்!

# ஐயாவின் வாழ்க்கை வரலாறு

25—12—1898 தமிழ் ஆண்டு விளம்பி
ஆண்டிலே மாதங்களில் சிறந்த மார்கழியில்
சீரங்க முதலியாருக்கும் செல்லம்மாள் என்னும்
அம்மையாருக்கும் நன் மகவாய் நம் ஐயா
**திரு. S. மீனாட்சி சுந்தரனார்**
தோன்றினார். தேசபக்தர்கள் பலரை ஈன்-
றெடுத்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த
உஞ்சனை கவுண்டம்பாளையமே இவரது
பூர்வீகம். ஐயா அவர்கள் ஏழாம் வகுப்பு
படிக்கும் போதே அவரது தந்தையார் நோய்-
வாய்ப்பட்டார்கள். ஆகவே நமது ஐயாவின்
அன்னையார் செல்லம்மாள் அவர்கள்தான்
கடுந்துன்பப்பட்டு உழைத்து உருக்குலைந்து
ஐயாவைப் படிக்க வைத்தார்கள். நம் ஊரில்
உள்ள கொங்கலம்மன் கோவில் அருகே
உள்ள திண்ணைப் பள்ளியில்தான் ஐயா
நான்காம் வகுப்புவரை படித்திருக்கிறார்.
வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமை மாலை-
யும் ஐயாவுக்குத் தின்பண்டம் வாங்குவதற்கு
3 காசுகள் கிடைக்குமாம். அதற்குக்கூட சிறு
சிறு நூல்களை ஒவ்வொரு காசுக்கு வாங்கிப்-
படித்துத் தம் அறிவுப்பசியைத் தீர்த்துக்
கொண்டிருக்கின்றார். அந்த நற்பழக்கத்தின்
விளைவுதான் நம்முன்னே காணப்படும்
இம்மாபெரும் நூல் நிலையத்தின் தோற்றம்.

பவானிக்கு பக்கத்தில் உள்ள அப்பாவு
முதலியார் என்பவர் இரவு நேரங்களில்
வகுப்புகள் நடத்தி வருவாராம். அவருடன்
பாடம் நடத்தி அதன் மூலம் சிறு தொகை
பெற்றும் வீட்டு வாடகையாக வந்த ரூபாய்
18 -ஐயும் கொண்டு மதுரையில் உள்ள
அமெரிக்கன் கல்லூரியில் தன் உயர்
கல்வியைத் தொடர்ந்தார். ஐயா அவர்களது
கல்விக்கு அவரது சகோதரியார் உதவிய
பான்மையும் என்றும் நினைவுகூறத்தக்கது.
1921-ல் பி. ஏ., பட்டம் பெற்று ஈரோடு
வந்ததும் ஐயாவை நம்பித்தான் குடும்பம்
இருக்கிறது என்ற நிலை தெரிந்தும் சுதந்திரப்
போரில் குதித்தார். ஈரோட்டுத் தந்தை
ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் ஈரோட்-
டில் கதர்த்தொழில் நடைபெற்றது. பெரியார்
ஆங்கிலேயர் அடக்கு வெறியால் சிறைக்கு
அனுப்பப்பட்டபோது அப்பெரும் பொறுப்பு
நம் ஐயாவுக்குக் கிடைத்தது. கதர் இயக்கம்,
கள்ளுக்கடை மறியல், அந்நிய நாட்டுத்துணி
எரிப்பு முதலியவைகளில் ஐயா பங்கு கொண்-
டார். 1921-ல் மகாகவி பாரதியார் ஈரோடு
வந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகி-
யிருக்கிறார். சுதந்திர இயக்க காலத்தில்
மகாத்மா காந்தியடிகளோடு ஈரோட்டிலிருந்து
திருச்செங்கோடு போய் அவருக்குப் பணி-
விடை செய்யும் பேற்றினை ஐயா பெற்றுள்-
ளார்கள். முதன்முதலில் மாசன உயர்-
நிலைப்பள்ளியில்தான் தலைமைப் பொறுப்-
பில் இருந்திருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியின் கோவை மாவட்டச்
செயலாளராகவும், ஈரோடு நகர காங்கிரசின்
தலைவராகவும் இருந்தபோது திரு.
மோதிலால் நேரு, திருமதி. சரோஜினி தேவி,
திரு. சி. எஃப் ஆண்ருசு, திரு. நேரு போன்ற
தேசியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப்
பழகியிருக்கிறார்கள்.

ஈ. வெ. ரா. பெரியாரின் கடவுள் மறுப்பு
இயக்கத்தினால் நாட்டில் எப்படிக் குழப்பம்
ஏற்படும் என்பதை உணர்ந்து பக்தி உணர்ச்-
சியை ஊட்டி, சமய வளர்ச்சிக்குத் துணை
புரிய அருள்நெறி இயக்கத்தைத் தமிழ்
நாட்டில் தோற்றுவித்தவர்களுள் ஐயாவும்
ஒருவர். ஈரோட்டில் உள்ள அருள்நெறித்
திருப்பணி மன்றப் பயிற்சிப்பள்ளியும்
புண்ணிய இல்லமும் அப்பொழுது ஐயாவால்
ஏற்படுத்தப்பட்டவையே.

1964-ல் கோயிலுக்குப் போக
வேண்டுமா '? என்றதொரு ஆராய்ச்சி நூலை
எழுதியுள்ளார்கள். ஈரோடு நகர மக்களுக்கு
நல்ல கருத்துக்களை எடுத்தியம்ப
'நகரமித்திரன்' என்ற வார இதழை நடத்தி-
யுள்ளார்கள். ஐயா அவர்கள் ஈரோடு நகரா-
ட்சித் தலைவராகவும் மூன்றாண்டுகள்
இருந்துள்ளார்கள்.

ஐயா காலத்தில் ஈரோட்டில் குடிநீர்,
சாலை வசதிகள் மிகப்பெருகின. சாலைகளில்
மரங்கள் வைக்கப்பட்டன. பிரசவ விடுதி
கட்டப்பட்டது. பல ஆண்டுகள் நகராட்சி
நிர்வாகம் எடுத்திராத 30 புதிய தெருக்கள்

புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஈரோடு திரு நகர் காலனி குடியிருப்பின் தலைவராக 9 ஆண்டுகள் இருந்துள்ளார்கள். கூட்டுறவு அர்பன் பாங்குத் தலைவராகவும் இருந்துள்ளார்கள். டாக்டர். அழகப்ப செட்டியார் தலைமையில் நிறுவப்பட்ட ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழுவின் 6 உறுப்பினர்களில் ஐயாவும் ஒருவர். அதன் சார்பில் பல இடங்களுக்கும் சென்று டாக்டர். ஜாகிர் உசேன், காகா கலேல்கர், அரியநாயகம் ஆகியோருடன் பரிமாற்றம் கொண்டு நம் நகரில் சாரண இயக்கம் வளர்ச்சி பெற பேருதவி புரிந்துள்ளார்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த சொல்வன்மை பெற்றிருந்ததால் 'இருமொழி சொற்கொண்டல்' எனப்பெருமை பெற்றார்.

ஈரோட்டில் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியைத் தொடங்கிய பெருமை ஐயா அவர்களையே சாரும். பல ஆண்டுகள் அதன் புலவராகவும் இருந்திருக்கிறார்கள். சென்னிமலை, குருசாமிபாளையம் போன்ற ஊர்களில் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி உருவாக ஐயாவே மூல காரணமாக இருந்திருக்கின்றார்.

தம்மை ஆளாக்கிய தாயாரும், தங்கையும் செய்த தியாகத்தினை எண்ணிப்பார்த்த ஈடில்லா புகழ் கொண்ட நம் தந்தை அவர்களுக்குச் செய்யும் கைமாறாக பெண்குலத்தின் நன்மைக்காக இக்கலைமகள் கல்வி நிலையத்தை 1945-ஆம் ஆண்டு ஜுலைத்திங்கள் 77 குழந்தைகளோடு இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு ஆரம்பித்திருக்கின்றார். 1957-ல் முதல் முறையாக பள்ளி இறுதித் தேர்வுக்கு நம் மாணவச் செல்வங்கள் சென்றனர். இன்றோ இக்கல்வி நிலையம் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகளோடும், இருநூறுக்கு மேற்பட்ட ஆசிரியைகளோடும், பல பிரிவுகளோடும் ஆலமரமாய்த் தழைத்து நிற்கிறது. இன்று நம் பள்ளி அறிஞர் பெருமக்கள் பலர் பாராட்டுகின்ற வகையில் அறிவாலயம் ஆகவும் சிறந்த கலைக்கோயில் ஆகவும் மாதிரிப்பள்ளியாகவும் முத்திரை தாங்கி தென்னகத்து சாந்தி நிகேதனாக இன்று சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது. குணம் என்னும் குன்றேறி நின்ற நம் ஐயா, காந்தி வழியொன்றே காசினியை உயர்த்துமென்று சாந்தமாம் நெறியில் சன்மார்க்க வழியுரைத்தார்.

ஆசிரியர்களின் நிலையையும், வேலைத் திறனையும் உயர்த்த ஈரோடு ஆசிரிய ஐக்கிய சங்கத்தை 1928-ல் நிறுவினார். மேலும் ஈரோட்டில் ஆசிரியர் குடியிருப்பை அமைத்ததில் ஐயா அவர்களின் சேவை பாராட்டுக்குரியது உயர்திரு. அவிநாசிலிங்க செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தபோது அவரிடம் தூது சென்று ஆசிரியர்களின் ஊதிய உயர்வுக்கு முதன்முதலில் வழிவகுத்தவர் நம் ஐயாதான். இப்பணிகளை எண்ணும்போது ஆசிரியர் பணி அறப்பணி என்பதற்கு ஐயா தன்னையே அர்ப்பணித்துள்ள பாங்கினை நாம் அறியலாம். இவ்வாறு கல்விப்பணி, ஆசிரியர் பணி, சமயப் பணி, அரசியல் பணி ஆகியவற்றில் ஐயா அவர்களின் உயர்ந்த புகழ் இவ்வுலகில் என்றும் நின்று நிலவும்.

# Meenakshisundaram - The great Founder of Kalaimagal Kalvi Nilayam, Erode.

**( Article Published in 'World Informo' - Aug.' 75 by U. S. O., New Delhi )**



Thiru. S. Meenakshisundaram, B. A., L. T.,

Sri S Meenakshisundaram, B. A., L. T., Founder of the well-known Institution of the South, Kalaimagal Kalvi Nilayam, Erode in Tamil Nadu, deserves all praise as a veteran Educationist for his selfless and devoted service for more than 30 years in the field of Education. This Institution has been started by him in 1945 with 77 children and two teachers and his untiring service and noble ideals have raised it to its present state with more than 4000 children and 120 teachers catering to their needs Though he breathed his last on 14th May, 1973, his aim of providing the children with an education of all round development of body, mind and soul has been well kept-up even now by the able management of Miss. Muthiah and the band of devoted staff members she has.

The Founder's main aim in starting the school is to educate the girls in the rural area as he used to mention very often that educating a girl is building up a good home. He started his life as a graduate teacher, switched on to

business, politics and then again entered the field of education and took up the profession of a Headmaster, which has kindled his desire to start such an institution of his own, in memory of his beloved mother, a widow who educated her son inspite of many hardships

He was an ardent follower of Gandhiji noted for his simplicity and helping nature. The Sarvodhaya Prayer conducted in his school in his memory every Monday shows the Founder's religious tolerance In various fields he had served humanity as the Chairman of the Municipality, as Rotary Club President as an International Chairman of Rotary and as a freedom fighter who was closely associated with great National leaders of his period.

His great interest in the education of pre-school and primary school children and the various methods he adopted in teaching them, the valuable guidance he gave to his teachers are worth-mentioning.

He had been a voracious reader throughout his lifetime keeping himself always in touch with the world at large through magazines he received from embassies all over the world.

He was well-known for his oratorical tal both in English and Tamil. His thoug provoking speeches have often stunned t listeners.

The large amount of work turned out the Intitution by the staff and children be evidence to his never-quenching thirst probing deeper into the Educational fi The Projects done in Maths, Scien Geography English, and Tamil, the Projec carried out for promoting International. Und standing and National Integration, the wond ful booklets with a fund of information a the large store of useful instructio materials prepared in the Institution show t planning mind behind them and prove t efficiency of those who have carried out su plans.

His nobility lies in dedicating th great Institution to the Public of Erode aft his death. His sincere efforts to draw o the best from the children have borne fru and they are bringing in the incredible glo ous cent per cent results every year in t School Final Examination for the past 1 years. His name shall remain ever immort through this magnificent Institution he h started and nurtured.

---

## [ Article Published in the Souvenir of National Seminar on the Role of Women in Education in India ]

Thiru S. Meenakshisundaram Mudaliar, B. A. L. T., Founder of the well-known institution, Kalaimagal Kalvi Nilayam, Girl's High School reputed for achieving 100% results in the S. S. L. C. Public Examination for 13 in years succession deserves all praise for his unique service for the cause of Women's Education in the South of Tamil Nadu specially in Erode, a place in the rural area Having lost his father very early he had a great attachment towards his mother, who took great pains to see her son graduated inspi of many hardships.

By way of providing the girls in th village with an opportunity of havin good education, he started a Hostel whe provision is made for the stay of 30 children. 'Educating a girl is educating a famil —such is the belief of Iyyah, the Found and he devoted his time in drawing out th

..est from the girls and in giving them allround development of body, mind and soul.

He was a great Educationist with profound thoughts which he conveyed to the students through his thought - provoking speeches both in English and Tamil. His skill in expressing his thoughts clearly had earned him the name. 'இருமொழி சொற்கொண்டல்.'

He practised what he preached and like Gandhiji. he believed in simplicity, truth and non-violence. He possessed to great extent religious tolerance which made him teach his students all noble thoughts from Gita. Kuran and Bible He had started the Sarvodhaya Prayer in the school and made the children get by heart useful passages from the three religions Self Research Diaries are provided to each. Each student is expected to examine her thoughts, words and deeds with the help of the guiding questions in the diaries each day. The unmanned counter and the examinations without invigilators are for the girls to practice honesty.

Iyyah believed that deep religious faith can only enable women to build up good homes. He himself taught the hostel girls the high thoughts and philosophical ideas in Hindu religion by way of simple examples. He always believed in giving equal opportunities for women like men. He used to say very often that girls should display not only moral strength but physical strength too when a necessity arises. They should rise to the occasion and defend themselves during period of strike etc.,

He believed in doing hard work with out expecting any remuneration which is described in Gita as 'Nishkamya Karma'. He himself used to till the soil. cultivate the land, do the gardening and water the plants Thus he inculcated in girls a sense of dignity of labour and developed their aesthetic sense. Through competitions and literary Associations plenty of chances are given to the students for developing their skills and talents in elocution and creative writing.

Iyyah believed that without proper aids, the slowlearners will not be able to come up. The marvellous storage of colourful aids in English Tamil, Maths. Science. and History & Geography depict his generosity to spare any amount for the education of the students Though he was not rich enough to run such a big Institution and hostel he was noble enough to spend every pie he got for the benefit of the students The environment and surrounding are not so encouraging for a flourishing school like this but still the strong foundation laid by Iyyah keeps up the tone of the school still and the sincere and devoted band of staff members under the able administration of their present Correspondent. Iyyah breathed his last on 14th May 1973, but his name shall remain ever immortal in the educational field, specially as one who has served the cause of women's Education in Tamil Nadu.

***Note :-*** *The above articles were published in 1975, two years after the demise of Iyyah. Even now, after 20 years, '**Kalaimagal**' is keeping up its tone and standard. It has been upgraded as Higher Secondary School in 1985. Kalaimagal Matriculation School was also started in 1986. Now '**Kalaimagal**' has 6000 children on roll and 200 staff members.*

# ஐயாவின் சமயக் கருத்துக்கள்

**மார்ச்சு மாதம் 3-ம் தேதி, 1969, உயர்திரு. 'ஐயா' அவர்கள் இறைவனைக் குறி மாணாக்கியரின் கேள்விக்குக் காலைப் பிரார்த்தனையின் போது அளித்த பதில் :- ( ஒலிப்பதிவு )**



## ஐயா, உயர்திரு. சீ. மீனாட்சிசுந்தரனார்

முதல் கேள்வி, கடவுள் இருக்கிறாரா, அப்படியிருந்தால் நாம் ஏன் அவரைப் பார்க்க முடியவில்லை? இதற்கு மட்டும்தான் நான் இப்போது பதில் சொல்லப்போகிறேன். மூன்று விஷயங்களை உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன். அவைகளுக்குத் தமிழிலே அளவைகள் என்று பெய வடமொழியிலே பிரமாணங்கள் என்று பெய இப்பொழுது என் கையிலே பென்சில் இரு கிறதா? எப்படிக் கண்டாய்? பார்க்கிறாய் ஆகவே ஒரு பொருளைப் பார்த்து அது உண்டு என்று முடிவு கட்டுவதற்குத் தமிழிலே

காண்டல் அளவை என்று பெயர். வடமொழியிலே பிரத்தியட்ச பிரமாணம் என்று பெயர். ஒரு பொருளைக் கண்ணால் மட்டுமல்ல ஐந்து புலன்களாலும் தெரிந்து உண்டு என்று முடிவு கட்டுவது பிரத்தியட்ச பிரமாணம்.

அடுத்தது அனுமானப் பிரமாணம் என்று பெயர். அது ஒன்றை யூகித்து அது இப்படி இருக்க வேண்டும் என்று முடிவு செய்வது. நமிடத்தில் ஒரு ரேடியோ பெட்டி இருக்கிறது காலை 8-80 மணிக்கு திருச்சி ஸ்டேஷனுக்குத் திருப்புகிறோம். கே. பி சுந்தராம்பாள் பாட்டு வருகிறது. அவர்களைப் பார்க்கிறாயா? இல்லை — பாட்டை மட்டும் ரேடியோவில் கேட்கிறாய் — அங்கிருந்து சொல்கிறார்கள் — அது இன்னார் பாடிய பாட்டு என்று நாம் பார்க்க முடியவில்லை. ஆனால் அந்தப் பொருளைக் கேட்டு அனுமானிக்கிறோம். அதற்குத் தமிழிலே கருதல் அளவை என்று பெயர். 'ஓ'—இவர் குரலாக இருப்பதால் இவர் தான் பாடியிருப்பார்', என்று முடிவு செய்கிறோம். இது இரண்டாவது அளவை.

லண்டன் மாநாகரத்திற் கருகில் ஓடும் நதியின் பெயர் என்ன? தேம்ஸ் — யாராவது அந்த நதியைப் பார்த்தீர்களா? இல்லை—பின் ஏன் சொல்லுகிறீர்கள்? அது பூகோளப் புத்தகத்-தில் இருக்கிறது. இம்மாதிரி அனுபவமுடையவர்கள், விஷயத்தைத் தெரிந்தவர்கள் தாங்கள் எழுதிய நூல்களிலிருந்து எடுத்து ருசுப்படுத்தினால் அதற்கு ஆகமப் பிரமாணம் என்று பெயர் வடமொழியிலே; நூல் அளவை என்று பெயர் தமிழிலே.

இந்த 8 பிரமாணங்களைக் கொண்டு தான் ஒன்று உண்டு என்று முடிவு செய்ய வேண்டும். ஆனால் பிரத்தியட்ச பிரமாணத்திற்கு எட்டாத எவ்வளவோ இருக்கிறது. கண்ணாலே பார்ப்பதோ, காதாலே கேட்பதோ, மூக்கால் முகர்வதோ, உடம்பாலே நுகர்வதோ இல்லாத எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. பாலுக்குள் வெண்ணெய் இருக்கிறது அதைப் பஞ்சேந்திரியங்கள் கொண்டு கண்டுபிடிக்க முடியாது. விறகிலே தீ இருக்கிறது. ஆனால் அது பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படவில்லை. அதே மாதிரி கடைந்தெடுத்த வைரத்துக்குள் ஒளி இருக்கிறது. ஆனால் அக்கல்லை முதலில் பார்த்தால் வைரமாகத் தோன்றாது. இருக்கின்றது என்பதை உணர்கின்றோம். ஆனால் பஞ்சேந்திரியங்களுக்கு அது தெரியவில்லை. உங்கள் பள்ளித் தலைவிக்கு உயிர் இருக்கிறதா? அதை அவர் காட்ட முடியுமா? உங்களுக்குள் இருக்கும் உயிரை நீங்கள் காட்ட முடிகிறதா? உங்களோடேயே இருக்கிற உயிரைக் காட்ட முடியாது. உங்களுக்கு அறிவு இருக்கிறதா? அது கறுப்பா, சிவப்பா, நீளமா உருண்டையா, எப்படியிருக்கிறது அறிவு? அதை யாராவது காட்ட முடியுமா? அது செயல்படும்போது தெரிகிறது உயிர் உள்ள உடம்பு, உயிரில்லாத உடம்பு செயல்படுவதைக் கண்டு நாம் நிதானிக்கிறோம். ஆகவே இவைகளை ஐம்புலன்களால் நாம் காண முடியாது.

ஒருவர் காதைப்பிடித்துத் திருகினால் வலிக்கும் வலியைக்காட்ட முடியுமா? தேன் ஒரு கரண்டி சாப்பிட்டால் இனிப்பாயிருக்கிறது. இனிப்பைக் காட்ட முடியுமா—இது காண்டல் அளவையில் வராது—ஆகவே கடவுளை நாம் காட்ட முடியாது. ஆனால் அனுபவிக்க முடியும். உணர முடியும் வலியை அனுபவிக்க முடியும் - ஆனால் அந்த வலியை மேஜை மேல் எடுத்து வைத்துக் காட்டமுடியாது இனிப்பையும அவ்வாறே—ஆனால் அதை நீ அனுபவிக்கிறாய் ஆகவே கடவுளை நீ அனுபவிக்க முடியும். அறிய முடியாது. ஒரு பிள்ளையை மேஜைமேல் நிறுத்திவிட்டு "நீ இந்த மேஜையை தூக்கினால் 100 ரூபாய் கொடுப்பேன்" என்று சொன்னால் முடியுமா? ஏன்? அவனைத் தாங்கிக்கொண்டிருக்கிறது மேஜை. ஆகவே நம் உயிருக்குள் உயிராக இருந்து நம் உயிரை இயக்குகின்ற பொருள் கடவுள் எப்படி இந்த மேஜை. அதன் மீது நிற்பவருக்கு ஆதாரமாக இருக்கிறதோ அதேபோல் நாம் உயிர்வாழ்ந்திருப்பதற்கு உள்ளே உயிருக்கு ஆதாரமாக இருப்பது கடவுள் அந்த உயிரை இந்த உயிர் அறிந்துகொள்ள முடியாது. இது நீங்கள் அனுமானிக்க வேண்டியதே தவிர ருசுப்படுத்த முடியாது.

'உள்ளத்தும்உளன், புறத்துளன் என்பார்க்கு
உள்ளத்தும்உளன் புறத்துளன் எம்மிறை.
உள்ளத்தும்இல்லை, புறத்துஇல்லை
என்பார்க்கு
உள்ளத்தும்இல்லை, புறத்தில்லை தானே'

எனத் திருமூலர் திருமந்திரத்திலே பாடியுள்ளார் உள்ளத்துக்குள்ளே இருக்கிறார் உள்ளத்துக்கு

வெளியிலும் இருக்கிறார் என்று நம்புபவர்களுக்கு அவர் அவ்வாறிருக்கிறார். உள்ளத்துக்கு உள்ளுமில்லை வெளியிலுமில்லை. என்பவர்களுக்கு எந்த இடத்திலும் இல்லை அப்படி ஒரு கூட்டம் இருக்கிறது. அவர்களுக்குக் கடவுளைப்பற்றிக் கவலையுமில்லை கடவுள் இல்லவுமில்லை. ஆனால் யார் இருக்கிறார். என்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு அவர் அகத்திலுமிருக்கிறார், புறத்திலுமிருக்கிறார். அதில் சந்தேகமே வேண்டாம்.

'உள்ளத்து கண்டாய், நன்னெஞ்சே உத்தமன்
உருகுவார் நெஞ்சத்து உளன் கண்டாய்'

என ஆழ்வார்கள் பாடுகிறார்கள். அவன் இருக்கிறான் உள்ளத்துக்குள்ளே இருக்கிறான்.

'வெள்ளத்தனையானும் வேங்கடத்து
நின்றானும்'

பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிறானே, அல்லது திருவேங்கடத்தில் நின்று கொண்டிருக்கிறானே அவனும் உள்ளத்து உளன் கண்டாய் யாருடைய உள்ளத்திலே? உருகுவார் உள்ளத்து உளன் கண்டாய். யார் ஒருவர் நினைக்கின்றார்களோ, அவர்கள் உள்ளத்திலே அவன் இருக்கிறான்.

'தேடிக் கண்டுகொண்டேன், திருமாலும்
நான்முகனும்
தேடிக் கண்டு கொண்டேன்'

இவ்வாறு திருநாவுக்கரசு சொல்லுகிறார்.

கடவுளைக் கண்டேன் என்று ஒரு ஆள் இருபதாம் நூற்றாண்டில் சொன்னார். இதே கேள்வியைக் கேட்டார். ஒரு B. A படித்த மாணவர் இராமகிருஷ்ண பரமஹம்சரிடத்தில் யார் அவர்? விவேகானந்தர்—அவர் நாஸ்திகர் —கடவுள் இல்லை என்று அதிக புத்தகங்களை எல்லாம் படித்தார். படித்து விட்டு ஒவ்வொருவரையும் கேட்டார் கடவுள் உண்டா என்று —அதே மாதிரி இராமகிருஷ்ணரிடத்திலே அவரைப் போகச் சொன்னார்கள் அவர் போனார்- இதே கேள்வியைக் கேட்டார். அவர் சொன்னார் 'ஓ' நான் பார்த்திருக்கிறேன். நீ என்னை எப்படிப் பார்க்கிறாயோ நான் உன்னை எப்படி பார்க்கிறேனோ அதே மாதிரி நான் கடவுளைப் பார்த்திருக்கிறேன்'' அவர் அடுத்த கேள்வி கேட்டார். ''கடவுளைக் காட்டுவீர்களா? 'ஓ' காட்டுவேனே, காட்
கிறேன்'' என்றார். அதற்கு பிறகு ந
நரேந்திரர் என்று இயற்பெயருள்ளவர், வி
கானந்தர் என்ற பெயர் சூட்டப்பட்டார். அ
இராமகிருஷ்ணபரமஹம்சருடைய சிஷ்யரான
கடவுளைக் கண்டார். அவர் கடவுளை
காட்டினார் மகாத்மா காந்தியின் ஜீவிய சரி
திரத்திலும் அவர் அதைத்தான் சொல்கி
ஆகவே கடவுளைக் கண்டவர்கள் எ
சமயத்திலும். கடவுள் உண்டு அவ
கண்டேன் என்று சொல்லும்போது அ
மறுப்பதற்கு நாம் யார்? இந்தப் பிரமாணத்
ஆகமப் பிரமாணம் அல்லது நூல் அள
என்று பெயர்.

பல சமய நூல்களிலே சமயத் தலைவ
தங்களுடைய அனுபவத்தை நூல் வாயி
நமக்குக் கொடுக்கிறார்கள். எப்படி தே
நதி லண்டனருகில் ஓடுகிறது என்பதை நூ
வாயிலாக நிலநூல் வல்லுனர் கொடுக்கிற
களோ, அது போல் கடவுளைக்கண்ட பெ
மக்கள் கடவுளைக் கண்டேன் என்று சொ
வதை நீங்கள் நம்பமாட்டோம் எ
சொன்னால் லண்டனுக்கருகில் தேம்ஸ்
ஓடவில்லை என்றுதான் பரீட்சையில் எ
வேண்டும் ஏனென்றால் நான் அதைப் பா
வில்லை—ஆகையால் தேம்ஸ் நதி என்று ஒ
இல்லை—உங்கள் டீச்சர் பெரிய Zero போட்
கொடுப்பார்கள் ஆகவே காணாததையெல்
இல்லை என்று மறுப்பது மூட்டாள்த
'உலகத்தார் உண்டு என்று சொல்வ
இல்லை என்று சொல்பவன் வையகத்
அலகையாய் வைக்கப்படும், என்றார் வள்ளு
உலகத்திலே அறிவுடையவர்கள் எல்
உண்டு என்று சொல்கிற ஒன்றை இல்லை எ
எவன் மறுக்கிறானோ அவன் இந்த உலகத்
பிசாசு என்கிறார் இது நான் சொல்லவி
—வள்ளுவர் சொல்கிறார் ஆகவே, 'அனை
உலகும ஆயஉன்னை ஐம்புலன்கள் காண்
—இன்றைக்கு என்ன பாட்டுப் பாடினீர்
'எங்கும் நிறைந்த பொருளே எவரும் கா
பொருளே'—உங்கள் கேள்விக்கு பதில் நீங்
சொல்லிவிட்டீர்கள்! எல்லோராலும் உ
கூடிய பொருள்—எல்லோராலும் அனுபவி
கூடிய பொருள்—ஆனால் அனுபவிக்காம
சாதாரணக் கிராமத்துப் பழமொழிப்ப
'தோசையைப் போட்டால், சாப்பிடுவா
துளையை எண்ணுவாயா?' — தோசை தட்
திலே துளை எண்ணுவதற்காகவா இருக்கி
தோசை சாப்பிட இருக்கிறது. ஆகவே

எப்படி அனுபவிக்க முடிகிறதோ, எப்படி இனிப்பை அனுபவிக்க முடிகிறதோ அதைப் போல அதைப்போல இறைவனை அனு-பவிக்க முடியும். இறைவனை அனுபவித்தவர்கள் தான் நமக்கு இவைகளையெல்லாம் சொல்கிறார்கள். ஆகையினாலே இறைவன் உண்டு என்று பிரத்தியட்ச பிரமாணத்தின் மூலம் நாம் சொல்ல முடியாது. கடவுள் இருக்கிறாரா என்று நம்மாலே காட்ட முடியாது. ஆனால் கண்டவர்கள் இல்லாமல் இல்லை. அவர்கள் கண்டதை முதலிலே அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதனால் அது நூல் அளவை அல்லது ஆகமப் பிரமாணம் என்பதற்குள் வரும். அனுமானப்பிரமாணம் என்று சொல்கிற போது இந்த உலகத்தையெல்லாம் நாம் பார்க்கும்போது, இந்த உலகம் சில நியதிகளுக்கு உட்பட்டு நடைபெறுகிற போது, எப்படி இந்த டேப் ரிகார்டரைப் பார்த்தவுடனே செய்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று அனுமானிப்பது போல, இப்பிரபஞ்ச முழுவதையும் பார்க்கும் போது இதை இயக்குகின்ற ஒரு தலைவன் இருக்கிறான் என்று நாம் கருதுகிறோம். வள்ளுவன்

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்
முதற்றே உலகு' என்கிறார்.

நீ ஆதிபகவனைப் பார்த்திருக்கிறாயா என்றால் 'அ' எப்படி ஒரு தனி எழுத்தாகவும் மற்ற எழுத்துக்களுடன் கலந்தும் வருவது போல இறைவன் தனியாகவும்இருக்கிறான் – அவன் எல்லா இடத்திலும் தங்கி அவைகளை இயக்கியும் வருகிறான் — என்ற பெரிய கருத்தை நமக்குக் கொடுப்பதற்காக, எடுத்த எடுப்பிலேயே அழகாக இதைச் சொல்லி வைத்தார். ஆகவே இந்த 3 பிரமாணங்களையும் நீங்கள் மனதில் கொள்ள வேண்டும் பிரத்தியட்ச பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம்—இவைகளை மட்டும் நான் இன்று சொல்லி நிறுத்துகிறேன் இதைக் கவனமுடன் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் காலையில் எழுந்து முகம் அலம்பிவிட்டு பவுடர் போடுகிறதற்காகக் கண்ணாடி முன்னால் போய் நிற்கிறீர்கள். ஆனால் உங்கள் முகமே தெரிவதில்லை. என்ன நடந்திருக்க வேண்டும்? கண்ணாடி-யில் உங்கள் முகமே தெரியவில்லை ஏன்? கண்ணாடி முழுவதும் தூசி. கண்ணாடியின் மேலே தூசி நிறையப் படிந்திருக்கிறதினாலே உங்கள் முகம் கண்ணாடியே தெரியவில்லை. ஆனால் அந்தத் தூசியைத் துடைத்து விட்-டால் முகம் தெரியும். ஏசுநாதர் இதைத்தான் சொன்னார் யார் ஒருவன் மனத்திலே மாசில்லாமல் இருக்கிறதோ அவர்கள் கடவுளைப் பார்ப்பார்கள் Blessed are the pure in heart for they shall see God இந்த உவமானத்தை நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ளலாம். தூசு படியாத கண்ணாடியிலே முகம் தெரியும். தூசு படிந்த கண்ணாடியிலே முகம் தெரி-யாது. அதே போல் மாசு படிந்த உள்ளத்-திலே கடவுளைக் காண முடியாது. மாசற்றார் உள்ளத்திலே அவன் வீற்றிருக்கிறான். ஆகவே நான் கடவுளைக் காண வேண்டுமென்று விரும்பினால் அவரை எங்கேயோ சென்று வெளியிலே தேட வேண்டிய அவசியமில்லை. உள்ளத்துக்குள்ளேயே அவன் இருக்கிறான்,

"ஓடி ஓடி, ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி, நாடி நாடி நாட்களும் கழிந்து
போய்
வாடி வாடி, வாடி வாடி மாண்டுபோன
மானிடர்
கோடி கோடி, கோடி கோடி எண்ணிறந்த
கோடியே"

பதினென் சித்தர்களிலே தமிழ்நாட்டு சித்தர் ஒருவருண்டு. அவர் பாடின பாட்டு இது. எங்கேயோ ஓடுகிறான்—காசிக்கு ஓடுகிறான் கைலாசத்திற்கு ஓடுகிறான். அங்கே, இங்கே எங்கெல்லாமோ ஓடி ஓடித் தேடுகிறான். ஆனால் இப்படி ஓடி, ஓடி அவன் எங்கே இருக்கிறான்? உட்கலந்த ஜோதியை — நமது உள்ளத்திலே அவன் ஜோதி வடிவமாக இருக்கிறான். ஆகவே அவனை முழு மனது-டன் நாம் தேடினோமேயானால் காண முடியும் இதைத்தான் நேற்றும் பார்த்தோம். வெளியிலே தேடினார்கள் நான்முகனும், நாராயணனும் காண முடியவில்லை அப்பர்

சுவாமிகள் 'நான் கண்டிருக்கிறேன்' என்றார். ''எப்படி?'' என்றபோது.

''திருமாலோடு நான்முகனும் தேடித்தேடி மாதேவனை என் உள்ளே தேடிக்கண்டு கொண்டேன்'' என்றார். ஆகவே நீங்கள் கடவுளைத் தேடிக் காண வேண்டுமென்று விரும்பினால் ஐம்புலன்களின் வழியாக ஓடுகிற மனதை உள்ளே இழுத்து, அதை அமைதிப்படுத்த வேண்டும். ஒரு குளத்திலே உங்கள் நிழல் நன்றாகத் தெரியும். முகத்-தைப் பார்க்கலாம். அதில் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டு விட்டால் அதிலுள்ள தண்ணீர் அசையும், ஆடும், முகம் பார்க்க முடியாது. அது போல சலனமற்ற, அசை-வற்ற சாந்தமான மனதிலே இறைவனைக் காண முடியும் என்பதை எல்லா சமயங்களும் ஒத்துக்கொண்டிருக்கின்றன. ஆகையினாலே அவன் உட்கலந்த ஜோதியாக இருக்கிறான். ஒருவன் சொன்னான், ''I don t believe in God. God is nowhere'' என்றான் இதைக் கேட்டுக்கொண்டிருந்தவன் சொன்னான், ' நீ சொல்கிறது right'' என்றான். எப்படி என்றால் ''God is now here'' நீ சொன்ன படியே கடவுள் இருக்கிறார் இங்கே'' இரணியன் அப்படித்தான் கேட்டான். அவன் அற்புதமான வரம் வாங்கிக்கொண்டு வந்தி-ருந்தான் சாகாத வரம் வேண்டும் என்றான். அந்தக் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். தன்னையே கடவுளாக்கிக் கொண்டு எல்-லோரும் தன்னை வணங்க வேண்டுமென்று சொன்னான். அவனுடைய மகனே இதை எதிர்த்தான். யாரது? பிரகலாதன் ''நாராயணா, நாராயணா'' என்றான். இவன் ஹிரணியநமோ என்றான். அதிகக் கோபம் வந்து விட்டது இரணியனுக்கு. மந்திரங்கள் எல்லாம் உச்சரித்துப் பார்த்தான் முடிய-வில்லை. கடைசியிலே அவனைக் கூப்பிட்-டனுப்பி ஒரு மண்டபத்திலே கேட்கிறான். ''நீசொல்லுகிற ஹரி எங்கேயிருக்கிறான்? சொல்'' அந்தச் சின்னப்பையன் சொன்னான். ''அவன் இல்லாத இடத்தைச் சொல்லு'' என்றான். ''நீ இருக்கிற இடத்ததச் சொல்கிறாயே, அவர் இல்லாத இடம் ஏதாவது இருக்கிறதா?''

''தொட்ட தொட்ட இடந்தோறும் தோன்றானாயின் ''நீ எங்கெங்கே போகிறாயோ அங்கெல்லாம் அவன் இல்லாது போனால் நானே என்னை மாய்த்துக் கொள்கிறேன். நீ என்னைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை 'அவன் தூணிலும் உளன், துரும்பிலும் உளன்.

கோணிறை சதகூறிட்ட, (அந்த ஆற்றலை நூறு பங்காக உடைத்தால் அதற்குக்கோன் என்று தமிழிலே பெயர்) அதற்குள்ளேயும் இருக்கிறான் ஆகையால் அவன் இல்லாத இடமே இல்லை என்றான். உடனே ஒரு கேள்வியைப் போட்டான். ''இதோ இந்தத் தூணிலே இருக்கிறானா?'' என்றான் இந்த வாக்குவாதம மண்டபத்-திலே நடந்தது ''இருக்கிறானே'' என்றான். பிறகுதான் தன்னுடையை கதையினாலே தூணை உடைத்தான். உள்ளேயிருந்து என்ன வந்தது? நரசிம்ம அவதாரம் வந்தது. ஆகையினால் அவன் தூணிலும் உளன், துரும்பிலும உளன் எங்கேயும் அவன் இருக்கிறான் அவன் இல்லாத இடமே கிடையாது.

தாகூர் சொல்கிறார் அழகாக அவர் கீதாஞ்-சலியைப் படித்துப் பார்த்தீர்களானால்,

''எங்கேயப்பா ஓடுகிறாய் கோவிலுக்கு? யாரைத்தேடி ஓடுகிறாய்? இங்கே பார் கல்லை உடைத்துக்கொண்டிருக்கிறான், 12 மணி வெயிலிலே - அவன் முகமெல்லாம் வியர்வை கீழே சொட்டுகிறதே அவனைக் கடவுள் என்று நீ நினைக்கவில்லையா? அங்கே இருக்கிறான் கடவுள் என்று அதோ உழு-கிறானே தோட்டத்திலே காட்டுக்குள்ளே — அந்த உழுது கொண்டிருக்கிற உழவனிடத்-திலே இருக்கிறான் கடவுள். ஆகவே கடவுளைத் தேடி நீங்கள் எங்குமே ஓட வேண்டியதில்லை. அவர் எங்குமிருக்கிறார் அந்தக் கடவுள் அவருக்குச் சேவை செய்வது என்பது மக்களுக்குச் சேவை செய்வது. அதன் மூலமாகவே நீங்கள் கடவுளைக் காணலாம். வெறும் ஆடம்பரமான சடங்கு-களின் மூலமாகக் காண முடியாது பட்டை பட்டையாக விபூதி அடித்துக் கொள்ளலாம். 1 ரூ அகலத்துக்கு சந்தனப்பொட்டு. அதற்கு மேலே குங்குமப்பொட்டு, 108 உருத்திராட்சம், கட்டுக்கட்டாக கையெல்லாம் விபூதி,

சிவபூஜை — சும்மா 1 மணி நேரம் மணி அடிப்பார்கள் — அப்படி சிலபேர் மோட்சத்-துக்குப் போகலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிவபக்தர் அப்படிப்பட்டவர்களைச் சொல்கிறார். "நீற்றைப் புனைந்து என்ன? (அதற்காக விபூதி வைக்க வேண்டாமென்று அவர் சொல்லவில்லை. அந்த வெளிச் சடங்கி-னாலே மட்டும என்ன என்று கேட்கிறார்) நீராடப் போய் என்ன? (கங்கையிலும், காவிரியிலும், மற்ற இடங்களிலும்) மனம் மாற்றிப் பிறக்க வகையறிந்தாயிலை. அங்கே தான இரகசியம மனம் மாற்றிப் பிறக்க வேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார் நமக்குள்ளே என்றால் எந்த நிமிடமும் அவர் நம்மைப் பார்த்துக்கொவடே இருக்கிறார்.

அழகான வேலைக்காரி — எஜமான் கெட்டவன். வீட்டிலே அந்த அம்மாள் போய் விட்டாள் வெளியே வேலைக்காரி மட்டும் அறையைக் கூட்டிக் கொண்டிருந்தாள். திடீரென்று தாழ்ப்பாள் போட்டான். வேலைக்காரிக்கு ஒன்றும் புரியவில்லை, அவன் சொன்னான், "யாருமில்லை, நாம் எது செய்தாலும் யாரும் பார்க்க மாட்டார்கள்" என்றான். உடனே வேலைக்காரிக்கு ஒரு யுக்தி தோன்றியது. 'அப்படியா? நம் இரண்டு பேரையும் யாரும் பார்க்க மாட்டார்களென்று நீ சொல்கிறது சரி. நம் இரண்டு பேருக்குள்ளேயும் இருந்து ஒருவன் பார்க்கி-றானே? அது உனக்குப் புரிகிறதா?" என்று கேட்டாள். அப்படியே வெட்கப்பட்டுக் கதவைத் திறந்தான் நாம் அப்படித்தான் நினைக்கிறோம் நாம் மறைவாக எது செய்-தாலென்ன? யார் நம்மைப் பார்க்கிறார்கள்? ஒருவரும் பார்க்கிறதில்லை. அவர் திருப்பதி-யில் இருக்கிறார், இன்னொருவர் மெக்காவில் இருக்கிறார், இன்னொருவர் ஜெருசலேமில் இருக்கிறார். இன்னொருவர் பழனியில் இருக்கிறார் அப்படியா இருக்கிறார்? இல்லையே"

"கூடும் நானே முதலாக, கூறுகளும்
எல்லாம் நீ
தேடும் வகை நீ திகைப்பு நீ. தீமை
நன்மை முழுதும் நீ

எல்லாம் நீயாயிருக்கிறாய் என்றுதானே பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மல-ரைக் கொய்யப் போகிறேன் பூஜைக்கு — மலரைக் கொய்யப்போகும போது ஒரு எண்ணம் வருகிறது.

"பண்ணே னுனக்கன்பான பூஜையொரு
வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி

(பூபதி எடுத்துப்போட்டு உனனைக் கும்பிட-லாம் ஒரு உருவத்திலே என்று மலரை எடுக்கி றேன்; ஆனால் பார்க்கின்ற மலரொடு நீயே இருத்தி)

"அப்பனி மலர் எடுக்க மனமும்
நண்ணே னலாமலிரு கைதான் குவிக்க
வெனில்"

கையெடுத்துக் கும்பிடும்போது வெளியிலிருப்-பதைக் கும்பிடுவதாக அர்த்தம்) ஏன்? — "நானும் என் உள நிற்றி நீ" நீ உள்ளே இருக்குமபோது நான் வெளியில் யாரைக் கும்பிடுவது! பூவைப் பறித்துக் கும்பிடலா-மென்றால் அந்தப் பூவுக்குள் நீ இருக்கி-றாயே?

"பார்க்கும் மலரெலாம் ஆனாய் நீயே, தேசு
விளக்கெலாம் ஆனாய் நீயே"

என்று பெரியவர்கள் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற ஒரு பொருளாகத்தான் கடவுளைக் காண்கின்றார்கள், அவர் ஏதோ பழனியில் இருக்கிறார், மதுரையில் இருக்-கிறார். இன்னொரு இடத்தில் இருக்கிறார் என்பதல்ல. குருநானக் ஒரு நாள் மேற்குப் பக்கமாகக் காலை நீட்டி உட்கார்ந்திருந்தார். இது நடந்தது சாணக்கியனுடைய சரித்திரத்-திலே. உடனே ஒரு முஸ்லீம் வந்தார். முஸ்லீம்களையும், இந்துக்களையும் ஒன்று படுத்த சீக்கிய மதத்தை உண்டாக்கினவர் நானக் வந்த முஸ்லீம் கோபித்துக் கொண்-டார். மேற்குப் பக்கம் மெக்கா இருக்கிறது அது நபி நாயகத்தின் புனித ஊராயிற்றே. அந்தப் பக்கம் காலை நீட்டி உட்கார்ந்திருக்-கிறீர்களே" என்றார். அதற்கு அவர் கடவுள் இல்லாத இடத்தைச் சொல்லு காலை நீட்டுகிறேன்" என்றார். கடவுள் இல்லாத இடம் என்று ஏதாவது இருக்கிறதா? நமக்கு, முக்கியமாக வேண்டியது இதுதான் மனம் மாற்றிப் பிறக்க வேண்டும்.

ஏட்டைக்கெடுக்கும் ஏழுகோடி மந்திரம் எதுக்கடா சில பேர் ஏழுகோடி மந்திரங்கள் ஜெபித்துக் கொண்டிருப்பர். சாமியை அப்படியா தேடுவது?

'ஆற்றைக் கடந்து துறை தெரியாமல் அலைகின்றாயே' என்றார். ஆற்றுக்குள்ளே கிடக்கிற நீ கரையேற வழி தெரியவில்லை. அப்படியிருக்கிற நீ நீற்றைப் புனைந்தென்ன? நீராடிப் போயென்ன? நீ மனமே மாற்றிப் பிறக்க வகையறிந்தாயே ஆகையினால்தான் கடவுள் எங்கே இருக்கிறார் என்ற கேள்விக்கு பதில்? அவர் எங்கும் இல்லை. அவர் எங்கும இருக்கிறார். அவர் இல்லாத இடம் ஒன்றுமேயில்லை. ஆனால் மறைந்திருக்கிறார். 'உள்ளத்தில் நிற்றியேனும், உயிர்க்குள்ளே, நிற்றியேனும் கள்ளத்தில் நிற்றியம்மா, எங்ஙனம் காணாமாறே?' நீ உள்ளத்திலும் இருக்கிறாய். இந்த மூச்சு இருக்கிறதே- உயிர்ப்பு. அந்த உயிருக்கு உயிராகவும் இருக்கிறாய் இருந்தாலும் 'கள்ளத்தில் நிற்றி' என்றார். எனக்குத் தெரியாமல் உள்ளே மறைந்திருக்கிறாய் ஆகையினாலே நான் உன்னை எப்படிப் பார்ப்பேன்? பார்க்கிறதற்கு அழகாக ஒரு வழி சொல்லியிருக்கிறார் ஒருவர் விறகிலே தீ இருக்கிறது என்று சொன்னார், பாலிலே நெய் இருக்கிறது என்று சொன்னார். மணியிலே, இரத்தினத்திலே ஒளி இருக்கிறது என்று சொன்னார். ஆனால் அதை வெளிக்கொண்டு வரவேண்டும். அதற்கு வழியும் சொன்னார்.

'உறவுகோல் நடு' — என்ன அர்த்தம்? பழைய காலத்திலே, Electric Light இல்லை. எதைக்கொண்டு தீயை வெளியேற்றினார்கள் மரக்கட்டையிலிருந்து? அதற்கு தீக்கடைக் கோல் என்று பெயர். தீ + கடை + கோல் அது ஒரு குச்சி. அதில் ஒரு கயிறு கட்டியிருக்கும். அதை மரக்கட்டையில் வைத்து இழுப்பார்கள், நடுவில் பஞ்சை வைத்து அப்படி இழுக்க, இழுக்க சூடு ஏறும். அந்தப் பஞ்சிலே நெருப்புப் பிடிக்கும். அந்த வகையிலேதான் பழைய காலத்திலே தீ மூட்டினார்கள், தீக்கடைகோல் கொண்டு. ஆகவே ஒரு குச்சி - அதற்குக் கோல் என்று பெயர். பின்னர் ஒரு கயிறு - அதே மாதிரிப் பாலைப் புரை போட்டுத் தயிராக்கி அதை என்ன செய்வார்கள்? மத்தை வைத்துக் கடைகிறார்கள். அங்கேயும் ஒரு கோலுண்டு, கயிறுண்டு. அதே மாதிரி இந்த வைரங்களுக்குப் பட்டை போடுகிற இடத்திலே போய்ப் பார்த்தால் அங்கே ஒரு வளைந்த கோல் இருக்கும். அதிலே ஒரு கயிறு கட்டியிருக்கும். ஒரு சாணைக்கல் இருக்கும். கடையும்போது சக்கரம் ஓட ஓடப் பட்டை போடுவார்கள். ஆகவே மூன்றுக்கும் ஒரு கோலும், கயிறும் வேண்டும். அதைத்தான் அழகாகச் சொன்னார்.

'உறவுகோல் நடு' — நம்முடைய உறவுகோல் வெவ்வேறு இடங்களில் இருக்கிறது. கடவுளிடத்திலே உறவு நம்மிடத்தில் இல்லை. அந்தக்கோல் வேண்டும் என்று அடிகள் சொன்னார். உன் அம்மா தயிர்ப் பானையிலே ஒரு சாண் உயரத்திலே தயிருக்கு மேலே அந்தக்கோலை வைத்துக் கொண்டாள். கடைகிறாள் வெண்ணெய் வருமா? ஏன்? தயிர்க்குள்ளே இல்லை அது. ஆகவே உள்ளே இருக்க வேண்டும். அந்த உறவு அவ்வளவு நெருங்கின உறவாக வேண்டும் Connection இல் ஏதோ தப்பு. ஆகவே மைக் வேலை செய்யவில்லை,

> 'When man listens, God speaks
> When man follows God leads'

மனிதன் கேட்கத் தயாராக இருந்தால் கடவுள் பேசுவார். ஏன் கடவுள் பேசவில்லை என்கிறாய் — நீ கேட்கவில்லையே? கடவுளுக்கு அல்லவா நீ dictate பண்ணிக் கொண்டிருக்கிறாய்? எனக்கு ஒரு பட்டுப் புடவை, கண்டிப்பாகக் கடவுளே வாங்கிக் கொடு. எனக்கு examination இல் 80 மார்க் வாங்கிக்கொடு. நீ dictate பண்ணுகிறாய் கடவுளுக்கு — இன்னின்னவெல்லாம் செய், செய் என்று அவரைப் பேசவே விடமாட்டேனென்கிறாய். அதனாலே கடவுளோடு பேசினவர்கள் சொல்கிறார்கள். "When man listens, God speaks" "கடவுளே, நான் இதைப் பண்ணுகிறேன், இங்கே வா" என்று கடவுளுக்கு ஒரு உத்தரவு — "போகிற இடமெல்லாம் body guard மாதிரி வந்துகொண்டே இரு" என்று. ஆனால் நாம் என்ன செய்ய வேண்டும்?

...en man follows, God leads எனக்கு ...றும் வேண்டாம். நீ எந்த வழியில் என்னை நடத்துகிறாயோ, அந்த வழியில் நான் வரத்தயாராக இருக்கிறேன். ஆகையாலே என்னை வழி நடத்தும். அப்படிப் பாடுகிறோமல்லவா – ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனையில் – வழி நடத்தச்சொல்லி. அந்த இரண்டும் நமக்கு இருக்குமேயானால் ...டிப்பாகக் கடவுள் பேசுவார். நம்மிடத்திலே அப்படித்தான் காந்திஜி பேசினார். எல்லா சமயத் தலைவர்களும் கடவுளோடு பேசினார்கள் என்று சொன்னால் அந்த இடத்திலே அவர்களுக்கும் கடவுள் தங்கள் உள்ளத்தில் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்டார்கள். The still small voice of God என்று காந்திஜி சொல்கிறார். ரொம்ப மெதுவான ஒரு சப்தம் உள்ளே கேட்கும் அது தான் என்னை வழி நடத்திற்று என்று சொல்கிறார். ஆகையினாலே இந்த அளவிலே கடவுள் உண்டு. அவர் எங்குமிருக்கிறார். அவர் இல்லாத பொருளே இல்லை. 'இறை' என்றால் தங்கியிருப்பவர் என்று அர்த்தம் அதனாலே கோவிலில் தான் இருக்கிறார் என்று சொல்லி – அழகாக வினோபாஜி கேட்டார். 'கல்லிலே கடவுளைக் காண்கிற மனிதன், மனிதனிலே கடவுளைக்காண மறந்து விட்டானே' என்கிறார். கல்லிலே கடவுளைப் பார்க்கிறோம். நாம் கோவிலிலே, ஆனால் மனிதனிலே கடவுளைப் பார்க்கிறோமா? பார்க்க மறந்து விடுகிறோம். அது அதிக தவறு கடவுள் உண்மையான சொருபத்தில் இருப்பது மக்களிடத்தில் தான். அவர்களுக்குச் சேவை செய்ய நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எனவே, கடவுள் எங்குமிருக்கிறார். எல்லா இடத்திலும் இருக்கிறார் அவர் தவிர வேறொன்றுமில்லை. 'ஏகம் சத், சித்ரா பஹீதா வதந்தி' ஏகம் சத் — உண்மைப்பொருள் ஒன்று தான் — ஆனால் கற்றவர்கள் அதைப் பல பல விதமாகச் சொல்கிறார்கள். அல்லா என்கிறார்கள். பரம பிதா என்கிறார்கள். சிவன் என்கிறார்கள். விஷ்ணு என்கிறார்கள் எந்தப்பெயர் வைத்து அழைத்தாலும் சரி. ஏகம் சத் – தண்ணீர் Water. நீரு, வெள்ளம், aqua எல்லாம் ஒன்று தான். ஆனால் பேர் மட்டும் வெவ்வேறு.

ஜிலேபி செய்து வைத்திருக்கிறாள் உங்கள் அம்மா, இதுவரை நாம் ஜிலேபி செய்தோம். ஜிலேபிக்கு எவ்வளவு மாவு போடவேண்டும், எவ்வளவு சர்க்கரை, குங்குமப்பூ போடவேண்டும். இதெல்லாம் போட்டு அழகாக ஜிலேபி செய்தாகி விட்டது அப்புறம் என்ன செய்ய வேண்டும்? ஜிலேபியைத் தட்டிலே வைத்துக் கொண்டு ஒரு பெரிய discussion – இந்த ஜிலேபி எதை எதை வைத்துச் செய்தது, எப்படி ஆனது அப்புறம் தட்டிலே வைத்துப் போய் விடவேண்டும். இவ்வளவு தானா? இல்லையே, ஆகவே கடவுள் யார்? எங்கேயிருக்கிறார், எப்படிக் காணலாம் என்பதை எல்லாம் ஜிலேபியை எப்படிச் செய்கிறது என்பதுதான் அதைப்பற்றியெல்லாம் அறிந்து கொண்டாயிற்று எதுக்கு நாம் ஜிலேபி செய்கிறோம், சாப்பிட. ஆகவே இறைவனைப் பற்றித் தெரிந்துகொள்வதில் பிரயோஜனமில்லை கொஞ்சம் தெரிந்து கொண்டாலும் இறைவனை நான் நேற்று சொன்னதுபோல அனுபவிக்கத் தெரியவேண்டும் அனுபவிக்க வேண்டும். இறைவனை அனுபவிப்பது எப்படி என்பதை அப்புறம் பார்க்கலாம்.

---

## சர்வோதயப் பிரார்த்தனையின்போது உயர்திரு. "ஐயா" அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு. 2—3—'69 (ஒலிப்பதிவு)

இன்று இரண்டு முக்கியமான விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். ஒன்று குரானில் இருந்து சொல்லப்பட்ட விஷயம். அதை ஒட்டியே 'பாபு என் தாய்' என்ற நூலில் இருந்து உங்கள் சகோதரி பேசிய விஷயம் கல்வி எதற்கு என்பதை மிக அழகாகக் குரானிலிருந்து அவர்கள் எடுத்துக்காட்டினார்கள் உண்மை

-யான கல்வியாக இருக்க வேண்டுமானால் அது பரீட்சைக்காக மட்டும் இருக்கக் கூடாது. உத்தியோகத்திற்கு மட்டும் இருக்கக்கூடாது. பட்டத்திற்கு மட்டும் இருக்கக் கூடாது. என்ற கருத்தை நீங்கள் மனதில் நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். படிப்பினாலே உத்தியோகம் பெறலாம். பட்டம் பெறலாம். ஆனால் உத்தியோகத்திற்-கும் பட்டத்திற்கும் படிப்பது படிப்பல்ல. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

'கல்வி' என்று சொல்லுகிறபோது மனிதனுக்குள்ளே மறைந்திருக்கின்ற சிறந்த பண்புகளை, குணநலன்களை வெளியிலே கொண்டு வருவது தான் 'கல்' என்ற சொல்லே. 'தொண்டு' என்ற பொருளை உடையது நிலத்தைக் கல்லினான் என்றால் தோண்டினான் என்று பொருள். ஆகவே நமக்குள்ளே மறைந்திருக்கின்ற சிறந்த பண்புகளை வெளியே கொண்டு வருவது தான் சிறந்த கல்வி. கல்வி புத்தகத்திற்குள் தான் உண்டு என்பதை நீங்கள் மறந்து விட வேண்டும். புத்தகமும் ஒரு துறையிலே கல்வியை வளர்ப்பது. ஆனால் புத்தகத்திற்குள் தான் கல்வி என்பது தவறு வாழ்க்கை முழுவதுமே கல்வி தான். தொட்டிலிலுள்ள குழந்தையிலிருந்து மரித்துப் போகும் வரைக்கும் மனிதன் கல்வி கற்றுக்கொண்டே இருக்-கிறான். அப்படிக் கற்றுக்கொள்வது தான் உண்மையான கல்வியாகும். அது உங்களுக்கு நண்பனாக வாழ்க்கையின் வழிகாட்டி-யாக, உங்களை முன்னேற்றுவதற்காக, உங்களுக்கு இன்பம் நல்கக் கூடியதாக எல்லாவகையிலும் பயன்பட வேண்டுமானால் இந்த உண்மையான கல்வியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காந்திஜி Bar-at-Law பட்டம் பெற்றார். ஆனால் தான் வழக்கறிஞர் என்ற பட்டத்தை அவர் போட்டுக்கொண்-டதே கிடையாது. தான் ஒரு Bar-at-law என்று பேச்சிலோ, எழுத்திலோ வெளியிட்-டதே கிடையாது அது ஓர் உபாதை என்று சொன்னார். 'உபாதை' என்றால் 'தொல்லை' என்று பொருள். ஆகவே இந்தப் பட்டங்கள் எல்லாம் மனிதனுக்கு கஷ்டம் தருவது. மகாத்மாவை ஒரு இடத்திலே ஒரு முறை 'உங்களுக்கு மிகவும் வேதனையைத் தருவது எது' என்று கேட்டார்கள். காந்திஜி உடனே, "படித்தவர்கள் கொஞ்சங்கூட இரக்கமில்லாதிருப்பதைப் பார்த்து மிகவும் வேதனைப் படுகிறேன்" என்றார். ஆகவே படிப்பு உள்ளத்திலே இருக்கும் பண்புகளை மறைந்து கிடப்பவைகளை வெளிக்கொணர வேண்டும். ஒரு விதைக்குள்ளே அடங்கிக் கிடக்கிற உயிர்ச்சத்தை மரமாக்கித் தருவது போல.

நாம் இங்கு ஒரு குழாய்க்கிணறு போட்-டோம். அதில் நீர் நிறைந்து இருப்பதாகச் சொன்னார். அது வெளியே தெரியவில்லை ஆனால் தோண்டும்போது எழுபது அடியிலே தண்ணீர் வந்தது. 100 அடி போனபோது நிறைய தண்ணீர் கிடைக்கிறது. அதைக் கல்வி எடுத்தபோது நிறைய தண்ணீர் கிடைத்தது. அது போல நீங்கள் எல்லாம் ஆன்மாக்கள்—இறைவனின் பிரதிபிம்பங்கள் உங்களுக்குள்ளே ஆன்மாவின் சக்தி நிறைந்து இருக்கிறது அதற்கு ஆன்மசக்தி என்று சொல்கிறோம். அந்த ஆன்மசக்தியை வெளிப்படுத்துவது தான் கல்வியே தவிர, நான் முன்பு கூறியதுபோலப் பதவி பட்டத்-திற்காக அல்ல. ஆகவே உண்மையான கல்வி வேண்டுமானால் உங்கள் நாட்டம் மற்ற விஷயங்களிலும் போக வேண்டும். வாழ்க்கையில் திருத்தியமைத்துக் கொள்வ-தற்கு எது எது தேவையோ அதைக் கல்வியென்ற முறையில் பெறத்தயாராக இருக்க வேண்டும். ஆகையினால்தான் பாடப்புத்த-கம் ஒன்றிலேயே நீங்கள் கவனம் செலுத்தக் கூடாது. பாடப்புத்தகம் இன்றியமையாதது நீங்கள் பரீட்சை எழுத வந்திருக்கிறீர்கள். நீங்கள் தேர்வு பெறமுடியாமல் போனால் பணமும் போகும், ஒரு வருடமும் வீணாகும் ஆகவே அதுவும் வேண்டும். நிறைய நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். வீணான புத்தகங்களை வாசிக்காதீர்கள். எந்தக் காலத்திலும் — இப்போது மட்டுமல்ல — பின்னாலும் கூடத் தகாத புத்தகங்கள், சிந்தனையைக்கெடுக்கும் புத்தகங்கள், உள்-ளத்தைப் பாழாக்கும் புத்தகங்களைத் தொடக் கூடாது. எப்படி ஒரு தேளையோ, பாம்பை-யோ நாம் தொடமாட்டோமோ, அதுபோல நாம் விரும்பத்தகாத புத்தகங்களைத் தொடக் கூடாது. நாத்திகத்தை பேசும் புத்தகங்கள், ஒழுக்கத்தை கெடுக்கும் புத்தகங்கள்

நீங்கள் கையில் தொடக்கூடாது நெருப்பில் போடவேண்டும். இதை நீங்கள் உங்கள் வாழ்க்கை முழுவதும் நினைத்துக் கொள்ளுங்கள்.

பைபிளிலிருந்து வாசிக்கப்பட்ட பகுதி நீங்கள் ஊன்றி சிந்திக்க வேண்டிய பகுதி. கடவுளின் திருக்குமாரனாக இயேசு நாதர் இவ்வுலகத்தில் வந்தார். அவருக்கு சிஷ்யர்களாக 12 பேர் சேர்ந்தார்கள். அவர்கள் பெரிய கோடீஸ்வரர் அல்ல. படித்துப்பட்டம் பெற்றவர்களும் அல்ல. பெரிய பல்கலைக்கழகங்களில் தேர்ச்சி பெற்றவர்களும் அல்ல. அவர்கள் சாதாரணமாக வாழ்க்கையிலே தொழில் செய்து கொண்டிருந்தவர்களையெல்லாம் கூப்பிட்டு சிஷ்யர்கள் ஆக்கினார். கடைசியிலே தனக்கு இந்த உலகத்திலே இருந்து போக வேண்டிய காலம் வந்தது என்று தெரிந்தவுடனே அவர் செய்ததைத்தான் நீங்கள் கேட்டீர்கள். தன் சட்டையை மாற்றிக்கொண்டு ஒரு துண்டை எடுத்துக் கட்டிக்கொண்டு சிஷ்யர்களின் கால்களைக் கழுவினார். பின் தன் வஸ்திரத்தாலேயே கால்களைத் துடைத்தார். இது ஒரு வேடிக்கையான விஷயம் அல்ல. கடவுளின் திருக்குமாரனாக வந்தவர், சாதாரண மனிதராகச் சேர்ந்தவர்களின் கால்களைக் கழுவினார். அவர்கள் செய்யக்கூடாது என்று மறுத்ததையும் நீங்கள் கவனித்திருப்பீர்கள். "நான் உங்களுக்கு முன்மாதிரியாக இல்லாமல் போனால் நீங்கள் எப்படி என்னைப் பின்பற்றுவீர்கள்? ஆகவே எது எது நான் உங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேனோ அவைகளை நான் செய்கிறேன்" என்றார்.

உங்கள் தாய் தகப்பனாரை ஒரு நாள் கும்பிடுங்கள் என்று சொன்னால் ஏதோ ஒரு பாதகத்தைச் செய்யச் சொல்வதைப்போல் மறுக்கிறீர்கள். ஒரு பள்ளியிலே பேசினேன். அங்கே 300, 400 பையன்கள் இருந்தார்கள். அது கஸ்தூரிபா நினைவு நாள். "நாளைக்கு 'நீங்கள் உங்கள் பெற்றோரை வணங்க வேண்டும் எத்தனைபேர் வணங்கத் தயாராக இருக்கீறீர்கள்"? என்று கேட்டேன் 6, 7 பேர் தான் கையை உயர்த்தினார்கள். என் பக்கத்திலிருந்த நண்பர், "மறுபடியும் நன்றாக விளக்கி விட்டுக் கேளுங்கள்" என்றார். நானும் மறுபடியும் நன்கு விளக்கி விட்டுக் கேட்டேன். அப்பொழுதும் பாதிப் பிள்ளைகள் தான் கையைத் தூக்கினார்கள் இந்த அளவிற்கு நமக்கு வணக்கமில்லை. பெற்றோர் நமக்காக எத்தனை பாடு பட்டார்கள்? நாம் சிந்தித்துப் பார்த்தோமா அதை? தாய்க்கு வணக்கம் செலுத்த குழந்தைகள் மறுக்கிறார்கள். பின் எங்கேயிருந்து நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்? கடவுளுடைய திருக்குமாரனே அதைச் செய்தார் என்றால் அவரைப் பின்பற்றுகிறவர்கள் அதைச் செய்ய மாட்டார்களா? மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கையிலும் பார்க்கிறோம். எதை அவர் மற்றவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்பினாரோ அதை அவர் செய்தார். கக்கூஸ் கழுவ வேண்டும் என்றார். அதை முதலில் அவர் செய்தார். பிறகு தான் மற்றவர்களைச் செய்யச் சொன்னார். ஒவ்வொரு செயலிலும் நாம் பார்க்கலாம். பெரியவர்கள் சொல்லி விட்டு மட்டும் போகவில்லை. செய்து காட்டினார்கள். உலகம் அப்போது தான் பின்பற்றும் என்று. அந்த வழியை நாம் பின் பற்றத் தயாராய் இருக்க வேண்டும். வெறும் உதட்டளவில் நாங்கள் இந்துக்கள், நாங்கள் கிறிஸ்தவர்கள், நாங்கள் முஸ்லீம்கள் என்று சொல்லிக் கொள்வதில் பயன் இல்லை. ஒவ்வொரு சமயத்திலும் மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய பாதையில் சென்றால் தான் நமக்குப் பிரயோசனமே தவிர மற்றபடி அல்ல.

மெக்காவிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார் முகமது நபி. மெதினாவுக்கு வந்தார். கூட ஒரே ஒரு தோழர், அபுபக்கர் மட்டும் தான் வந்தார். மெதினாவில் இருக்கும் போது அபுபக்கர் "நாம் இரண்டு பேர் தானே இருக்கிறோம்? நம்மைத் துரத்தி விட்டார்களே" என்று கேட்டார். ஏன? 3 பேர் இருக்கிறோமே? மறந்து விட்டாயா" என்று கூறினார் நபி. விழித்தார் அவர் "நாம் இருவர். கடவுள் ஒருவர் மூன்றாவது ஆள்" என்றார் நபி. ஆகவே எந்தக் கஷ்டம் வந்தாலும் கடவுள் ஒருவர் இருக்கிறார். என்பது தான் அவர்கள் காட்டிய வழி.

நீங்கள் தாய், தகப்பனை நேசிக்காமற் போனால் உலகத்தாரை எப்படி நேசிப்பீர்கள்? தாய் தகப்பனாரின் கால்களைக் கழுவ நீங்கள் கூச்சப்படுவீர்களானால் ஒரு குஷ்டரோகியின் ரணத்தை எப்படி நீங்கள் கழுவுவீர்கள்? அதையெல்லாம் காந்தியும் செய்தார். இயேசுநாதரும் செய்தார். நாம் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காகச் செய்து காட்டினார்கள். ஆனால் நமக்கு, நம் பெற்றோர்களுக்கு ஒரு கஷ்டம் வந்தால், வியாதி வந்தால் அதைக் கவனிக்க அருவருப்பு தோன்றுகிறது. அந்த அருவருப்பு போக வேண்டும்.

ஒரு நாள் ஒரு பக்தன் தெருவில் நடந்து கொண்டே போனார். அவருக்குப் பின்னால் அவருடைய சிஷ்யர்கள் வந்தார்கள். ஒரு ஒடுக்கமான சந்து, அதிலே போய்க் கொண்டிருக்கும்போது இரண்டு பக்கங்களிலும் மலஜலம் கழித்திருந்தமையால் மூக்கைப் பிடித்துக்கொண்டனர் சிலர். காறிக்காறி உமிழ்ந்தனர் சிலர். சிலர் பெரிய அட்டகாசமும் அமளியும் பண்ணிக்கொண்டு வந்தனர். அவர் நின்றார் குரு ஏன் நிற்கின்றார். என்று சிஷ்யர்கள் பார்த்தார்கள். குரு இரு புறமும் பார்த்தார். பார்த்துவிட்டு சொன்னார், "நேற்று கடையிலே தட்டங்களிலே எவ்வளவு கண்ணுக்குக் கவர்ச்சியாகப் பார்த்தவுடனே நாவிலே ஜலம் ஊறும் வகையாக நீங்கள் ஆப்பிள் பழமாக, ஆரஞ்சுப் பழமாக, ஜிலேபியாக, அல்வாவாக இருந்தீர்கள். இந்தப் பாழான மனிதனுடைய வயிற்றிலே ஓர் இரவு தங்கினீர்கள். அந்த மனிதன் உங்களைக் காறி உமிழ்கிற அளவுக்கு ஆகிவிட்டதே!" என்றாராம். ஆப்பிள் பழம் பார்த்தால் அவன் நாவில் ஜலம் ஊறுகிறது ஜிலேபி பார்த்தால் ஆகா கிடைக்காதா? என்று பார்க்கிறான். அந்த ஜிலேபியும் ஆப்பிள் பழமும் மனிதனுடைய வயிற்றுக்குள்ளே போனவுடன் காறி உமிழ்கிறாற் மலம் என்று சொல்லி அந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்தது யார்? மனிதன் பகவத்கீதை படிக்கும் போது 'சமதிருஷ்டி' என்ற ஒரு வார்த்தை வருகிறது. சமநோக்கு வேண்டும் இன்பத்திலும், துன்பத்திலும், உயர்விலும், தாழ்விலும், வெள்ளை நிறமோ, சிவப்பு நிறமோ, இந்துவோ முஸ்லீமோ யாரையும் சம திருஷ்டியுடன் பார்ப்பதுதான் உயர்ந்த நிலை. அவன் தாழ்ந்தவன் இவன் உயர்ந்தவன், அவன் என் இனத்தான், இவன் வேற்று இனத்தான், அவன் என் மொழி பேசுகிறவன், இவன் வேறு மொழி பேசுகிறவன், என் நாட்டான் பிற நாட்டான் இந்த வேறுபாடு இருக்கிற வரை மனிதன் முன்னேற முடியாது. சேவையிலே நாம் எவ்வளவு தாழ்ந்து சேவை செய்கிறோமோ அவ்வளவு தூரம் தாழ்ந்து சேவை செய்ய வேண்டும்.

பூஜ்யத்திலிருந்து பூஜ்யம் போனால் என்ன? பூஜ்யம் - பூஜியத்தை பூஜ்யத்தால் வகுத்தால் பெருக்கினால் - பூஜ்யம் காணாமல் போய்விடுகிறதா? பூரணத்திலிருந்து பூரணம் வந்தது. அப்போதும் பூரணம் இருந்தது என்பதன் பொருள்தான் அது. ஆகையால் இறைவன் ஒருவன்தான் பூரணப்பொருள். அதிலிருந்து நீங்கள் எவ்வளவு பிரித்துப் பிரித்து எடுத்தாலும் பூரணமாய் இருக்கும். நம்மெல்லாம் பூஜ்யம். ஒன்றைப் போட்டு பூஜ்யத்தைப் போட்டால் 10 ஆகிறது. அப்புறம் ஒரு பூஜ்யம் போட்டால் 100. பூஜ்யத்திற்கு எதனால் மதிப்பு வந்தது அந்த ஒன்றினால் தான். அந்த ஒன்று யார்? அது இறைவன்.

---

## 19—10—1968 அன்று நடைபெற்ற தீபாவளி விருந்திற்குப் பின் உயர்திரு. 'ஐயா' ஆற்றிய உரை. (ஒலிப்பதிவு)

அன்பார்ந்த ஆசிரியைகளே,

நாம் எப்பொழுதும் தீபாவளி கொண்டாடுவதைப் போல் அல்லாமல் இப்போது வேறுபட்டிருப்பது நல்லதுதான். ஒரு 101 ரூபாய் ஏழைக் குழந்தைகளுக்குப் பயன்படும்படியாக நீங்கள் சேர்த்துக் கொடுத்திருப்பதை நா

பாராட்டுகிறேன். நான் S. S. L C பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த போது Selection கட்டணம். 12 ரூபாய் கட்ட வேண்டும் பரீட்சை எழுதுவதற்கு. அந்த 12 ரூபாய்க்கு ஒரு வாரம் நான் கஷ்டப்பட்டேன். யார் யாரையோ நான் கேட்டேன். கடைசியில் என் வகுப்பில் என்னுடன் படித்துக்கொண்டிருந்த ஒரு நண்பர் அவர் அண்ணாவைக் கேட்டு வாங்கிக் கொடுத்தார். Intermediate படிக்கும்போது 24 ரூபாய் கொடுக்க வேண்டும். இதே கஷ்டம்தான். அதே நண்பர் மீண்டும் தமது தமையனாரிடமிருந்து அதை வாங்கிக் கொடுத்தார். பிறகு B. A, படிக்கப் போனேன். நான் செலவழித்தது முழுதும் ரூ. 18 தான். மாதத்திற்கு 12 ரூபாய் ஹாஸ்டல். 5 ரூ. சம்பளம். 1 ரூ. எனக்கு Pocket Money. இவ்வளவுதான் நான் செலவு செய்தேன். நான் B. A., படிக்கும்போது எனக்குப் பணம் கொடுத்தவர் கேட்டார், "நீ எப்போது அதைத் திருப்பித் தரப் போகிறாய்?" என்று. நான் சொன்னேன், "பின்னால் நான் சம்பாதித்துக் கொடுத்து விடுவேன்" என்று. இது நடந்தது 1915 இலும் 1917 இலும். எவ்வளவு காலம் ஆயிற்று என்று எண்ணிப் பாருங்கள். ஆனாலும் என்னால் அதை மறக்க முடியவில்லை. அது பசுமையாக என் மனதில் இருந்ததினால்தான் இப்படியொரு பள்ளிக்கூடம் தொடங்க வேண்டும் என்று என் மனதில் தோன்றியது.

கஷ்டங்கள்தான் மனிதனை மனிதனாக்கும் நீங்கள் கஷ்டம் வரும்போது கஷ்டம் வந்ததே என்று கவலைப்பட்டால் சிறந்த மனிதராக முடியாது. ஒரு சிறு செடி — அது இன்னும் மரமாகவில்லை. அதன் மேல் வெய்யில், மழை கொட்டுகிறது. காற்றிலே அது ஆடுவதைப் பார்த்தால் நமக்கே விசனமாக இருக்கும். இம்மாதிரி அது மேலும் மேலும் வளைந்து ஒடுகிறதே என்று நாம் நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் அந்த வெய்யிலும், மழையும், பனியும், கடுங்காற்றும் அந்தச் செடியை உறுதிப்படுத்துவது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எவன் ஒருவனுக்குக் கஷ்டங்கள் வரவில்லையோ, எவன் ஒருவன் மற்றவர்களினால் துன்புறுத்தப்படவில்லையோ, எவன் வாழ்க்கை எந்தத் தீமைக்கும் வருந்தாது சொகுசாக அமைகிறதோ அவன் இந்த உலகத்திற்குப் பயனற்றுப் போய் விடுவான். ஆகவே வாழ்க்கையில் கஷ்டங்கள் வந்து கொண்டே இருக்க வேண்டும். துன்பங்கள் வந்து கொண்டுதான் இருக்க வேண்டும். அப்போதுதான் மனிதன் மனிதனாக வாழ முடியும். அவன் உள்ளம் விரியும். அவன் தன்னை விடச் சிறந்த அறிவு நிறைந்த பொருளை நாடிப் போவான். குந்தி தேவி கேட்டது உங்களுக்குத் தெரியும். கண்ணனிடத்தில் கேட்டாள், தினம் ஒரு துன்பத்தையாவது எனக்கு அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும் என்று. "அந்தத் துன்பம் வரும்போதாவது நான் உன்னை நினைத்துக்கொண்டிருப்பேன். ஆகையினால் நாள்தோறும் ஒரு தொல்லை, அல்லது கஷ்டத்தை அனுப்புங்கள்" என்று கேட்டாள் என்று பாரதத்தில் வருகிறது. அதுபோலத்தான் நாமும் நமது வாழ்க்கையிலே துன்பங்களை வரவேற்க வேண்டும். துன்பங்களைக் கண்டு நாம் மனம் சலிக்கக் கூடாது. இருக்கும் — நாம் மனிதர்கள்தானே. அந்த சமயத்திலே நம் மனம் கொஞ்சம் வேதனைதான் படும். ஆனால் நான் இந்த வயசிலே என் அனுபவத்தைக் கொண்டு சொல்வது ஒன்று உண்டு. நம்முடைய கொள்கை நேர்மையானதாக இருந்தால், நாம் எடுத்துக் கொண்டு செய்யும் முயற்சி தன்னலம் கருதாததாக இருந்தால் எத்தனையோ தொல்லைகள், துன்பங்கள் நம்மை அடியோடு தூக்கிக் கொண்டு போவதற்கு வேண்டிய பயங்கர உருவம் கொண்டுவந்தால் கூட அது சிறிது நேரத்திற்குள்ளே மறைந்து விடும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. 8½ கோடி ஆயுள் வாங்கி வந்தான் இராவணன். ஆனால் அவன் வென்றதாக, அந்த 8½ கோடி வருடம் வாழ்ந்ததாகக் கதை சொல்லவில்லை. அவன் "நான் பூமியிலும், வானத்திலும் சாகக் கூடாது, மிருகத்தினிடத்திலும், மனிதனிடத்திலும் சாகக் கூடாது, இரவிலும், பகலிலும் சாகக் கூடாது, வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் சாகக் கூடாது" என்றெல்லாம் எந்த எந்த வகையில் மரணம் வருமோ அவைகளிலிருந்தெல்லாம் தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய அளவு தான் வரம் வாங்கி வைத்திருந்ததாக நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால்

இவ்வளவையும் அவன் பெற்றிருந்தும் கூட அவன் மாண்டான். இறைவன் அருள் இல்லை. இறைவனை எதிர்த்து நின்றான். இது நமக்குக் கதை காட்டுகிறது. உண்மை என்னவென்றால் — இப்போது இருள் இருக்கிறது. ஆனால் சிறிது நேரத்திலே மீண்டும் ஒளி பிறக்கும். வாழ்க்கையிலே இப்படி இருள் வந்து கொண்டுதான் இருக்கும் ஆனால் யார் அசையாத நம்பிக்கை உடையவர்களோ கடவுளிடத்திலும், கடவுளுடைய சட்டத்தினிடத்திலும் அவர்களுக்கு வரும் துன்பம் எல்லாம் நிச்சயமாக நீங்கும். அதில் சந்தேகமே இல்லை அப்படி வருகின்ற துன்பங்கள் அனைத்தும் நமக்குப் பயன்படுகின்ற முறையிலேயே நம்மைத் தயார் பண்ணுகின்ற முறையிலே இறைவன் அனுப்பி வைக்கின்றான் என்ற எண்ணம் தான் நமக்கு வரவேண்டுமே தவிர துன்பம் செய்தவர்களைப் பழிப்பதோ அல்லது அவர்கள் அழிந்து போக வேண்டும் என்று விரும்புகிறதோ சரியில்லை.

ஒரு பாங்கியில் ஒரு ஆயிரம் ரூபாய் போட்டிருந்தால், அதை எடுக்காமல் இருந்தால் அது அப்படியே இருக்கும். இன்னும் கொஞ்சம் வளர்ந்து கொண்டே போகும். ஆனால் அதிலிருந்து நாம் எடுத்தோமேயானால் அது குறைந்து கொண்டு வரும். அது போல் நம் மீது பழி சுமத்துபவர்களுடைய பாவ மூட்டை வளர்ந்து கொண்டு போவதை நாம் உணர வேண்டும், நாம் அதற்கு react பண்ணினால், கோபப்பட்டு, வருத்தப்பட்டால் கடவுள் அதற்கு, நீ பதில் சொல்லிக் கொண்டு இருப்பதினால், தான் உள்ளே வர வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுவார் ஆனால் அத்தனையும் நாம், "நீ செய்வதையெல்லாம் செய்து கொள், பகவானிடத்திலே அதை நான் சமர்ப்பிக்கிறேன்" என்று கூறி விட வேண்டும் "Revenge is Mine" என்று பைபிளில் சொல்லியிருப்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். It is not ours. It is God's. ஆகவே அதை அவன் கையில் ஒப்படைத்து விட்டு நீதியின் வழியிலே, நேர்மையின் வழியிலே நடக்கிற யாரையும் யாரும் அசைக்க முடியாது. இது இயற்கைச் சட்டம். கடவுளின் திட்டம். இதுபற்றி யாரும் சந்தேகப்பட வேண்டாம். ஆகவே உங்களுக்கெல்லாம் சொல்லிக்கொள்வது ஒன்றுதான். இதை நான் ஒரு பள்ளிக்கூடமாகக் கருதவே இல்லை. இது ஒரு குடும்பம். நீங்கள் எல்லோரும் இந்த குடும்பத்தின் அங்கத்தினர் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகையால் இங்கே வரக் கூடிய நன்மையோ தீமையோ அதில் உங்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. எந்த சமயத்திலே எங்கிருந்து துன்பமோ தொல்லையோ உங்களில் யாருக்கு வந்தபோதிலும்கூட நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமுகமாக நின்று அதைச் சமாளிக்கக் கூடிய திறமை நீங்கள் பெற வேண்டும். இந்த உலகிலே தீமைக்கு ஆரம்பத்திலே சக்தி அதிகம். நெருப்பைப் போல் பரவும். ஆகவே தீமையைக் கண்டு அஞ்சுபவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் நமக்குக் காந்திஜி ஒன்றைத்தான் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனார். எவன் ஒருவனுக்கு ஆழமான பக்தி கடவுளிடத்திலே இருக்கிறதோ எவன் ஒருவன் வாய்மை வழி நிற்கிறானோ அவன் தன் வாழ்க்கையில் எதைக் கண்டும அஞ்ச வேண்டியதில்லை. அதுதான் சத்தியம். எதைக் கண்டு நாம் அஞ்ச வேண்டும்? எதற்காக அஞ்ச வேண்டும்? அவன் இல்லாது நம் வாழ்க்கையில் எதுவுமே நடக்காது. இறைவனுடைய சித்தம் நான் 100 வருஷம் இருக்க வேண்டுமென்றால் அதை யார் தடுக்க முடியும்? இறைவன், "இவ்வளவுதான் உனக்கு ஆயுள், வந்து விடு" என்று சொன்னால் அதை யார் தடுக்க முடியும் நம்முடைய தலையிலே இருக்கிற ஒரு உரோமம் கூட அவன் அனுமதியில்லாமல் விழாது என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஆனால் இயேசுநாதர் சொன்னது போல நாம் அற்ப விசுவாசிகளாக இருக்கிறோம். அதுதான் கஷ்டம். பரிபூரணமான விசுவாசம் இறைவனிடத்தில் இருக்குமேயானால் வருவதையெல்லாம் சமாளிக்கக்கூடிய ஒரு உறுதி நமக்குத் தானாக வந்து சேரும்.

ஆகையினால்தான் நான் உங்களுக்கு எல்லாம் சொல்ல விரும்புகிறேன். எந்த மாதிரி கஷ்டம் வந்தாலும் கூட நாம் செய்கின்ற காரியம் நல்லது, நாம் எடுத்துக் கொண்ட முயற்சி பரோபகாரமானது என்ற நிலை நமக்கு இருக்கும்போது நீங்கள்

எதைக்கண்டும் அஞ்சவேண்டிய நிலை யாருக்குமே இல்லை. நான் இருக்கும்போதும் அப்படித்தான். நான் இல்லாத போதும் அப்படித்தான். எனக்கு இந்த இரண்டொரு மாதங்களில் வந்திருக்கிற மன அமைதியும் ஒரு மன உறுதியும் என்றைக்குமே இருந்ததில்லை. ஏன் அந்த மாதிரி உறுதியும் அமைதியும் வந்திருக்கிறது என்று சொன்னால் என் மனத்திலே மாசில்லாத ஒரு நிலையிலே எல்லோரும் வாழ வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இறைவனிடத்திலே வைத்திருக்கிறேன். என்னை எதிர்த்து அழித்துவிட வேண்டும் என்று நினைக்கிறவர்கள்கூட வாழ வேண்டும் என்று நினைக்கிறவன் நான். காந்திஜி சொன்னார், "தீமையை நீ வெறு, ஆனால் தீமை செய்கிறவனை நீ வெறுக்காதே" என்று. நீங்கள் தீமையை வெறுக்கத்தான் வேண்டும். தீமை இந்த உலகத்திலே அழிந்துதான் போக வேண்டும். ஆனால் தீயவர்கள் நல்லவர்கள் ஆக வேண்டும். தீயவர்களிடத்திலே நாம் பகைமை கொள்ள வேண்டாம். மன்னிப்புக் கொடுப்போம் ஆகவே நம்மைப் பகைப்பவர்களை வாழ்த்தவேண்டும் என்று சொன்னது வேடிக்கையான ஒரு உபதேசம் அல்ல. ஏனென்றால் அன்றாடம் சொல்லிச்சொல்லிப் பழகுவதினாலே அதன் உண்மைத் தத்துவம் நமக்குப் புரிவதில்லை. உன்னைச் சபிப்பவனை நீ வாழ்த்து என்றால் அது எந்த விதத்திலும் தப்பு இல்லை. அதில் கொஞ்சம் கூட்டவோ குறைக்கவோ முடியவே முடியாது. சபிப்பவனை வாழ்த்தித்தான் ஆக வேண்டும். அதைத் தவிர வேறு வழியே கிடையாது. அதை நீங்கள் நன்றாக உணர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 10, 12 வருடங்களாக நமக்கு வரும் தொல்லைதான், எத்தனையோ தொல்லைகள் நானும் பட்டிருக்கிறேன். தலைமை ஆசிரியையும் பட்டிருக்கிறார்கள். உடம்பு இருக்கிற வரையிலும் நோய் இருக்கத்தான் இருக்கும். பசியில்லாமல் இருக்க யாரால் முடியும். உடம்புக்குள்ள தன்மை அது. தீமைக்கு உள்ள சக்தி பிறர் மனதை நோக வைத்துக் கொண்டே இருப்பதுதான். அதற்காக நாம மனம் குமைந்து போனோமேயானால் கடவுளிடத்திலே நமக்கு நம்பிக்கையில்லை என்ற எண்ணம் வந்துவிடும். அப்படியே நீ தீமையால் மூடப்பட வேண்டும் என்ற இறைவனுடைய சித்தம் இருந்தால் இங்கே யார் அதைத் தாங்க முடியும், தூக்கி வைத்துக்கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்கள். முடியவே முடியாது. அவனுடைய சித்தத்திலே, அவன் நடத்துகிற வழியிலே நாம் போகத் தயாராக இருந்தோமேயானால் நமக்குத் தீமை என்பது இன்னதென்றே தெரியாது. தீமையையே நன்மையாகக் கருதக்கூடிய மன நிலை நமக்கு வர வேண்டும். விஷத்தைக் கூட அமிர்தமாகப் பாவித்துக் கொள்ள வேண்டிய தன்மை நமக்கு வர வேண்டும். ஆழமான பக்தி நம்மிடத்தில் இருக்க வேண்டும். ஆகையினால்தான் நான் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். உங்களில் யாருக்கு ஒரு கஷ்டம் வந்த போதிலும் யாவரும் அதில் பங்கு பெற வேண்டும் என்று விரும்புகிறேன். ஒரு குடும்பத்தின் சகோதரிகளைப் போல, சகோதரர்களைப் போல. அப்படி ஒரு காலம் வந்து பள்ளிக்கு ஏதாவது தொல்லை உண்டாயிருந்தால் நீங்கள் எல்லோரும் தலைமை ஆசிரியை பக்கத்தில் நிற்க வேண்டும். யாருக்கு வந்த கஷ்டமோ என்னமோ என்று நீங்கள் யாரும் பின்னணியிலே செல்லக்கூடாது. ஏனென்றால் உங்களுக்கு அந்தத் திறமையை இறைவன் கொடுப்பான் என்று தெரியும். அது வேண்டும். அப்போதுதான் தலைமை ஆசிரியை உற்சாகமாக இங்கு வேலை செய்ய முடியும். அவர்கள் நல்ல முறையிலே வேலை செய்தால்தான் நீங்களும் நல்ல முறையிலே இங்கு இயங்க முடியும். இந்த ஸ்தாபனம் இன்று எவ்வளவோ பேருக்கு உதவியாக இருந்து வருகிறது. அதனுடைய பெருமையைப் பற்றி நான் கருதவேயில்லை. எனக்குப் பின் இந்த ஸ்தாபனத்தை இவர் தொடங்கினார் நடத்தினார் என்றெல்லாம் நான் அதைப்பற்றிக் கொஞ்சம்கூட சிந்திப்பதே கிடையாது. எனக்கு இதன் மூலமாக உலகத்திற்கு நன்மை வந்து கொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணமே தவிர ஏதோ என் பேர் நிலைத்து நிற்க வேண்டும் என்று மற்றவர்கள் கருதுவது போல நான் நினைக்கவில்லை. ஒரு நல்ல நாளை நாம் கொண்டாடுகிறோம்

நரகாசுரன் உலகத்திலே கொடுமை

செய்து கொண்டே இருந்தான். தாங்க முடியாத கொடுமைதான். ஆனால் அவனுக்கு இறுதி வந்தது. கண்ணன் அவனைக் கொன்றான். அதுதான் மகிழ்ச்சியான தீபாவளி. தீமையெல்லாம் அழியும். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் அறத்தினை சூது கவ்வும். முதலிலே தர்மம் தீமையினாலே மூடப்படும். பார்க்கிறோமே மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் தர்மரும் மற்றவரும் 14 வருடங்கள் வனவாசம் செய்து எவ்வளவு கஷ்டப்பட்டார்கள். இறுதியிலே தர்மம்தான் வெற்றி பெறும். சந்தேகமே வேண்டாம். அப்படி சந்தேகப்பட்டால் கடவுளிடத்திலே சந்தேகப்படுபவர்கள் ஆகிவிடுவோம்.

இம்மாதிரி தொகை வைத்து Scholarship ஒன்று ஆரம்பிக்கலாம் என்று தலைமையாசிரியை சொன்னார்கள், நான் சரி என்று சொன்னேன் ஏதோ ஒரு தொகை எடுத்து வைத்து அதில் வரும் வட்டியைக் கொண்டு நம்முடைய பள்ளியிலே வேலை செய்கின்ற ஆசிரியைகளின் குழந்தைகளுக்கு இலவசமான உதவியோ அல்லது கொடுத்து விட்டு அவர்கள் மாதா மாதம் உத்தியோகத்திற்கு வந்த பிறகு, 10 வருட காலத்தில் சிறிது சிறிதாக வட்டி இல்லாமல் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு நிதி ஒன்று வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் சரி என்று சொன்னேன். நான் முதலிலே வேறு யாராவது ஏழைக் குழந்தைகளுக்கு கொடுக்கலாம் என்று சொன்னேன். ஆனால் நம்முடைய ஆசிரியைகள் அனைவரும் ஏழைகள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே அவர்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பதை நான் சிறந்ததாகக் கருதினேன். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு நம்முடைய ஸ்தாபனத்தின் மூலமாக என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ எல்லாம் செய்ய வேணடும் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது Christmas போதும்கூட நீங்கள் செலவுகளையெல்லாம் சுருக்கி, இப்படியொரு நிதிக்கு நாம் கொடுத்தோமேயானால், நான் 12 ரூபாய்க்கும், 24 ரூபாய்க்கும் பட்ட கஷ்டங்களை இன்று நினைக்கும் போது. நீங்கள் ஒரு 10 அல்லது 15 ரூபாய் ஒருவருக்குக் கொடுக்கும் போது அது எவ்வளவு ஆறுதலாக இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியு... ஏனெனில் நான் அந்த நிலையில் இருந்... படியினால் எனக்கு 12 ரூபாயின் மதிப்பு... 24 ரூபாயின் மதிப்பும் எவ்வளவு என்பது... நான் உணர்வேன். அந்த முறையிலே நா... செய்தோமேயானால் மற்றவர்களுக்கு நா... வழிகாட்டியாக இருப்போம். தயவுசெய்... வாழ்க்கையில் கூட நீங்கள் வீணான செல... செய்ய வேண்டாம். இது சரிதானா, இ... இன்றியமையாத செலவா, இதைச் செய்... தான் ஆக வேண்டுமா என்று உங்களை... நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். இ... இல்லாமல் நம்மால் முடியும் என்று நினை... தால் தயவுசெய்து அதை நீங்கள் செய்யா... தீர்கள். அப்படிச் செலவு செய்கிற தொ... ஐந்தோ அல்லது பத்தோ யாருக்காவ... உதவி செய்யுங்கள். இந்த நாட்டிலே உதவி பெறுவதற்கு ஏராளமான மக்கள் இருக்கிறா... கள். உதவி அற்றவர்கள் — உதவி செய்... பவர்கள் மிக சொற்பம்தான். ஆகவே நம்... டைய சிந்தையெல்லாம் அப்படிச் செல்லட்... டும். இனிமேல் எங்கே எங்கே தேவைப்படு... கின்றதோ அங்கு எல்லாம் நாம் உதவி செய்ய வேண்டுவதற்குரிய ஆற்றல் இறைவன் கொடுக்குமாறு நாம் வேண்டி... கொள்வோம்.

இந்த ஸ்தாபனத்துக்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டை நான் செய்து வைத்திருக்கிறேன். யாரும் இதிலே வந்து உரிமை கொண்டாடவோ, அதைப் பின்னாலே கெடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கிக் கொள்வதற்கு முடியாத வகையிலே நான் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறேன். ஆனால் தீமைக்கு ஒரு எல்லை எங்கே இருக்கிறது அது எங்கும் நுழைய முடியும். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் வருமேயானால் இங்கே பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகளெல்லாம் அதற்குக் கட்டுப்பாடாக எதிர்த்து நிற்கக் கூடிய திறமை அவர்களும் பெறவேண்டும். ஆசிரியராகிய நீங்களும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். ஏனெனில் இது ஒருவர், இருவர் பங்கல்ல. இது என்னுடைய தனிச் சொத்துமல்ல. இதிலே என் பிள்ளைகளுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையவே கிடையாது. இதை நான் பொது மக்களுக்காக அர்ப்பணித்திருக்கிறேன்.

ஆகவே உங்களுக்கு இதிலே எவ்வளவு பங்கு உண்டோ, அவ்வளவுதான் எனக்கும் பங்கு. ஆக நீங்கள் எல்லோரும் சேர்ந்து இதை நல்ல முறையிலே நடத்த வேண்டுமே தவிர இன்னவர் என்று யர்ருக்கும் உரிமை கொண்டாடும்படியான வகையும் நான் செய்யவில்லை வழியும் நான் செய்யவில்லை, அப்படிச் செய்வதும் பெரிய தப்பு. அதனாலே நான், அந்தக்கட்டுப்பாடோடு, அந்த நட்புணர்வோடு நீங்கள் இருக்கும் வரை இருக்கலாம். அன்பாக இருக்கலாம். எந்த விதமான உயர்வு, தாழ்வு இல்லாமல் இருக்க-லாம். நீங்கள் செய்கின்ற பணியைு நாங்கள் நன்றாகப் போற்றுகின்றோம். எங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒன்றாகச் சேர்ந்து இதைக் கொண்டு செலுத்த வேண்டுமாக நான் கேட்டுக்கொள்கிறேன். என் உள்ளக் கிடக்கை அதுதான். இதை ஆரம்பித்ததே அந்த எண்ணத்தில்தான் ஆரம்பித்தேன். பொதுமக்களும், பிள்ளைகளும், நீங்களும், தலைமையாசிரியை பக்கத்தில் இருந்து இதை நீடூழி நடத்துவதற்கு வேண்டிய யாவையும் செய்வீர்கள், இதற்கு ஆண்டவன் அருள் புரிவார்.

---

## 14—12—1968 அன்று பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவின்போது ஐயா நிகழ்த்திய உரை. ( ஒலிப்பதிவு )



அன்பார்ந்த தலைமையாசிரியை அவர்களே, ஆசிரிய சகோதரிகளே, உங்கள் இடத்திலே இன்று நான் என்ன பேசுவது என்று தெரியவில்லை. நம்முடைய பள்ளியிலே இப்பொழுது நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கிறிஸ்துமஸ் என்றால் என்ன என்ற தத்துவத்தைக் கிறிஸ்துவ சகோதரிகள் மிக நன்றாக, மிகத் தெளிவாகக் காண்பித்தார்கள். கிறிஸ்துபெருமான் பிறந்த காலத்திலே அன்றைய உலகம் எப்படி இருந்தது என்பதை நாம் சரித்திரத்திலே பார்க்கிறோம் ரோம சாம்ராஜ்யம் அன்றைய நாகரிக உலகம் முழுவதும் பரவியிருந்தது. அவர்கள்

அதிகாரத்தினுடைய மமதையிலே எவ்வளவோ பேர்களைக் கொன்று குவித்தார்கள் என்பதை இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பார்த்தோம். பிறகு அவர்கள் ஆடம்பரமான வாழ்க்கையிலே தலைசிறந்து வாழ்ந்ததினாலே அந்தக் களியாட்டம் அவர்களுக்குப் பொழுதுபோக்காக அமையும் போது அதிலே கொடுமை கலந்த களியாட்டத்தைத்தான் அவர்கள் விரும்பினார்கள். அதற்காக ஒரு பெரிய விளையாட்டு அரங்கைக் கட்டினார்கள். ரோமிலே கொலோசியம் என்று இப்போது அதன் இடிந்த பகுதி இருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். முதலிலே மிருகங்களை அங்கு விட்டு ஒவ்வொன்றாகக் கொல்வதைக் கண்டு நூற்றுக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்திலே திளைத்தார்கள். பிறகு மிருகத்தையும், மனிதனையும் உள்ளே விட்டு அதிலே ஒரு மனிதனோ, மிருகமோ இறக்கும் வரையிலும் சண்டை செய்ய வேண்டும் என்று அதைக் கண்டு மகிழ்ந்தார்கள். அதன் பிறகு மனிதர்களையே உள்ளே விட்டு ஒருவரை ஒருவர் கொன்று கொள்வதைத்தான் கண்டு மகிழ்ந்தார்கள்.

இந்த நிலைதான் அன்றைக்கு இருந்த நிலை. அதனுடைய முடிவு என்னாயிற்று? கிறிஸ்து பெருமானுக்குப் பிறகு நாலு நூற்றாண்டுகளிலே ரோம ராஜ்யம் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டது. ஏன்? இதை சிந்திக்க வேண்டும் அனைவரும். வன்முறையில் வளர்ந்த இராஜ்யம் அது. அடக்கு முறையிலே பரவிற்று. அதனுடைய விளைவு கோலாகலம், களியாட்டம், பாவம். அது இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. அப்படியேதான் இராஜ்யங்கள் தோன்றின. இராஜ்யங்கள் மறைந்தன. எண்ணிறந்த இராஜ்யங்கள் நம் கண் முன்னாலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மறைந்து விட்டது. ஜெர்மன் சாம்ராஜ்யம் மறைந்து விட்டது. பிரெஞ்சு சாம்ராஜ்யம் இன்னும் எத்தனையோ சாம்ராஜ்யங்கள் இந்த கடந்த இருபது, முப்பது ஆண்டுகளுக்கு உள்ளாக மறைந்து விட்டதை நாம் பார்க்கிறோம். ஆகவே அதிகாரத்தின் மேலே, கொடுமையின் மேலே, பலாத்காரத்தின் மேலே, மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி வாழ்ந்ததின் மேலே கட்டப்பட்ட அவ்வளவு இராஜ்யங்களும் அழிந்து விட்டன.

ஆனால் ஒரு மகான் 12 பேர்களைக் கொண்டு தொடங்கிய அந்த இராஜ்யம் இன்றைக்கு வளர்ந்து வருகிறதே தவிர கொஞ்சம் கூட மங்கவே இல்லை. ஆகவே அன்பின் இராஜ்யம், அமைதியின் இராஜ்யம், அருளின் இராஜ்யம், நீதியின் இராஜ்யம் என்றைக்குமே அழியாது. இந்தப் பேருண்மைதான் நாம் என்றைக்கும் மனதில் நினைத்துக்கொண்டே இருக்க வேண்டும். ஆகவே அவர் உலகத்தின் சமாதான தூதராகத் தோன்றினார். உலகம் முழுவதும் மக்கள் ஒருவரோடு ஒருவர் சகிப்புத்தன்மையும் அன்பும் கொண்டு நேசிக்க வேண்டும் என்று உபதேசித்தார், "எல்லோரும் ஆண்டவனுடைய குழந்தைகள். அந்த முறையிலே எல்லோரும் ஒற்றுமையாய் இருங்கள். அமைதியாக வாழுங்கள்" என்று சொன்னார். ஆனால் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துபோன போதிலும்கூட அவருடைய உபதேசத்தை வாழ்க்கையிலே எந்த அளவிலே நாம் பின்பற்றி வருகிறோம் என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தோமேயானால் மற்ற அற்ப காரணங்களுக்காகச் சண்டை இட்டுக்கொள்கின்ற நிலை இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபோதிலும்கூட நமக்குள்ளே மாறவேயில்லை என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மகத்தான ஒரு சக்தியைத் தோற்றுவித்தார். நமக்கு அற்புதமான உபதேசங்களைக் கொடுத்தார். அன்றைக்கு தருமத்தின் மேலே இவ்வுலக வாழ்க்கை எழுப்பப்பட வேண்டும் அதுதான் நிலைத்து இருக்கும் என்று சொன்னார். ஆனால் அறவழியிலே நின்று மக்களுக்குச் செய்த உபதேசங்கள் இன்றைக்கு இதுவரையிலும் மனிதனை அதிகமாக மாற்றியதாகத் தெரியவில்லை. விஞ்ஞானத்திலே மின்சாரத்தைக் கண்டு பிடித்தார்கள். முதலிலே மின்சாரம் ஒன்று உண்டு என்பதை மட்டும் தெரிந்து கொண்டார்கள். அதன் பிறகு மின்சாரத்தை எப்படி பயனுடையதாக்க முடியும் என்பதற்கு முயற்சி செய்தார்கள். மின்சாரத்தினுடைய

சட்டங்களை எல்லாம் தெரிந்து கொண்டார்கள். (The Laws of Electricity) அதைப் பயன்படுத்தி இன்றைக்கு மின்சாரம் அற்புதமான காரியங்களை உலகத்திலே செய்து வருகிறது. அப்படியேதான் அணுவையும் கண்டுபிடித்தார்கள். அணுவின் ஆற்றலையும் கண்டுபிடித்தார்கள். அந்த அணுவின் ஆற்றலினாலே ஆக்க வேலைக்கு அது எவ்வளவு பயன்படுகிறது என்பதையும் நாம் கண்டோம். அதையே திருப்பி அழிவு வேலைக்கு மனிதனே பயன்படுத்தினானேயானால் எவ்வளவு மகத்தான அழிவைச் செய்கிறது என்பதையும் நாம் கண்டு கொண்டோம்.

இன்றைக்கு உலகம் முழுவதும் ஒரு சிறு வீடாக எல்லைகள் எல்லாம் தகர்ந்து போய் மக்கள் முழுவதும் ஒரு குடும்பமாக வாழ்கின்ற இந்த காலத்திலே (The Relevancy of Jesus Christ) அவருடைய உபதேசங்கள் இன்று பிரத்யட்சமாகப் பயன்படுவதைப் போல இதற்கு முன்பு எந்த காலத்திலும் பயன்பட்டிராது என்றுதான் நான் கருதுகிறேன். அன்றைக்கு அவருடைய உபதேசம் சிலராலே ஏற்கப்பட்டிருக்கலாம், மறுக்கப்பட்டும் இருக்கலாம் ஆனால் இன்றைக்கு ஏற்பட்டால் ஒழிய மனித சமுதாயம் உலகத்திலே வாழும் என்ற எண்ணமே இல்லாத ஒரு நிலைமைக்கு நாம் வந்து விட்டோம் He was a Prince of Peace. He is the Prince of Peace. இன்றைக்கு உலக சமாதானம் வேண்டுமேயானால் அவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தருமத்தின் மேல் நின்று ஏற்றுக்கொள்ளாத சமுதாயம் இன்றைக்கு விஞ்ஞானத்தின் துணை கொண்டாவது ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சில குண்டுகள் போதும் மனித வர்க்கத்தையே அழிப்பதற்கு. ஆகவே அதற்குப் பயந்தாவது இந்த அணுசக்தியினுடைய ஆக்க வேலையை மறந்து மனிதன் அழிவு வேலையில் ஈடுபட்டபோது எவ்வளவு அழிக்கக்கூடிய சக்தி உடையது என்பதை உணர்ந்து கொண்ட பிறகாவது, மனிதன் இன்றைக்கு இனிப் போர் இருந்தால் நாகரிகம் மட்டும் அழிந்து போகும் என்பதோடு மட்டுமல்லாமல், உலகத்தில் உள்ள மனிதர்கள் அனைவரும் அழிந்து போவார்கள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

ஆகவே அவன் தருமத்திற்காக யுத்தத்தைத் தவிர்க்காமல் போனாலும்கூட (out of Sheer necessity) ஒரு வழியும். கதியும் இல்லை என்று விஞ்ஞானம் காட்டிக் கொடுத்ததினாலே, இன்றைக்கு சமாதானமாக இருக்க விரும்புகிறான். இந்தச் சமாதானம் இனி உலகத்திலே நிலவத்தான் போகிறது வெகு சீக்கிரத்திலே இந்தப் போர்கள் முடிவுக்கு வரத்தான் போகின்றன. ஆகவே எந்தெந்த இராஜ்யங்கள் அழிந்தனவோ அவை மீண்டும் வராது. அழியாத அன்பின் இராஜ்யம், அருளின் இராஜ்யம் உலகம் முழுவதிலும் இன்றைக்கு பரவிக் கொண்டுதான் வருகிறது. அதைத்தான் நாம் கிறிஸ்துமஸ் நன்னாளிலே சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் வெறும் கிறிஸ்து பெருமானின் பெயரை நாம் சொல்லிக் கொள்வதால் மட்டும் மாறிவிடுகிறோமா? பத்திரிக்கையிலே நாம் படித்தோம். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் உடையை அணிந்து கொண்டு ஒருவர் வீட்டுக்குள்ளே புகுந்து ஒருவன் பெட்டியைத் திறக்கச் சொன்னான். திறந்தார்கள். அவர்களுக்குரிய பணம் அங்கே இருந்தது. அதை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வா என்று மிரட்டினான். இன்னொருவன் போன் செய்தான். இப்படி யாரோ போலீஸ் உடையிலே வந்திருக்கிறார்கள். எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது என்று. உண்மையான போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். இந்த உடை அணிந்துகொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் பிடிபட்டு விட்டார். ஆகவே சப் இன்ஸ்பெக்டருடைய உடையை அணிந்ததினாலே சப் இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரம் அவருக்கு கிடைத்ததா? இல்லை. உடையினாலே அந்த உடைக்குள்ளே இருக்கிற மனிதனுக்கு உண்மையாக இருக்க வேண்டிய அதிகாரம் இல்லாததினாலே அவன் திருடனாகப் பிடிபட்டான். அது போல நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். முஸ்லீம்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். அது வெறும் உடைதான். ஆனால் முஸ்லீம்களுக்கு உள்ள, இந்துக்களுக்கு உள்ள, கிறிஸ்துவர்களுக்கு உள்ள, ஒரு ஆட்சி, ஒரு சக்தி நம்மிடத்தில் இல்லாது இருக்கும்வரை இவை

கள் வெறும் உடையாக, அலங்காரமாகத்தான் இருக்குமே தவிர அதனாலே பயன் வராது.

ஆகையினாலே நான் எல்லோருக்கும் சொல்லிக்கொள்வது ஒன்றுதான் - மனிதன் உடலிலே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேதான் போகிறான். எனக்கு வயது 70 என்றாலும் நானும் வளர்ச்சியடைந்து கொண்டுதான் இருக்கிறேன். உயரத்திலே வளர்ச்சி இல்லாமல் போகலாம், பருமனிலே வளர்ச்சி இல்லாமல் போகலாம். ஆனால் வினாடிக்கு வினாடி உடம்பிலே உள்ள ஜீவ அணுக்கள் அழிந்து புதிய அணுக்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன என்று விஞ்ஞானம் போதிக்கின்றது ஆகவே இந்த மாற்றம் இந்த வளர்ச்சி சரீர வளர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் விரும்புகிறேன். உள்ளத்திலே வளர்ச்சி, நாளுக்கு நாள் வளர்ச்சி, இறைவனிடத்திலே நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் அவன் நம்மை நோக்கி இரண்டு அடி எடுத்து வைக்கிறார் என்பது நாம் ஒவ்வொரு மதத்திலும கண்ட உண்மை. ஆகையினாலே அந்த அளவிற்கு Christmas is a Merry Christmas. No doubt of it. But it should be a spiritual Christmas நாம் நம்மை மாற்றிக்கொள்கிற அளவுக்கு ஆண்டுதோறும் ஒரு புதிய பிறப்பு இருக்கும் வகையிலே நம வாழ்க்கையை நாம சித்தரித்துக் கொண்டோமேயானால் இந்த மோசமான உலகத்திலே கொஞ்சம் பேராவது அமைதியின் சின்னமாக, அன்பின் உருவமாகத் திகழ்ந்தார்களேயானால் அவர்கள் இடத்திலே இருந்து அவர்கள் அனுப்புகிற சிந்தனைகள், பேச்சுகள், செய்கைகள் யாவும் நல்லவைகளாக, அறத்தின் அடிப்படையிலே நின்று எழுபவைகளாக இருக்குமேயானால் இந்தத் தீய சக்திகளுக்கு ஒரு சவாலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய பள்ளிக்கூடத்திலே இருக்கக்கூடிய பிள்ளைகளும். ஆசிரியைகளும் அந்த சக்தியை உருவாக்குகின்ற ஒரு பெரிய Laboratory ஆக, ஒரு பெரிய Power house ஆக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கனா. ஆகவே உலகத்திலே இவ்வளவு மகத்தான தீய சக்திகள் பரவி வருகின்ற காலத்திலே, இந்த சிற்றூரிலே ஒரு சின்ன மூலையிலே இருக்கக்கூடிய இந்த பள்ளிக்கூடத்திலே இருக்கக் கூடியவர்கள் மட்டும் இம்மாதிரி ஒரு நல்ல ஆக்க சக்தியை அருள் சக்தியை, தரும சக்தியை உருவாக்கி அனுப்பினால் பயன் உடையதாக இருக்குமா என்று நீங்கள் யாரும் சிந்திக்கவே வேண்டாம். யார் கண்டார்கள்? ஏசுநாதரை சிலுவையிலே அறைந்த உடனே எல்லாம் முடிந்து விட்டது. அவர் தொலைக்கப்பட்டு விட்டார். இனி அவர் சொன்ன உபதேசங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அழிந்து விட்டது என்றுதானே நினைத்தார்கள். ஆனால் அழிந்ததா? எவ்வளவு சிறிய தொடக்கமாக இருந்த அது இன்று எவ்வளவு பெரியதாகப் பரவி வந்திருக்கிறது என்பதை நாம் அவருடைய வாழ்க்கையிலிருந்து தெரிந்து கொள்ளவில்லையா? அதே மாதிரி தான் சிறிதாகத் தொடங்கப்பட்ட போதிலும் கூட, அது எவ்வளவோ மகத்தான சக்திகளைச் செய்யக்கூடிய ஒரு சக்தியாக மாறும். அணு சின்னதுதானே? அந்தச் சின்ன சின்ன அணுக்களைக் கொண்டுதானே இன்று அவ்வளவு பெரிய சக்திகளை உருவாக்குகிறார்கள். ஒவ்வொரு சிறு குழந்தையும் ஒரு அணுவாக கருதிக்கொள்ளலாம். ஒவ்வொரு ஆசிரியரும் ஒந அணுவாகக் கருதிக்கொள்ளலாம். அவ்வளவும் சேர்ந்து செயல்படும் போது The Chain Reaction என்று சொல்வார்கள். அதுபோல் ஒன்றோடு ஒன்று கூடி மகத்தான சக்தியை உண்டாக்கக்கூடிய அளவு அது பயன் உள்ளதாக இருக்கும்.

அன்றைக்கு ஏசுநாதர் சொன்ன மலைப் பிரசங்கத்திலே வாழ்ந்த வாழ்க்கையைத்தான் நாம் மகாத்மா காந்தியடிகளிடம் பார்க்கிறோம். அது வெறும் பிரசங்கமாக மட்டுமல்ல. அதை அவர் வெறும் பிரசங்க உருவத்தில் மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை தன் வாழ்க்கையிலே வாழ்ந்தார். வாழ்க்கையிலே வாழ்ந்து பெரிய சமுதாயத்தையே அந்த வாழ்க்கை நெறியிலே கொண்டு செல்லக்கூடிய மகத்தான ஆற்றல் அவருக்கு வந்தது என்று சொன்னால் அவர் பின்னாலே ஒரு பெரும் பட்டாளம் இல்லை. அவர் ஒரு

...ம் படுக்கையிலேதான் படுத்தார். ஒரு மாட்டுத் தொழுவத்திலே தான் பிறந்தார். ஒரு தச்சனுக்குத் தான் மகன் என்று சொல்லிக் கொண்டார். அவ்வளவு எளிய வாழ்க்கையிலே தொடங்கினவர்தான். அந்த எளிய வாழ்க்கையிலேதான் காந்திஜி அவர்கள் நம்பிக்கை கொண்டார். அவருடைய உணவும், அவருடைய உடையும் அவர் இருந்த இல்லும் நமக்கு இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த உலகத்திலே நடமாடிய மகானுடைய சரித்திரத்தை ஞாபகப்படுத்துகிறது. இன்றைக்கு இந்த நாளிலே நவநாகரிகம் நிறைந்த நாளிலே ஒரு மனிதன் இப்படி வாழ முடியுமேயானால் அன்றைக்கு ஏசு பெருமான் வாழ்ந்ததிலே நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை. அது வியப்புக்குரிய காரியமும் அல்ல. இதை மட்டும் நாம் சிந்தித்தோமேயானால் நமக்கு The Social aspect of christmas, the merry aspect of christmas — அது ஒரு பக்கம் இருக்கத்தான் இருக்க வேண்டும். நாம் அதைக் குறை சொல்லவில்லை. கோலாகலமாக, குதூகலமாக நண்பர்களைச் சந்தித்து ஒருவரோடு ஒருவர் நல்ல முறையிலே பரிமாறிக் கொண்டு வாழ வேண்டும் Christmas நாட்களிலே அதை நான் வரவேற்கிறேன், எதிர்பார்க்கிறேன். ஆனால் அம்மட்டோடு அமைந்துவிடவே கூடாது. Not Merely the Social side, Not merely the economic side. But I attach more importance to the spiritual side. We must grow spiritually day by day and hour by hour. What I was last year, I am not this year, What I am today, I won't be tomorrow because I am before me seeing clearly the path I should follow. Let that be the guidance for everyone of you and Christmas message is that message more than the gala days we are going to spend in a week's time and therefore I have a great hope in my teachers and in my children நான் எதிர்பார்ப்பது எல்லாம் நமது பள்ளி ஒரு குன்றின் மேலிட்ட விளக்கைப் போலப் பிரகாசிக்க வேண்டுமென்றுதான் ஆண்டுதோறும் இதுமாதிரி நாங்கள் கிறிஸ்துமஸ் விழா, தீபாவளி விழா இன்னும் மற்ற சமயங்களைப் பொறுத்த விழாக்களையும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று நான் கருதுகிறேன். உண்மையான சமயம் இந்த சிறு சிறு தடைகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு கிறிஸ்துவப் பள்ளிக்கூடத்திலும் சிறந்த உண்மையான இந்து சமய போதனை-யும் எடுபட வேண்டும். விழாக்களும் கொண்டாடப்பட வேண்டும் என்பது என்னுடைய கனவு. இதுவரையிலும் நாம் நினைத்து வந்தோம். ஏதோ அந்தந்த சமயத்திலே சார்ந்தவர்களுக்குத்தான் மோட்சம். பிற சமயத்திலே சேர்ந்தவர்களுக்கு மோட்சம் இல்லையென்ற எண்ணத்திலே வாழ்ந்து வந்தோம். அந்தத் தடைகளெல்லாம் நீங்கி விட்டன. இன்றைக்கு ஒவ்வொரு சமயத்தின் வேரும் ஒரே மாதிரிதான். மரங்களினுடைய இலைகளோ அவைகளினுடைய மலர்களோ வேறு வேறாக இருக்கலாம். வேரைப் பொறுத்த வரையிலும் வேறு வேறு வித்தியாசமே கிடையாது. அந்த அளவுக்கு ஒவ்வொரு சமயத்திலும் இருந்த உண்மைகளை பிற சமயத்தார் ஏற்றுக்கொள்ளக்கூடிய காலம் வந்திருக்கிறது. சர்வசமய சமரசம் இருந்தாலொழிய உலகத்தில் சமாதானத்தை நிறுவவே முடியாது என்று உலகம் இன்றைக்குக் கண்டு கொண்டிருக்கிறது. என்னுடைய வீட்டின் ஜன்னல்களை நான் திறந்து விட்டிருக்கிறேன். எந்த ஜன்னல் வழியாக நல்ல காற்று வந்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று மகாத்மா காந்திஜி சொன்னதுபோல நமது பள்ளிக்கூடத்திலே எல்லா சமயங்களுக்கும் இடமுண்டு. எல்லா சமயக்கருத்துக்களுக்கும் இடமுண்டு. ஆனால் ஒரு சமயக் கருத்து தான் நம்மை உய்விக்கும் என்பதை மட்டும் நாம் மறந்து விட வேண்டும் அதுதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்வது.

இந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்ன முறையிலே நான் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து வைத்திருக்கிறேன். நமது பள்ளிக்கூடத்திற்கு எனக்குப் பின்னாலே நிர்வாகத்தை நடத்தக் கூடிய அளவிற்கு ஒரு சிறு Trust ஐயும் நான் form பண்ணியிருக்கிறேன். அதிலே ஒரு 7 மெம்பர்களை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன். அதிலே ஒருவர் காலஞ்சென்ற திரு. ராஜப்பா அவர்கள். அவர்கள் மறைவு நமக்குப் பெரும் நஷ்டம்தான். அவருக்குப்

பதிலாக இன்னொருவரை நாங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகவே அந்த முறையிலே பள்ளிக்கு நிரந்தரமாக ஒரு Trust நியமிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு பின்னாலே கரஸ்பாண்டெண்டாக தலைமை ஆசிரியையே இருக்க வேண்டும் என்று அந்த டிரஸ்டிலே நான் கண்டிருக்கிறேன். ஏனென்றால் பிறர் இங்கே வந்து பள்ளியினுடைய நாடியைத் தெரியாமல் ஏதாவது செய்தால் மற்றப் பள்ளிகளிலே பள்ளிக்கும் நிர்வாகத்துக்கும் மோதல் ஏற்படுவது போல ஏற்படக்கூடாது என்பதுதான் என்னுடைய நோக்கம். தலைமை ஆசிரியை அவர்கள் என்னோடு பழகின காரணத்தினாலே என்னுடைய உள்கிடக்கை என்ன, எப்படி நான் பள்ளிக்கூடத்தை நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன், எப்படி இங்கே படிக்கக் கூடிய மாணாக்கியர்களுக்கு அவரவர்களுடைய சமயத்தின் சிறந்த இலட்சியங்களைக் கொண்டு செலுத்த வேண்டும் என்பதை எல்லாம் நான் அவர்களுக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறேன். அந்த அளவிலே அவர்கள் அதைக் கொண்டு செலுத்துவார்கள் என்ற பரிபூரண நம்பிக்கையில்தான் என்னுடைய டிரஸ்டிலேயே எனக்குப் பின்னால் Headmistress ஆகவும் Correspondent ஆகவும் இருக்க வேண்டும் என்றுகூட நான் Register பண்ணி வைத்திருக்கிறேன். இது ஒரு பொது சொத்து. நான் இதை உருவாக்கினேன் என்ற பெருமை எனக்கு இல்லவே இல்லை. அந்த மாதிரி எண்ணமும் எனக்குக் கிடையவே கிடையாது. ஆகவே இதிலே யாரும் உரிமை கொண்டாடுவதற்கு இடமே இல்லை. நான் தோற்றுவித்தேன் என்பதற்காக என்னுடைய பிள்ளைகளோ அல்லது என்னுடைய உற்றார் உறவினர்களோ யாரும் இதிலே எந்தவிதமான உரிமையும் கொண்டாடுவதற்கில்லை. எல்லோருக்கும் உரிமையுடையது இந்த ஸ்தாபனம். எல்லோரும் சேர்ந்து இதை வளர்த்துவார்களேயானால் இந்த gate-க்குள்ளே யார் வேண்டுமானாலும் வரலாம். என் பிள்ளைகளெல்லாம் வரலாம். என் உற்றார் உறவினர் எல்லாம் வரலாம். வரும்போது இதற்கு என்ன நன்மை செய்ய முடியும் என்ற எண்ணத்துடனே வரவேண்டுமே தவிர இதிலிருந்து தாங்கள் என்ன பெறலாமென்ற எண்ணத்தை இந்த gate-க்கு அப்பால் விட்டு விட்டு வரவேண்டும். ஆகையினாலே உங்களுடைய வாழ்த்து எனக்கு நீங்கள் அளித்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான் எத்தனை காலம் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள், அது உங்கள் அன்பை எனக்குக் காட்டுகிறது. முன்பெல்லாம் நான் அதைப்பற்றி சிந்தித்தது உண்டு. ஆனால் இப்பொழுது அதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. ஏனென்றால் எவனொருவன் என்னை இந்த உலகத்திலே தோற்றுவித்தானோ அவனுக்குத் தெரியும் எப்பொழுது என்னை அழைத்துக்கொள்ள வேண்டுமென்று. அதைப்பற்றிக் கவலைப்படுவதென்பது அது அறியாமை. கவலைப்பட்டதும் உண்டு. ஆனால் இன்றைக்கு நான் அந்த நிலைமையில் இல்லவே இல்லை. உங்களோடு நான் இருக்க வேண்டுமென்று இறைவன் விரும்பினால் இருப்பேன். ஆனால் அவருடைய சித்தத்தின்படியேதான் அவர் எல்லாவற்றையும் நடத்திக்கொண்டு போவார் என்பதை நீங்கள் அறிவீர்கள். யார் நினைத்தார்கள்? காலையிலே நன்றாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர் சாவதற்கு ஒரு 15 நிமிஷத்திற்கு முன்பு கூட கலகலவென்று பேசிக் கொண்டிருந்தார். திடீரென்று மரணமடைந்தார் என்று கேள்விப்படுகிறோம். ராஜப்பா அவர்களைப் பற்றி யார் நினைத்தார்கள்? ஆகையினாலே இந்த மரணமானது எல்லோருக்கும் பொதுதான். அது யாரையும் விடப் போவதில்லை. அதனாலே என்றைக்கும் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டுமென்பது தான் நமது குறிக்கோள் லட்சியமாக இருக்க வேண்டும். ஆகையினால் உங்களுடைய வாழ்த்து, உங்களுடைய பிரார்த்தனைக்காக நான் மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன். ஆகவே நீங்கள் இப்பொழுது ஒரு 100 ருபாய் நன்கொடையாகக் கிறிஸ்துவ சகோதரிகள் கொடுத்தீர்கள். அந்த நன்கொடை தலைமை ஆசிரியை சொன்னதுபோல நம்முடைய ஆசிரியைகளுக்கு அது பயனுடையதாக இருக்குமென நான் கருதுகிறேன். மற்றவர்களுக்கு உதவி செய்யத்தான் வேண்டும். இல்லையென்றில்லை. ஆனால் நம்முடைய அயலான், பக்கத்திலே இருக்கிறவன் உதவியைப் பெறக் காத்திருக்கும்போது தூரத்திலுள்ளவர்களுக்குப் போய் உதவி செய்வது பொருத்தமாக இராது என்றுதான்

இவ்வித உதவிகளை நமது ஆசிரியைகளுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் செய்வது நல்லது என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். அது மாதிரி இது ஒரு பெரிய குடும்பமாக பரஸ்பரம். நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய ஆசை. இங்கே முஸ்லீம்களுண்டு. கிறிஸ்துவ சகோதரிகளுண்டு. ஹிந்து சகோதரிகளுண்டு. அதிலே வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களுமுண்டு. ஆனால் எல்லோரும் ஒரே ஒரு குடும்பமாக எத்தகைய வேறுபாடும் சிறிதளவு கூடக் காட்டாமல் நீங்கள் இந்தப் பள்ளியினுடைய இலட்சியத்தை மட்டும் மனதிலே வைத்து செய்ய வேண்டிய தர்மமாகிய பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கின்ற அந்தப் பெரிய பணியை மேற்கொண்டு அதை நிஷ்காம்யமாக, மனத்திலே சந்தோஷமாக, அதனுடைய பலன் நீங்கள் பெற வேண்டும் என்ற ஆசையில்லாமல் அதையும் இறைவனுக்குத் தியாகம் பண்ணக்கூடிய அளவிலே, கீதையைக் கடைப்பிடிக்கக் கூடிய முறையிலே நிஷ்காம்ய கர்மமாக அதர்மத்தைச் செய்வீர்களேயானால் கடவுள் உங்களையும் ஆசீர்வதிப்பார். பிள்ளைகளைகளையும் ஆசீர்வதிப்பார். பள்ளியையும் ஆசீர்வதிப்பார். ஆகையினாலே இன்றைக்கு மகிழ்ச்சிக்குரிய ஒரு நல்ல நாள். என் நினைவிலே என்றென்றும் இருக்கும் இந்த நாள். நீங்களெல்லாரும் விடுமுறைக்கு உங்கள் வீடுகளுக்குப் போகப் போகிறீர்கள். அங்கே கிறிஸ்துமஸ் விழாக்கள் கொண்டாடுவீர்கள். புத்தாண்டு விழாக்கள் கொண்டாடுவீர்கள். ஆகையினாலே இந்த சந்தர்ப்பத்திலே ஒரு மகிழ்ச்சியான கிறிஸ்துமஸ் விழாவையும், மகிழ்ச்சி ததும்பும் புது ஆண்டு தொடக்கத்தையும் இறைவன் அருள்வானாக என்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் நீங்கள் எனக்குச் செய்த உபசாரணைக்கும் வாழ்த்துக்கும் மிக்க நன்றி.

---

செப்டம்பர், 1964 'நல்வழி' இதழில் உயர்திரு. ஐயா அவர்கள் மாணவருக்கு எழுதிய கட்டுரை

## காலமும், அறிவும்

கற்கால மனிதர்கள் வாழ்ந்த காலத்திலும் ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரம்தான்; இன்றும் ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரம்தான். காலம் நீள்வதில்லை.

பழைய கற்கால மனிதன் புதிய கற்கால நிலைக்கு வரப்பல ஆயிரமாண்டுகள் ஆயின மனிதன் பறக்கத் தொடங்கியது 1919 ம் ஆண்டில்தான். இந்த ஒரு சில ஆண்டுகளுக்குள் அவன் ஒரு மணிக்கு 20,000 மைல் வேகத்தில் பறக்கத் தெரிந்து கொண்டான். சில ஆண்டுகளுக்குள் அவன் பிற மண்டலங்களுக்குப் பறந்து செல்ல இயலுமென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நமது தோட்டத்துத் தென்னை மரத்தில் வாழும் தூக்கணாங் குருவியின் கூட்டைப் பாருங்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தூக்கணாங் குருவிகளின் கூடுகள் போலவேதான் இன்றும் அவைகள் கட்டுகின்றன. ஆனால் குகைகளிலும், வனங்களிலும் வாழ்ந்து வந்த மனிதன் இன்றைக்கு நூறு அடுக்குக் கட்டிடங்கள் கட்டி வாழ முடிகின்றது.

நமது முன்னோர்கள் பனையோலையில் எழுத்தாணி கொண்டு நூல்கள் எழுதினார்கள். இன்று புதிய அச்சு இயந்திரங்களில் ஒரு நாளில் ஆயிரக்கணக்கான நூல்கள் வெளியிடப்படுகின்றன. உலகில் பத்திரிக்கைகளுக்கும் புத்தகங்களுக்கும் ஒரு ஆண்டுக்குச் செலவாகும் மை, அரபிக்கடலின் நீரை விட அதிகம் என்று வேடிக்கையாக சொல்-

வார்கள். இவ்வளவும் அறிவு வளர்ச்சிக்காகத் தானே.

கற்காலத்திற்கும், அணுக்காலத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று அறிவின் ஆழமும் அகலமும் வெகு வேகமாக வளர்ந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு துறையிலும் இதை நாம் நாள்தோறும் பார்க்கிறோம்.

இந்த நிலையில் அறிவு பெறப் பள்ளிக்கும், கல்லூரிகளுக்கும் செல்லும் மாணவ, மாணவிகளின் கடமை என்ன? வளராத நேரம் - வெகு வேகமாக வளர்ந்து வரும் அறிவு - இச்சூழ்நிலைக்குத் தகுந்தபடி அறிவு பெற்று உயர்வடைய வேண்டுமானால் மாணவர்கள் காலத்தை ஒரு சிறிதும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். வேகமாகக் கற்க வேண்டும். கவனமாகக் கற்க வேண்டும். நிறைய கற்க வேண்டும்.

இந்த உண்மை தெரிந்து காலத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் நாடுகள் தாம் உலக அரங்கில் முன்னேறி வருகின்றன. மற்ற நாடுகளில் மக்கள் தொகை எவ்வளவு அதிகம் இருந்தாலும், இயற்கை வளம் நிறைய இருந்தாலும் அவை பின்தங்கிய நாடுகளாகவே இருக்கும்.

நம் நாட்டில் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. விஞ்ஞான அறிவு வளர வேண்டும், அதற்கு அடிப்படையான கணித அறிவு வளர வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஆனால் 30% இவ்விரு பாடங்களிலும் பெறுவதைப் பெரிய சாதனையாகக் கருதுகின்றோம். உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் நமது சென்னை மாநிலத்தில் 50,000 மாணவர்கள் வெற்றி பெறவில்லையென்றால், இதனால் ஏற்பட்ட கால இழப்பு முதலியவைகளை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் காலத்தை வீணாக்கியவர்கள் என்று துணிந்து கூறலாம்

உலக வரலாற்றில் நமக்கென்று ஒரு தனி இடம் தேடிக்கொண்ட பெரியோர்கள் பலர் தங்கள் காலத்தை வீணாகக் கழித்திருந்தால், எல்லோரையும் போலத்தான் அவர்களும் வாழ்ந்து மடிந்திருப்பார்கள். மறைந்த நம் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு இரவில் நான்கு மணி நேரம் மட்டும் தூங்குவார், மீதி 20 மணி நேரமும் உழைப்பார். அமெரிக்கக் கோடீசுவரர் நம்மைப் போலத் தூங்கிக் கொண்டு இருந்தால் இத்துணை பொருளீட்டி வாரி வழங்கி வள்ளலாக மாறியிருக்க முடியுமா? இப்படிப்பட்ட பெரியோர்களின் வாழ்க்கையைப் பற்றிப் படித்து நாமும் காலத்தைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

"நெடுநீர், மறவி மடிதுயில் நான்கும்
கெடு நீரார் காமக்கலன்"

என்றார் வள்ளுவர். மறதி, காலம் நீட்டித்தல், சோம்பல், அளவு மீறிய தூக்கம் இந்நான்கும் கெடுகின்ற இயல்பை உடையவர் விரும்பி ஏறும் மரக்கலம் என்பது இதன் பொருள். இந்நாட்டின் வருங்காலத் தலைவர்களாகிய மாணவ மணிகள் இந் நான்கு பண்புகளையும் விலக்கி முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை நரம்புகளில் பாய்ச்சி, குறைந்த காலத்தில் நிறைந்த அறிவு பெற முயற்சி செய்ய வேண்டும்.

காந்திஜி கீதை முழுவதையும் பாராமல் படிக்க விரும்பினார். நேரம் கிடைக்கவில்லை. எனவே அன்றாடம் பல் துலக்கும் இடத்தில் இரண்டு சுலோகங்களை எழுதித் தொங்க விட்டுக்கொண்டு, பல் துலக்கிக் கொண்டே அவற்றைப் பாராமல் படித்து விடுவாராம், இளைஞர்கள் காலையில் ஆறு மணிக்கு எழுவதற்கு மாறாக ஐந்து மணிக்கு எழுந்திருப்பது என்று பழக்கப்படுத்திக் கொண்டால், ஒரு ஆண்டிற்கு 365 மணி நேரம் நமக்கு அதிகம் கிடைக்குமல்லவா?

இழந்த பணத்தை மீண்டும் பெறலாம். இழந்த பலத்தை மீண்டும் பெறலாம். ஆனால் இழந்த காலத்தை எவரும் எக்காலத்திலும் பெற முடியாது. ஆதலால் இளைஞனே, உனது காலத்தைச் சிறிதும் வீணாக்காதே. நீ உலகில் தோன்றுவது ஒரு முறையே. உனது தோற்றமும், வாய்ப்பும் சிந்தனையும் கொண்ட இன்னொருவன் இனிப் பிறப்பதில்லை. நீ உனது உயிர் இழப்பதற்குள் உனது முத்திரையை இவ்வுலகில் பதித்து விடு.

## அக்டோபர், 1964 'நல்வழி' இதழில் உயர்திரு. ஐயா அவர்கள் எழுதிய கட்டுரை

# காலமும், அறிவும் - 2

ஒரு சமயம் ஒரு அமெரிக்கத் தொழிலதிபர் "நீங்கள் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலைக்கு வர விரும்பினால், உங்களிடம் 'KASH' இருக்க வேண்டும். நான் குறிப்பது Cash அல்ல 'KASH'. ஒரு தொழிலுக்கு மூலதனம் எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவு அதிகமாகத் தொழில் விரிவடையும். அவ்வாறே ஒரு மனிதனுக்கு KASH எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குத் தக்கதாக அவன் வாழ்வில் வெற்றி பெறுவான்" என்றார்.

இனி இந்த KASH என்ன என்பது ஆராய்வோம். K என்ற எழுத்து Knowledge - அறிவு என்ற சொல்லின் முதல் எழுத்தாகும். A என்ற எழுத்து Attitude - மனப்பாங்கு, அல்லது மனோநிலை என்பதைக் குறிக்கும். S என்னும் எழுத்து Skill _ திறமையைக் காட்டுவதாகும். H என்பது Habit - பழக்கங்களைக் குறிக்கும்.

எனவே வாழ்வில் வெற்றி பெற ஒருவருக்குச் சிறந்த அறிவு, நல்ல மனப்பாங்கு, பல விதமான திறமைகள், விரும்பத்தக்க பழக்க வழக்கங்கள் முதலியவை இன்றியமையாதனவாகும். இந்நான்கு செல்வங்களும் ஒருவனுக்கு அதிர்ஷ்டவசமாகக் கிடைப்பவையல்ல. அரிதில் முயன்று பெறத்தக்கவையாகும். சிறு பருவத்திலிருந்தே இவற்றைப் பெறக் கருத்தை செலுத்தினாலன்றிக் கைகூடாவாம். 'முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்' என்ற குறளில் வரும், "திரு" என்பதற்குப் பணம் என்பது மட்டும் பொருளல்ல. அறிவு, ஆற்றல், நற்பழக்கம் இவைகள் எல்லாம் 'திரு' என்ற சொல்லில் அடங்கும். இத்தகைய சிறந்த இயல்புகள் இல்லாமைதான் "இன்மை" பொருளின்மை மட்டும் இன்மை எனக் குறிப்பிடவில்லை.

இனி ஒவ்வொருவரும் இந்நான்கு செல்வங்களையும் பெறும் வழி என்ன என்பதைப் பார்ப்போம். "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்பது வள்ளுவர் வாக்கு. கிணற்றை எவ்வளவு ஆழமாகத் தோண்டுகிறோமோ அவ்வளவு அதிக நீரைப் பெறலாம். அதுபோல, எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகவும், ஆழமாகவும் கற்கின்றோமோ அந்த அளவிற்கு அறிவு பெற இயலும். நுனிப்புல் மேய்தல்தான் இக்காலத்தில் பெரும்பான்மையோரால் கல்வியாகக் கருதப்படுகின்றது. இத்தகைய மேலோட்டமான கல்வியினால் அறிவு பெறுதல் அரிது. அதிகமாகக் கற்பதைவிட ஆழமாகக் கற்றல் மேலானது.

சென்ற இதழில் அறிவு வேகமாகப்பெருகி வருகின்றது என்றும், ஆனால் காலம் அன்றும், இன்றும் என்றும் ஒரே நிலையாக இருப்பது என்றும் கண்டோம். எனவே விரைந்து கற்க வேண்டும், நிறையக் கற்க வேண்டும், முயன்று கற்க வேண்டும் என்பதையும் கண்டோம்.

" அறிவுடையார் எல்லாம் உடையார்
அறிவிலார்
என்னுடையரேனும் இலர் "

என்ற பேருண்மையைச் சிந்தித்துப் பாருங்கள். பொருட்செல்வம் அழிந்து போகும், கல்விச் செல்வம் காலத்தால் அழிக்கப்பட முடியாது. பொருளினால் மதிக்கப்படுவோன் பொருளை இழந்த பின்னால் மக்களால் மதிக்கப்படுவதில்லை, என்பதை நாம் அறிவோம். அறிவு நிரம்பப் பெற்றவன் ஏழையாக இருந்தாலும் அறிஞர் மதிப்பைப் பெற்றுப் புகழ் பெறுவான். இத்தகைய புகழுக்கு இறப்பே இல்லை.

நமது மாணவர்களில் பலருக்குத் தேர்வுகளில் தவறுவது கவலை தரும் விஷயமாக இல்லை. தான் தவறிய கவலையை விடத் தந்தை கண்டிப்பாரே என்ற அச்சம்தான் முன் நிற்கின்றது. வெற்றி பெறாத மாணவன் தோற்றோர் பட்டியலைப் பார்த்து ஆறுதலும், அமைதியும் பெறுகின்றான் இதன் காரணமாகப் பல ஆண்டுகள் ஒரே வகுப்பில் கவலையின்றி அமர்ந்திருக்கும் இளைஞர்களைக் காணுகின்றோம். இலவசக் கல்வியைக் கூடப் பயன்படுத்திக் கொள்ள முடியாத பல இலட்சம் ஏழைப் பிள்ளைகளைக் கொண்ட நமது நாட்டில் வசதி பெற்ற பலர் தமது காலத்தை இவ்வாறு வீணாக்குவது சரியா? இது அவர்களுடைய சொந்த நஷ்டம் மட்டுமல்ல, நமது நாட்டிற்கே பேரிழப்பாகும்.

தேற வேண்டியவர்கள் தவறுவதன் காரணம் என்ன? பாடங்களைப் படிக்காமல் திரைப்படங்களுக்கும், பொழுதுபோக்கு மன்றங்களுக்கும் சென்று, நேரத்தை வீணாக் கியதின் விளைவுதான் இது. இவர்கள் காலத்தை மதிக்கவில்லை. காலமும் இவர்களை மதிக்காமல் சென்று விட்டது. இதை உணராமல் இவர்கள் தங்கள் விதியையும், வினாத்தாளையும், விடைத்தாள்களைத் தணிக்கை செய்தோரையும் குறை கூறுவது எவ்வாறு பொருந்தும்? இவர்கள் தேர்ச்சி அடையாததற்கு காரணம் நான்கு எனத் திருக்குறள் கூறுகின்றது

முதலாவது காரணம் "நாளைக்கு" "நாளைக்கு" என்று அவ்வப்போது செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாது தள்ளி போட்டுக்கொண்டே போவது. இவர்களுக்கு அந்த "நாளை" என்னும் நாள் வரப் போவதே இல்லை. வெற்றியும் இவர்களைக் கண்டால் "நாளைக்கு" என்று கூறி விலகிச் சென்று விடுகிறது. இரண்டாவது காரணம் ஊன்றிப் படிக்காமல், சிந்தனையைச் சிதறவிட்டுப் படிப்பதனால், படிப்பதை மறந்து விடுதல். இதை வெட்டுக்கிளி மனம் (grasshopper mentality) என்று சொல்லுவார்கள். வெட்டுக்கிளி ஒரு இடத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருக்காது. எந்தப் பக்கம், எப்போது குதிக்கும் என்று யாரும் சொல்ல முடியாது. அதுபோன்றே சிலர் அமைதியாக ஒரு இடத்தில் அமர்ந்து, ஒரு மணி நேரம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

நண்பகல் பன்னிரண்டு மணிக்குக் கதிரவன் காயும்பொழுது கொஞ்சம் பஞ்சை வெயிலில் போட்டால், பல மணி நேரமானாலும் அதில் தீப்பிடிக்காது. ஆனால் உட்குவிந்த கண்ணாடியில் சூரிய கிரணங்களை ஒன்று சேர்த்து பஞ்சின் மேல் பிடித்தால், சில நிமிடங்களில் தீப்பற்றிக் கொள்ளும். அப்படியேதான் ஐம்புலன்களின் வழியாக ஓடும் மனதைத் தடுத்துப் பாடத்தில் செலுத்தினால், இரண்டொரு முறை படித்தாலே அது மனப்பாடம் ஆகிவிடும்.

தவறுவதற்கு மூன்றாவது காரணம் சோம்பல். மாணவர்களின் தோல்விக்கு முக்கிய காரணம் சோம்பல்தான். நமது நாட்டில் வீட்டுப்பாடங்களைச் செய்து வரும் பழக்கம் பிடிபடவில்லை நான் மாலை வேளைகளில் என்னிடம் கற்கும் மாணவர்கள் வீட்டிற்கு, முன்னறிவிப்பின்றி செல்வதுண்டு. அப்பொழுது அவர்களில் பலர் வானொலியின் பக்கத்தில் உட்கார்ந்து பாட்டுக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். சிலர் கூச்சல் போட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருப்பார்கள். மறுநாள் பள்ளிக்கு வரும்பொழுது தங்கள் வீட்டுப் பாடங்களைத் தயார் செய்து வராததற்குப் பல சாக்குப் போக்குகளை ஆசிரியரிடம் சொல்லுவார்கள்.

நான்காவது காரணம் அதிகமான தூக்கம். தூக்கம் மனிதனுக்கு தேவையான ஒன்றே. அது குறைவுபட்டால் பல நோய்கள் வரக்கூடும் என்பதும் உண்மையே. ஆனால் அளவுக்கு அதிகமான தூக்கம் நமக்குத் தோல்வியைத் தரும், "கதிரவன் உதிக்கு முன் படுக்கையை விட்டு எழாதவனை வறுமை விரைவாக அவனை நாடி வரும்" என்று எழுதியுள்ளார் ஞானியர் தலைவன் சாலோமோன். தாமஸ் ஆல்வா எடிசன், காந்திஜி, நேரு, வினோபா ஆகிய பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்த்தால் அவர்கள் சுருமே

...ன்னாக இருந்து. தூக்கத்தை வென்று, உலகப் புகழ் பெற்றனர் என்றுதான் வரலாறு பகர்கின்றது. யார் யார் தன் வாழ்க்கையில் கெட்டுப் போவேன் என்று முடிவு செய்கிறார்களோ, அவர்கள் ஏறிச்செல்லும் அழிவுக் கப்பலில் நான்கு பெரிய ஓட்டைகள் உண்டு.

"1) நெடுநீர் 2) மறவி 3) மடி 4) துயில்
இந்நான்கும் கெடு நீரார் காமக்கலன்"

என்பது குறள். எனவே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற நினைக்கும் இளைஞர்களிடம் இந்த நான்கு குறைபாடுகளும் ஒரு சிறிதும் இருக்கக்கூடாது.

---

## உயர்திரு. 'ஐயா'வின் சமயக் கருத்துக்கள்.
## ( சர்வோதயப் பிரார்த்தனை 9—3—72 )

பழக்கம் கொடிது. பாறை கிழிக்கும் கோழி போன்று பயனற்ற பழக்கத்தைக் கடைப்பிடிப்பதில் பயனேதுமில்லை. தீய பழக்கங்களைக் கற்றுக்கொள்வது மிகச் சுலபம். நல்ல பழக்கங்களை நாம் கைவிடக் கூடாது. அறிவு இருந்தால் மனநிறைவும், நேர் வழியும் கிட்டும். துன்மார்க்கர் வழி நரகத்தில் சேர்க்கும். இம்மையில் துன்பத்தைக் கொடுக்கும். சன்மார்க்கர் வழி மறுமையில் சொர்க்கத்தையளிக்கும். நீச்சல் கற்றுக் கொள்வது போல நல்ல பழக்கங்கள் முதலில் கடினமாகத் தோன்றினாலும் பின்பு நன்மை பயக்கும். பின்னர் வாழ்க்கையில் இன்பம், அமைதி கிட்டும், இறைவன் எல்லாப் பொருளிலும் உள்ளார். கோவிலில் உலகை மறக்கச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

உள்ளம், பெருங்கோவில் - ஐம்புலன்கள், விளக்குகள் வாய், கோபுர வாசல். அகக் கண்ணால் நாம் பார்க்க வேண்டும் நம்மை நடத்தும் ஒளி, இறைவன் திருவருள். உண்மையாய் இறைவனை நம்பினால் ஒருபோதும் கைவிடான். காந்தம் வட திசையை நாடுவது போல உள்ளம் இறைவன்பால் செல்ல வேண்டும். அதுதான் உண்மையான வழி. பாவத்துக்கு இடங் கொடாதே. காலை, மாலைப் பிரார்த்தனையை மறவாதே.

---

## "இறந்தவர்களோடு தொடர்பு கொள்ள முடியுமா ?" என ஒரு மாணாக்கி கேட்ட கேள்விக்கு உயர்திரு. 'ஐயா' அவர்கள் அளித்த பதில்.

நீங்கள் ஒரு கேள்வி எழுதிப் போட்டதாகத் தலைமையாசிரியை என்னிடத்தில் சொன்னார்கள். இறந்து போனவர்களோடு பேச முடியுமா? நாங்கள் பேசலாமா? என்று இரண்டு கேள்வி எழுதப்பட்டிருந்ததாக எனக்கு அவர்கள் வாசித்து காண்பித்தார்கள். இறந்தவர்களோடு பேசலாம். நீங்களும் கூடப் பேசலாம். அது அவ்வளவு கஷ்டமானது அல்ல. ஆனால் முதலிலே இதைப் பற்றி முழுவதும் உங்களுக்குத் தெரிய வேண்டும். மனிதன் எங்கேயிருந்து வந்தான்? மறுபடியும் இறந்த பிறகு எங்கே போகிறான்? மனிதனுக்கு எப்போது அறிவு வந்ததோ அப்போதிருந்தே இந்தக் கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடிக்க அவன் முயற்சி செய்து கொண்டே வந்திருக்கிறான். நான் எங்கிருந்து வந்தேன்? அது ஒரு புரியாத புதிர். திட்டவட்டமாக யாரும் ஒன்றும்

சொல்ல முடியாது. இப்பொழுது நாம் இருக்கிறோம். இந்த மண்ணுலகிலே; அது எல்லோருக்கும் தெரியும். அதன் பிறகு இறந்தால் எங்கே போகிறோம் என்பதும் தெரியாது. ஆகவே முன்பு நமக்குத் தெரியவில்லை. பின்பும் நமக்குத் தெரியவில்லை. இடையிலிருக்கிறது மட்டும் தெரிகிறது. பல்வேறு மதங்கள், பல்வேறு காலத்திலே இதற்குப் பல்வேறு விடைகள் கொடுத்திருக்கிறார்கள். விஞ்ஞானம் இதையெல்லாம் மறுத்து வந்தது. மனிதன் பிறந்தான். பிறகு இருக்கிறான். பிறகு இறந்து போகிறான்; அவ்வளவுதான் — அதற்குப் பிறகு ஒன்றுமே கிடையாது என்று விஞ்ஞானிகள் ஓரளவிற்கு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். இங்கிலாந்து தேசத்திலே நூற்றுக்கணக்கான சங்கங்கள் இருக்கின்றன. பெரிய பெரிய விஞ்ஞானிகள், அறிவாளிகளெல்லாம் அதிலே அங்கத்தினர்களாயிருக்கிறார்கள். அவர்கள் 'The life after death', மரணத்திற்குப் பிறகு மனிதன் என்ன ஆகிறான் என்பதை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அமெரிக்காவிலே அதை விட அதிகமான சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களிலும் இம்மாதிரி ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். நம்முடைய நாட்டிலே அவ்வளவு அதிகம் இல்லை, கல்கத்தாவில் ஒன்று இருக்கிறது. பம்பாயில் ஒன்று இருக்கிறது. இப்படி இரண்டு மூன்று இடத்திலே தான் நம்முடைய நாட்டிலே இறந்தவர்களோடு தொடர்பு கொள்ளும் நிலையங்கள் இருக்கின்றன.

உங்களுக்குக் கொஞ்சம் நுணுக்கமான விஷயத்தைச் சொன்னால் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதன் பனியன் போடுகிறான். பனியனுக்கு மேலே Shirt போடுகிறான். Shirt-க்கு மேலே ஒரு Waist Coat போடுகிறான். அதுக்கு மேலே ஒரு Coat போடுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அது மாதிரி நம்முடைய உடம்பு இப்பொழுது பார்வைக்கு வெளியே தெரிகிறதல்லவா? இந்த உடம்பு சாப்பிடுகிறதினாலே ஏற்படுகிற உடம்பு. இது ஒரு சட்டை - over coat; இதற்கு அன்னமய கோசம் என்று பெயர். கோசம் என்றால் covering என்று அர்த்தம். மேற்சட்டை. அன்னம் என்றால் என்ன? சாப்பாடு. சாப்பாட்டினால் உண்டாகிற வளர்கிற ஒரு சட்டை. பின்னே இதற்குள்ளே இன்னொரு சட்டை இருக்கிறது. அது இந்த அன்னமய கோசத்திற்கு வெளியிலும் வரும். ஆனால் கண்ணுக்குத் தெரியாது இந்த உடம்பு கண்ணுக்குத் தெரிவது போல இரண்டாவது உடம்பு கண்ணுக்குத் தெரியாது. அதற்கு பிராணமயக் கோசம் என்று பெயர். அதற்குள்ளே இன்னொன்று அதைக் கொண்டுதான் நாம் யோசிக்கிறோம். நம்முடைய மனதுக்கு அது உடம்பு. அதற்கு மனோ மயக்கோசம் என்று பெயர். பின்னே அதற்குள்ளே இன்னும் கொஞ்சம் நுட்பமான ஒரு உடம்பு இருக்கிறது. அதற்கு புத்தி உடம்பு என்று பெயர். அதற்கு வடமொழியிலே விஞ்ஞான மயக்கோசம் என்று பெயர். அதற்குள்ளே இன்னொரு உடம்பு இருக்கிறது. அதற்கு ஆனந்த மயக்கோசம் என்று பெயர். இந்த 5 வகை உடம்புகளை ஞாபகத்தில் வைத்துக் கொள். வெளியிலிருந்து உள்ளே போய்க்கொண்டே இருக்கிறோம். அன்ன மயக் கோசம், பிராண மயக் கோசம், மனோ மயக் கோசம், விஞ்ஞான மயக் கோசம், ஆனந்த மயக் கோசம் என்று 5 சட்டையைப் போர்த்திக் கொண்டிருக்கிறவன் நீயும் நானும். ஒவ்வொரு உயிர்க்கும் 5 சட்டை உண்டு.

பின்னே அந்த உயிருக்கு உள்ளிருந்து இந்த உயிரை இயக்குகின்ற ஆள் இந்த வடிவத்தில் போட்டாலும் வேறு எந்த வடிவத்தில் போட்டாலும் இறைவன் நம்முடைய உயிருக்கு, உள்ளேயிருந்து அவன் இயக்கா விட்டால் நம்முடைய உயிர் இயங்காது. இந்த உயிர் இயங்காவிட்டால் இந்த 5 உடம்புகளும் இயங்காது. ஆகவே இதுதான் நான் உங்களுக்குச் சொல்லுகின்ற பூகோளம் - இந்த உடம்பைப் பற்றினது. புரிந்ததா? ஆனால் ஒரு light-ஐ எடுத்துக்கொள். அதன் மேலே 5 bulbs. ஒன்று மேலே ஒன்று மூடுகிற மாதிரி இருக்கிறது. ஒன்றில் light எரிகிறது. ஆனால் அந்த விளக்கினுடைய வெளிச்சம் இந்த 5 கண்ணாடிக் கூடு வழியாக வெளியே வருமில்லையா? அதுபோல நம்முடைய உயிர் இந்த 5 உடம்பையும் இயக்கி ஒவ்வொரு உடம்பும் வெளியிலே வரக் கூடியதாக இருக்கிறது. ஏனென்றால்

உள்ளே போகப் போக நுண்மையான உடம்புகள்; அவையெல்லாம்; இந்த ஸ்தூல உடம்பை போல கனம் இல்லை. கண்ணுக்குப் பார்க்க முடியாது. எந்த வகையாலும் தெரிந்து கொள்ள முடியாதவை. ஆகவே அவைகளுக்கு நுண்ணுடம்புகள் என்று பெயர். இதுதான் நம்முடைய உடம்பைப் பற்றிய தத்துவம்.

அநேகம் பேர் மேல் நாட்டிலே உடம்பு வேறு, உயிர் வேறு என்று கூடத் தெரியாதிருக்கிறார்கள். இந்திய நாட்டில் சின்னக் குழந்தைக்குக் கூடத் தெரியும். உடம்பல்ல நாம்; நாம் இந்த சட்டையல்லவே நாம் போட்டிருக்கிற சட்டை அவ்வளவுதான். இந்த சட்டையை எடுத்து விட்டு இன்னொரு சட்டை போடுகிறோம். அடுத்த நாள். அது போல உயிரானது தான் போடுகிற சட்டை தான் இந்த உடம்பு. இந்த உடம்பு போனால் இந்த உயிருக்கு இன்னொரு உடம்பு வரும்; சந்தேகமே வேண்டாம். ஆகவே உயிர் வேறு உடல் வேறு என்ற பாகுபாடு தெரியாததால்தான் ஏதோ ஒரு உலகத்தில் பிறந்து கொஞ்ச நாள் இருந்து பிறகு செத்துப்போகப் போகிறோம். அதுக்குள்ளாக இந்த உடம்புக்கு வேண்டிய சுகம் எல்லாவற்றையும் அனுபவித்து விடலாம். குடிக்கிற அவ்வளவையும் குடித்துக்கொள். சாப்பிடுகிற அவ்வளவையும் சாப்பிட்டுக்கொள். எப்படி எப்படியெல்லாம் இன்பமான வாழ்க்கை நடத்த வேண்டுமோ அவ்வளவையும் நடத்திக்கொள். புண்ணியம், பாவம் அதெல்லாம் ஒன்றும் கிடையாது. உடம்பு அழிந்தால் நாம் அழிந்தோம். அதற்கு மேல் ஒன்றும் இல்லை என்கிற materialistic theory என்று சொல்லுவார்கள். அதாவது லோகயுதவாதம் அதுதான். இன்று உலகத்தைக் குட்டி சுவராகவும் செய்து வருகிறது. இதிலே நம்முடைய பாரத நாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதைச் சர்ச்சை செய்து திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. ஆகவே பாரத நாட்டின் பிள்ளைகளாகிய நீங்கள் எந்த விதமான ஐயமும் கொள்ளக் கூடாது.

உடம்பு என்றால் என்ன? என்று 5 வகையாகப் பிரித்துக் காண்பித்தேன். அந்த உடம்பைத் தூக்கிக் கொண்டு இயங்குகிற உயிர் என்ன? நீ இந்த உடம்பைத் தூக்கிக் கொண்டு நடக்கிறாய். Running Race ஓடுகிறாய். எவ்வளவு வேகமாய் ஓடுகிறாய்? ஆனால் இதற்கு உள்ளேயிருக்கிற அந்த உயிரானது இந்த உடம்பை விட்டுப் போன உடனே எத்தனை பேர் தூக்க வேண்டும். இதை நான்கு பேர் தூக்க வேண்டும். நீ ஒருத்தி தூக்கிக்கொண்டு திரிந்தாய்; நான் ஒருவன் தூக்கிக்கொண்டு திரிந்தேன்; செத்துப்போன உடனே குறைந்தபட்சம் 4 பேர் அங்கே போகப் போக மாற்றிக் கொண்டேயாக வேண்டும். காவேரிக்கரை வரையிலும் 4 பேர் தூக்கிக்கொண்டு போக முடியாது. ஆகவே, ஒரு பெரிய பாரமாக, சுமையாக வந்து சேர்ந்து விடுகிறது. ஆகவே இந்தப் பாகுபாடு உனக்குத் தெரியும். அழியாதது உயிர். அது என்றும் உள்ளது இந்த உடம்பு எடுப்பதற்கு முன்பும் இருந்தது. இந்த உடம்பை அது இங்கே போட்டு விட்டுப் பிரிந்து போகிற பிறகும் இருக்கும். கோடிக் கோடிக் காலமாக இருக்கும். என்றைக்குமே அழியாது. கடவுள் எப்படி ஆதி அந்தமில்லாதவரோ அது போல உயிரும் ஆதி அந்தமில்லாதது. ஆனால் உள் உடம்பு மட்டும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும் போடுகிற சட்டை போல; இதை முதலில் நீ நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஞானம் உங்களுக்கு ஏற்பட்டால் அதன் பிறகு மரணம் என்றால் என்ன? மரணத்திற்குப் பின்பு மனிதர்களுடைய நிலை என்ன? என்பது பற்றி நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

சிறு குழந்தை 2 வயது. அதை ஒரு photo எடுத்துக்கொள். பின்னே ஒரு 15 வயது ஆன பிறகு ஒரு photo. 35 வயதிலே ஒரு photo. பின் 60, 70 — இப்படிப் பார்த்தால் அந்த 2 வயது குழந்தை photo-விற்கும் அந்த 80 வயது ஆள் photo-விற்கும் ஏதாவது ஒற்றுமை இருக்குமா? இருக்காது. இது வேறு அது வேறாக இருக்கும். ஆகவே விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். நிமிஷத்திற்கு நிமிஷம் நம்முடைய உடம்பு செத்துக் கொண்டே இருக்கிறது. புதிய அணுக்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. நம்முடைய உடம்பில் ஏழு ஆண்டுகள் முடிந்த

வுடனே நம்முடைய உடம்பு முழுவதும் புதிதாக மாறி விடுகிறது என்று விஞ்ஞானிகள் இன்றைக்குக் கணக்கெடுத்திருக்கிறார்- A new body - every 7 years we are getting a new body என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே 2 வயதுக் குழந்தை 20 வயது மனிதன் ஆகி விட்டானே அல்லது 20 வயது பெண்ணாகி விட்டாளே என்று ஒப்பாரி வைக்கிறதுண்டா? இல்லை; ஏன் ஒப்பாரி வைக்கிறதில்லை? 2 வயதுக் குழந்தையாயிருந்தது. "இன்று 20 வயதுக் குழந்தையாகி விட்டது. ஐயோ!" அப்படி என்று யாரும் அழுகிறதில்லை. அதே மாதிரி வயது 50 ஆனாலும் யாரும் அழுகிறதில்லை. 50, 90 ஆனாலும் அழுகிறதில்லை. 90 ல் டப்பென்று செத்துப்போனால்தான் ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அது வைக்க வேண்டிய அவசியமில்லை. ஏதோ தங்களை விட்டு விட்டுப் போகிறார்களே, இருந்தால் தங்களுக்கு கொஞ்சம் உதவியாக இருக்குமே என்று அழுகிறார்களே தவிர செத்து விட்டுப் போகிற ஆளுக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை. அது குறித்து அழ வேண்டிய அவசியமில்லை. நேற்று இரவில் நன்றாகத் தூங்கினேனே, இன்றைக்கு விழித்துக் கொண்டேனே என்று அழுகிறாயா நீ? அப்படித்தான் இறப்பது, பிறப்பது என்பது உறங்குவதும் விழிப்பதும் போல என்று வள்ளுவர் சொன்னார். ஆகவே உறங்குவதைக் குறித்தும் நாம் அழ வேண்டி-யது இல்லை. விழிப்பதைக் குறித்தும் நாம அழ வேண்டியதில்லை. இதுவும் நம்முடைய இந்திய தேசத்தினுடைய பண்பாடு. நம்முடைய தத்துவ சாஸ்திரம்.

ஆகையினாலே மரணம் என்பது பிறக்கும்போதே இரண்டு பக்கமும் உள்ள ஒரு நாணயத்தைப் போல. ஒரு பக்கம் பிறப்பு. இன்னொரு பக்கம் இறப்பு. அதிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆகவே தப்ப முடியாத ஒன்றுக்கு நாம் வருந்த வேண்டிய அவசியமேயில்லை. அதனாலேதான் ஞானிகள் சொல்லுகிறார்கள்.

"போம் பிணந்தன்னைக் கண்டு — இந்த சாம்பிணங்கத்துதையோ, கச்சியேகம்பனே!" என்று பாடினார். அது போகிறது. நாலு பேர் தூக்கிக்கொண்டு; இந்தப் பின்னால் போகிறதெல்லாம் இனிமேல் போகப் போகிறது. ஆகவே "போம் பிணந்தன்னைக் கண்டு இந்த சாம்பிணம் கத்துதையோ, கச்சியேகம்பனே" என்று பாடினார். ஆகவே இதைக் குறித்து வருந்த வேண்டியதில்லை. இதுதான் கீதையினுடைய ஒரு இரகசியமான விஷயம். அர்ச்சுனனுக்கு அதைத்தான் போதிக்கிறார். மனிதனை யாரும் கொல்ல முடியாது. உடம்பைக் கொல்லலாம் மனிதன் சாவதில்லை. அவன் உடம்பு சாகிறது. ஆகவே எது நிரந்தரமானது, நிச்சயமானது எது அழிக்க முடியாதது. வெட்டப்பட முடியாதது, குத்தப்பட முடியாதது, காயாது, நனையாதோ — அது ஆன்மா; அந்த ஆன்மா என்றும் உள்ளது ஏன் அதைக் குறித்து அழுகிறாய் என்று கேட்கிறார். போகிற உடம்பு போய்க்கொண்டேயிருக்கும் மாறி மாறி உடம்பு வந்து கொண்டேயிருக்-கும். ஆகவே அழிவதைக் குறித்து அழுபவன் முட்டாள். ஆனால் நீ அழியாததைக் குறித்து அழிவதாக அழுகிறாயே என்று கேட்கிறார். கீதையினுடைய முக முக்கியமான உபதேசத்-திலே இது ஒன்று.

இனி நீங்கள் கேட்ட கேள்வி, 'இறந்த பிறகு என்ன?' என்று கேட்டிருக்கிறீர்கள். நேற்று உனக்கு 4 பாடம் ஆகி விட்டது English - இல்; இரவில் படித்து விட்டாய். தூங்கி எழுந்து விட்டாய். 5-வது பாடம் படிப்பாயா? 25-வது பாடம் படிப்பாயா? 24 பாடமும் உனக்கு வந்து விடுமா? வராது, ஏன்? ஒவ்வொரு பாடமாகத்தான படித்தாக வேண்டும். ஒவ்வொரு வகுப்பாகத் தான் மேலே போயாக வேண்டும்; அது போல இந்த உயிர் அதனுடைய வளர்ச்சியிலே ஒவ்வொரு தரம் புதிய உடம்பு எடுக்கும் போதும் அது இருந்த நிலையிலே இருந்து அடுத்த வகுப்புக்குப் போகிறது போலத்தான் வருமே தவிர, அந்தப் பத்திரிக் கையிலே அடிக்கிறார்களே. "என்னுடைய தகப்பனார் சிவலோக பதம் அடைந்து விட்டார்" "என்னுடைய தகப்பனார் வைகுண்டம் போய் விட்டார்" இதெல்லாம் ஏமாற்று வித்தை; அவர் சிவலோகமும் போக முடியாது. வைகுண்டமும் போக முடியாது. பிதிர் லோகம் என்று ஒன்றிருக்கிறது.

இறந்தவர்கள் போகக்கூடிய லோகத்திற்கு என்ன என்று சொல்லுவது? பித்திர் லோகம் — பித்ர்கள் என்றால் முன்னால் இருந்தவர்கள். ஆகவே இந்த உயிர் அங்கே செல்லும். சில சமயங்களில் 5 வருடமும் இருக்கலாம் அந்த லோகத்திலே; 10 வருடமும் இருக்கலாம். சில சமயங்களிலே 1000 வருடம் கூட இருக்கலாம். இன்றைக்கும் 2000 வருடங்களுக்கு முன்பு இருந்தவர்களோடு பேசுகிறார்கள். சிகப்பு இந்தியர்கள் அதிலே கெட்டிக்காரர்கள். அந்த Red Indian spirit, "நீ எவ்வளவு காலத்திற்கு முன்பு இருந்தாய்" என்றால் அது சொல்லுகிறது, "இத்தனை ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் இருந்தேன்" என்று சொல்லுகிறது.

சில பேர் உடனே இறந்த ஒரு சில நாட்களிலேயே, மீண்டும் இந்த உலகத்திற்கு வந்து விடுவார்கள். இதைப் பற்றி, வடக்கே பெரிய ஆராய்ச்சி சர்வ கலாசாலையில் நடந்து கொண்டு வருகிறது இப்போதும். இந்தப் படத்தை நீங்கள் பார்த்தீர்களேயானால் இந்தப் பையன் துருக்கி தேசத்திலே இப்போது இருக்கிறான். அவனுக்கு 7, 8 வருடம் இருக்கும் அவ்வளவுதான். அவன் தன்னுடைய போன ஜென்மத்தைப் பற்றி நன்றாக ஞாபகம் வைத்திருக்கிறான். அவன் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவன். இஸ்லாமியர்கள் மறுபிறப்பை நம்புவது கிடையாது. ஆனால் அந்தப் பையன் 2½ வயது பையனாக இருக்கும்போதே வீட்டிலே தொந்தரவு பண்ண ஆரம்பித்தான். "இது என்னுடைய வீடு அல்ல. எனக்கு வேறொரு வீடு இருக்கிறது. என்னை அங்கு கூட்டிக் கொண்டு போ, கூட்டிக் கொண்டு போ", என்று சொன்னான். அவன் அப்பாவிடம் — அவன் அப்பா, "இதென்னடா முட்டாள்! வேறொரு வீடாவது ஒண்ணாவது", என்று திட்ட ஆரம்பித்தார். அதன் பிறகு அவருடைய நண்பர் என்னதான் இவன் சொல்கிறான் பார்க்கலாம் கூட்டிக்கொண்டு போகலாம் என்று கூட்டிக்கொண்டு போனார். கூட்டிக்கொண்டு போனவுடன் ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். இதோ பார் இந்தப் படத்தில் இருக்கும் அம்மாளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். அந்த அம்மாளுக்கு 60-க்கு மேலே வயதாகிறது. அந்த பையனுக்கு அந்தச் சமயத்தில் நான்கோ ஐந்தோ என்னவோதான் வயது — கட்டிப் பிடித்துக்கொண்டு, "நீதான் என் மனைவி" என்றான். "போன ஜென்மத்தில், நீ என் மனைவி உன் பெயர் இதல்லவா? என்றான். "ஆமாம்" என்றாள். எங்கே என் மகள்? என்று கேட்டான். "அதோ இருக்கிறாள்" என்றாள். இந்தப் படத்தில் இருப்பது அவனுடைய மகள். அவனுக்கு வயது 4½. அவள் எவ்வளவு பெரிய பெண் என்று பார்! இது மாதிரி ஒவ்வொன்றாகக் கேட்டான். "நான் ஒரு மோதிரம் வைத்திருந்தேன். அதோ பார். அது அங்கே இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு வா என்றான். இருந்தது. அந்த சமயத்தில் ஐஸ்கிரீம் விற்றுக்கொண்டு சென்றான் ஒருவன். "உங்கப்பாவைக் கூப்பிட்டு எனக்கு ice cream வாங்கிக் கொடு" என்றான். ஐஸ் வாங்கிக் கொடுத்தார். கொடுத்து விட்டு பணம் கொடுக்கப் போனார். அப்பொழுது அந்தப் பையன் சொன்னான், "பணம் கொடுக்காதே" என்று ஐஸ்கிரீம்காரனுக்குப் பணம் கொடுக்காதே என்றான். "ஏன்டா?" என்றான். அவன் சொல்லுகின்றான், "You have forgotten me" என் பெயர் அபீத். போன ஜென்மத்தில் என் பெயர் அபீத் என்பது. You did not sell ice cream before you were selling water melons and vegetables. இப்பொழுது எப்படி ice cream விற்கிறாய்?" என்றான். The ice cream seller had a talk with the boy and became convinced that he was Abeeth reborn as Ismail இந்த ஜென்மத்தில் அவனுக்கு இஸ்மாயில் என்பது பெயர். When Ismail's father was about to pay for the ice cream he bought, he said, "Do not pay him, he owes me money for the water melon — பணங் கொடுக்காதே போன ஜென்மத்தில் அவன் என்னிடம் கோசக்காய் வாங்கிக் கொண்டு இன்னும் பணம் தரவில்லை" என்றான். அதனாலே வாங்கின கடனைத் தப்பித்துக் கொண்டு போக முடியாது. திருப்பிக் கொடுத்துதான் ஆக வேண்டும். எத்தனை ஜென்மம் எடுத்தபோதிலும் கூட வாங்கினதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அது இயற்கையில் ஒரு நியதி. யாரும் எதற்கும் தப்பித்துக் கொள்ள முடியாது.

இதைப் பற்றிப் பெரிய பெரிய ஆராய்ச்சி, இது போல நூற்றுக்கணக்கான படங்கள், நூற்றுக்கணக்கான கட்டுரைகள் இருக்கின்றன. ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது? உயிர் அழியாது, உடல் அழியும்; உயிர் இன்னொரு உடலை எடுத்துக் கொள்ளும். இந்த ஸ்தூல உடலையும் எடுத்துக் கொள்ளும். ஆனால் இறந்த பிறகு போகிற உலகத்திற்கு சூட்சம உலகம் என்று பெயர். இவ்வுள்ளேயிருக்கிற உடம்பு சூட்சம உடம்பு. பிராண மயக் கோசம், மனோ மயக் கோசம், விஞ்ஞான மயக் கோசம், ஆனந்த மயக்கோசம் இவை சூட்சமமானது - ஒன்றை விட ஒன்று சூட்சமமானது; ஆகவே இந்த உலகம் போல இன்னும் பல உலகங்கள் இருக்கின்றன, சூட்சம உலகங்கள்; அந்த உலகங்களிலே அவைகள் சஞ்சரிக்கின்றன. அவரவர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தது போல அந்த உலகங்கள் படிப்படியாய் இருக்கும். படிப்படியாய் என்றால் அடுக்கடுக்காய் என்று அர்த்தமல்ல. நரகம் என்று சொல்லுகிறோமே அதில் கொஞ்சம் இருள், அதைவிட அதிகமான இருள், அதைவிட அதிகமான இருள், முழுக்க முழுக்க ஒன்றும் தெரியாத இருள். அப்படிப் பகுதிகள் உண்டு. வள்ளுவர் அதைக் குறித்து சொல்லுகிறார்.

'அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை
இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்'

இருள் நிறைந்த துன்பத்தைத் தரக் கூடிய ஒரு உலகத்திற்கு அருளை நெஞ்சிலே உடையவர்கள் போக மாட்டார்கள். அவர்களுக்கு நரகமே கிடையாது என்று சொன்னார். ஆகவே அவர் இந்த dark worlds-ல் பல படிகளைச் சொல்லிக் கொண்டே போகிறார். கொஞ்சம் இருட்டு, அதிக இருட்டு. இப்படி மகாபாவம் செய்தவர்களுக்குக் கடுமையான இருள் உலகம். அதே மாதிரி ஒளி உலகங்களும் உண்டு. படிப்படியாக படிப்படியாக அந்த உயிர் செய்திருக்கிற நல்ல காரியங்களுக்குத் தக்கதாக அந்த உயிர் சென்று அங்கே வசிக்கக் கூடிய இடங்கள் பல உண்டு. அது எல்லாம் நம்மைப் பொறுத்துத்தான் இருக்கிறது. தானே தமக்குச் சுற்றமும் தானே தமக்கு விதிவகையும்; நாம்தான் அந்த நரகத்தை உண்டாக்குகிறோம். நாம்தான் நமக்குச் சொர்க்கத்தையும் உண்டாக்கிக் கொள்கிறோம். நம்முடைய கையிலே இருக்கிறது. ஆனால் சொர்க்கம்; நரகம் இரண்டுமே இல்லை, இந்த சொர்க்கத்திற்கு நரகத்திற்கு ஆளை அனுப்புகிற கடவுளும் இல்லை என்று சொல்லுகிறவர்கள் எதை வேண்டுமானாலும் செய்து விடுகிறார்கள்.

இன்றைக்கு உலகத்தில் அப்படி ஒரு பெரிய கொள்கை பரவி வருகிறது. யாரை வேண்டுமானாலும் கொல். என்ன அக்கிரமம் வேண்டுமானாலும் பண்ணு. யார் உன்னைக் கேட்கிறார்கள். இருக்கிறவரையில் ஒரு கூத்தாடு, கும்மாளம் போடு என்று சொல்லி விட்டு - இல்லை, - நீ விரும்புகிறாயோ, விரும்பவில்லையோ அது நடந்தே தீரும். இந்த உலகம் சுற்றுகிறது. 19 மைல் வேகத்திலே ஒரு வினாடிக்கு என்று சொன்னால் இதிலிருந்து நீ தப்ப முடியுமா? முடியாது. நீ நம்புகிறாயோ நம்பவில்லையோ - அதைப் பற்றிக் கவலையில்லை. 365 ¼ நாளிலே ஒரு தரம் பூமி இந்த உலகத்தைச் சுற்றி வருகிறது என்று சொன்னால் நான் அதை நம்பவில்லை என்றால் சூரியன் சுற்றாமலிருக்குமா? பூமி சுற்றாமலிருக்குமா? சுற்றிக் கொண்டிருக்கும் சூரியனும் அப்படித்தான் சுற்றிக்கொண்டு போகிறது. அது உன்னுடைய நம்பிக்கையைப் பொறுத்ததில்லை. It is a biological necessity என்று சொல்லுகிறார்கள் விஞ்ஞானிகள், எப்படி ஒரு குழந்தை கிழவனாகிறானோ அது போல இறந்தவனும் மீண்டும் பிறப்பதென்பது அது ஒரு இன்றியமையாத ஒன்று. அது எடுக்கத்தான் வேண்டியதிருக்கிறது. நீ விரும்பினாலும் விரும்பாமல் போனாலும்; ஆகவே இருக்கும் போதும் நல்லவைகளைச் செய்து கொள்! இதுவரையில் உங்களுக்கு ஒரு கட்டம். மணி இப்போது 9-30. நாளைக்கு பாக்கி சொல்லட்டுமா? அடுத்தது உங்களுக்குப் படங்கள் காட்டுவேன். இறந்தவர்களோடு எப்படி பேசுகிறது என்பதைச் சொல்லுவேன். அப்படிப் பேசுகிறதினால் ஏற்படுகிற பலாபலன்களையும் சொல்லுவேன். இன்றைக்கு இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

## 11–10–1968 அன்று உயர்திரு. 'ஐயா' அவர்களின் சொற்பொழிவு (ஒலிப்பதிவு)

### "இறந்தவர்களோடு பேச முடியுமா?" எனும் விளக்கவுரையின் தொடர்ச்சி:

நீங்கள் நேற்று பார்த்த முக்கியமான விஷயத்தை ஞாபகத்தில் வைத்து இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதில் முதன் முதலாக நான் உங்களுக்கு வலியுறுத்திச் சொன்னது உடம்பு வேறு, உயிர் வேறு. உடம்புக்கு வடமொழியிலே தேகம் என்று சொல்லுவார்கள். சரீரம் என்றும் சொல்லுவார்கள். ஆகவே தேகம் வேறு. அதற்கு உள்ளே இருக்கும் தேகி வேறு. தேகி என்றால் உயிர் அல்லது ஆன்மா. இந்த இரண்டும் வேறு வேறு என்பதை நாம் புரிந்து கொண்டோமேயானால், வாழ்க்கை மிக எளிதாகப் போய்விடும். இரண்டு தட்டு ஒரு தராசிலே இருப்பதாக வைத்துக் கொண்டால், ஒரு தட்டிலே உடம்பு, மற்றொரு தட்டிலே உயிர், நீங்கள் எந்த தட்டிலே இருக்கின்ற பொருள் சிறந்தது என்று கருதுகிறீர்கள். உடல் இருக்கக்கூடிய தட்டு கீழே போய், உயிர் இருக்கக்கூடிய தட்டு மேலே போனால், உடலைப் பற்றிய ஒரு கருத்துத்தான் உங்கள் மனதிலே அதிகமாக இருக்கின்றது என்று அதற்கு அர்த்தம். அதற்கு மாறாக உயிர் வைக்கப்பட்டுள்ள தட்டு கீழே போகுமே. ஆனால் நாம் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்று பொருள். இன்றைய பத்திரிக்கையிலே, மாணாக்கர்களுக்கு என்ற ஒரு பகுதி, 'நவ இந்தியா' பத்திரிக்கையிலே வந்து இருக்கின்றது. அதை நான் கொஞ்சம் அச்சு அடித்து எல்லோருக்கும் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். அதிலே அவர் காந்திஜி சொல்லுகின்ற பல கருத்துக்களிலே, ஒரு கருத்தைச் சொல்கின்றார், உங்கள் பள்ளிக்கூடத்தில் எது சொல்லிக் கொடுக்கின்றார்கள், எது சொல்லிக் கொடுக்கப்படவில்லை என்பது பற்றி நான் கவலைப்படவில்லை. பாஸ் செய்வதற்காகச் சொல்லிக் கொடுக்கின்ற விஷயங்களையெல்லாம் ஒரு தட்டிலே வைத்து, சத்தியம், அஹிம்சை என்ற இரண்டையும் மற்றொரு தட்டிலே வைத்தால் எந்த தட்டு கீழே போகின்றது என்பது பற்றித்தான் நான் கவலைப்படுகின்றேன் என்றார்.

நீங்கள் எவ்வளவோ படிக்கலாம். உங்கள் பெயருக்குப் பின்னால் எவ்வளவோ degree போடலாம். ஆனால் அவ்வளவும் பயன் அற்றது. வாழ்க்கையிலே சத்தியமும், அஹிம்சையும், ஒழுக்கமும் அன்பும் இல்லாவிட்டால் என்பதை நீங்கள் நன்றாக உணர வேண்டும். துர் அதிர்ஷ்டவசமாக, நம் பள்ளிக்கூடத்தில் நடக்கும் படிப்பு எல்லாம் ஏதோ உங்கள் மூளைக்கு சில விஷயங்களை ஏற்றி, பின்பு அதை பரீட்சைத்தாளிலே இறக்கி, அதன் பிறகு சில மார்க்குகளைப் போட்டு, உங்களை மேல் வகுப்புக்கு அனுப்புவதுதான், பரீட்சையினுடைய நோக்கம் அல்லது படிப்பினுடைய நோக்கம் என்று ஆகி விட்டது இந்த நாட்டிலே. உண்மையான கல்வி என்பது நீங்கள் படிக்கின்ற பாடப் புத்தகங்களிலே இல்லை. இப்போ காந்திஜியை நாம் விலை கொடுத்து வாங்கி விடலாம். இதோ நான் ஒரு காந்திஜியை வைத்து இருக்கின்றேன். இதனுடைய விலை என்ன? 10 பைசா. ஆகவே, 10 பைசா கொடுத்து ஒரு காந்திஜியை வாங்கி ஆகி விட்டது. அங்கே உங்கள் தலைமை ஆசிரியை அறைக்கு முன்னாலே, இந்த வகுப்பு அறைக்கு முன்னாலே, ஒரு துணி தொங்குகின்றது - திரை. அதிலே காந்தி. பின்னே அந்த மூன்று குரங்குகளின் படங்கள் இருக்கின்றன. அதனுடைய விலை ஏழரை ரூபாய். இப்படி காந்தியை நாம் வாங்கிக்கொண்டே போகலாம். அவருடைய 'சத்திய சோதனை'-யின் விலை ரூ. 2-75. இப்படி காந்தியை விலை கொடுத்து, இந்த ஒரு வருடமும் வாங்கிக் கொண்டே இருக்கலாம். ஆனால் விலை கொடுத்து வாங்க முடியாத ஒன்றைத்தான் காந்தி சொல்லிக்கொண்டே இருக்கின்றார். ஒன்று சத்தியத்தை என்ன விலை கொடுத்து வாங்கலாம். யோசித்துப்பார். இதை 10 பைசா விலை கொடுத்து வாங்கலாம். 'சத்திய சோதனை' என்ற நூலை ரூ 2-75 கொடுத்து வாங்குகின்றோம். இந்த திரையை ரூ. 7-50 கொடுத்து வாங்குகின்றோம். ஆனால் சத்தியத்தை என்ன விலை

கொடுத்து வாங்க முடியும்? அஹிம்சையை என்ன விலை கொடுத்து வாங்க முடியும்? ஆகவே விலை கொடுத்து வாங்குவது எல்லாம் அழிந்து போகக் கூடியதுதான். எல்லாம் விலை கொடுத்து வாங்குவது நிரந்தரமாக இருக்கவே இருக்காது. அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது. அருளை விலை கொடுத்து வாங்க முடியாது. அஹிம்சையை விலை கொடுத்து வாங்க முடியாது. உண்மையை விலை கொடுத்து வாங்க முடியாது. காந்திஜியைப் பின் பற்றுவது என்று சொன்னால், இந்த விலை கொடுத்து வாங்க முடியாதது உங்களிடத்தில் இருக்கின்றதா? இது எல்லாம் externals. வெளியிலே காந்தியை வழிபடுகின்ற முறை. கோவிலிலே, குருக்கள் கடவுளை வழிபடுகின்ற முறை. பழனிக்குப் போய் பஞ்சாமிர்தம் நீ தலையிலே பெய்து, பாலை ஊற்றி வழிபடுகின்ற முறை. வாழ்க்கை முறை அல்ல. இது வழிபடுகின்ற முறை. ஆனால் காந்திஜி விரும்பியது வாழ்க்கை முறை, வாழ்க்கை மாற்றம். இது இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இது மேலே உள்ள ஓடு — a shell, உமி, உமி நமக்குப் பயன்படாது. அதற்கு உள்ளே இருக்கும் சத்துதான் பயன்படும். அதுபோல நீங்கள் காந்திஜியினுடைய நூற்றாண்டு விழாவை எந்த மாதிரி கொண்டாடுகின்றீர்கள். அதற்கு என்ன என்ன வாங்குகின்றீர்கள், என்ன என்ன செய்கின்றீர்கள் என்பது அல்ல.

அழகாகச் சொன்னான், நேற்று ஒரு அறிஞன், நான் படித்தேன். அது என் மனதை விட்டு நீங்கவில்லை. 'To get good is animal' என்றான். எனக்கு நல்லதேதான் வேண்டும் இந்த உலகத்திலே. ஆரஞ்சுப் பழத்தில், நல்ல பழமாக வேண்டும். துணியில், நல்ல துணி வேண்டும், விலை உயர்ந்த துணி வேண்டும். That is animal, அது மிருகம் கேட்பது, எல்லாம் தனக்கு நல்லது வேண்டும் என்று சொல்லி, 'To do good is to be human'. நல்லதைச் செய்வது எல்லாம் மனிதனுடைய இயல்பு மனிதனாகப் பிறந்தால், அவன் நன்மை செய்யத்தான் பிறந்தான். தீமை செய்யப் பிறந்தானே ஆனால், தீமை செய்வானேயானால், அவன் மிருகம். மனித உடலிலே மிருகம். மூன்றா-

வது, 'To live good is divine' ... வாழ்க்கையிலே நல்லவர்களாக ... தெய்வாம்சம். நாம் பெறுவதை நல்லதாகப் பெற வேண்டும் என்பது ... நிலை ஏதோ. நன்மையை மற்றவர்களுக்கு ... செய்ய வேண்டும் என்பது மக்கள் ... ஆனால் வாழ்வு முழுவதும் நல்லதாக ... வேண்டும் என்பது. அது தெய்வ ... இதை நீங்கள் நன்றாக மனதிலே வைத்துக் ... கொள்ள வேண்டும். ஆகவே நேற்று ... சொன்னதிலே உங்களுக்குத் தெரிந்து ... இருக்க வேண்டும். இந்த தராசுத் தட்டு ... இரண்டு இருக்கின்றது. ஒன்று ... உயிர், இரண்டும் ஒன்றுதான். மற்ற ... தட்டிலே இந்த உடல், இந்த உடலுக்கு ... வேண்டிய தேவைகள். இதிலே, எந்த ... முக்கியத்துவம் கொடுக்கின்றாய் என்பது ... சிந்திக்க வேண்டிய ஒன்று. உடலை அலங் ... காரம் பண்ணுவது, உடலுக்கு உண ... போடுவது. உடலுக்கு உறக்கம் ... உடலை அழகுபடுத்திக் கொள்வது. இந்த ... நீ இருந்தால் நீ தொலைந்தாய். உடலுக்கு ... வரும் இன்னல்களைப் பொறுப்பது. உட ... நிரந்தரமானது அல்ல. அது அழி ... கூடியது, அதை நல்ல முறையிலே ப ... மாக வைத்து இருக்க வேண்டுமே ... அதை வழிபடுவதையே வாழ்க்கைக்கு ... பெரிய குறிக்கோளாக வைக்கக்கூடாது ... என்றால். நீ மேலே போகிறாய். ... உங்களுக்குச் சிறிய பிள்ளைகளுக்கு ... புரிகின்ற வகையிலே நான் பேசுகின்றேன் ... இதிலே இருந்துதான் அடுத்தபடி ... போகப் போகின்றோம்.

இனி, இந்த உடல் அழிந்தால், ... அழிவது இல்லை. இந்த மண், ... காற்று, ஆகாசம், நெருப்பு. இந்த ஐந்தை ... பஞ்ச பூதங்கள் என்று சொல்லுகின்றோம் ... நீ பார்க்கின்ற அவ்வளவும் இந்த ... பூதங்களால் உண்டாக்கப்பட்டது. ... சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ ... அல்லது இந்த பூலோகத்தில் இருக்கின்ற ... எல்லாப் பொருள்களும், இந்த ஐந்தா ... ஆக்கப்பட்டவை. இதில் யாருக்கும் ... சந்தேகம் வேண்டாம். இந்த ஐந்தை ... கொண்டுதான் இந்த உடம்பு படைக்கப்பட்டு ... இருக்கின்றது. இதிலும் யாருக்கும் சந்தேகம் ... வேண்டாம். இந்த உடம்பிலே மண் ...

இருக்கின்றது. நீர் பாகம் இருக்கின்றது. Temperature பார்க்கின்றார்கள் சூடு எவ்வளவு என்று, நெருப்பு பாகம் இருக்கின்றது. மூச்சு போய் வந்து கொண்டு இருந்தால், இந்த உடம்பு ஜீவிக்கும். ஆகவே காற்று பாகம் இருக்கின்றது. நீ சிந்திப்பது எல்லாம் etheric ஆகாச பாகம் இருக்கின்றது ஆகவே, இந்த உடல் ஐந்தாலே ஆக்கப்பட்டது. உலகம் பஞ்ச பூதங்களாலே ஆக்கப்பட்டது. அந்த பஞ்ச பூதங்களை எடுத்துத்தான் இறைவன் நமக்கு இந்த உடலை எடுத்துக் கொடுத்தான். ஆனால் நாம் உடம்பு அல்ல. நமக்குக் கொடுக்கப்பட்டது உடம்பு, இந்த உடம்பு போகும், மீண்டும் வரும், ஆனால் உயிர் என்றும் உள்ளது, அது அழியாது. தோற்றுவிக்கப்படாதது, இறுதி இல்லாதது. கடவுள் எப்படி தோற்றுவிக்கப்படாதவரோ, கடவுளுக்கு எப்படி இறுதி இல்லையோ, அது போல இந்த ஆன்மாவும், தோற்றம் இல்லாதது. மாற்றம் இல்லாதது. அழிவு இல்லாதது. இந்த அடிப்படையிலே வைத்துப் பார்க்கும்போது, நாம் மரணம் அடைகின்றோம் என்று சொன்னால், இந்த ஐந்து பஞ்ச பூதங்களாலே ஆக்கப்பட்ட உடம்பை, இந்த ஸ்தூல உடம்பை இந்த ஐந்து பஞ்ச பூதங்களாலே ஆக்கப்பட்ட உலகத்திலே போட்டுவிட்டு, உயிர் இதைவிட நுண்மையான வேறு உலகங்களுக்குப் போவது என்பதுதான் பொருள். இதற்குத்தான் மரணம் என்று பெயர்.

அப்படி மரணம் அடைகின்ற தருவாயிலே, உடம்பிலே இருக்கக்கூடிய அவ்வளவு சக்தியையும் இந்த ஆன்மா இழுத்துக் கொள்கின்றது. நீ பார்க்கலாம் கொஞ்சம் வயதான, சாகப் போகின்ற நிலையில் இருக்கின்றவர்களை, "பாட்டி நான் யார் தெரிகின்றதா?" பார்க்க மாட்டாள் — கண் விழித்து இருக்கும் — யார் வந்து இருக்கின்றார்கள் என்று தெரியாது — சத்தமாக காது கிட்டே பேசுவாய் — ஆனால் காது கேட்காது. எல்லா அவயங்களும் ஒடுங்குகின்றது. அப்பொழுது இந்த உயிர், செயல்பட்டுக் கொண்டு இருந்த அவ்வளவு சக்தியும், பிராண சக்தியைத் தன்னுள்ளே இழுத்துக் கொள்கின்றது. இழுத்துக் கொண்டு, பின் எந்த சமயத்திலே அது வெளியேறலாமோ, அந்த சமயத்தில் வெளியே போகின்றது. வெளியே போகின்றபோது, கொஞ்சம் அதைப் பார்க்கக் கூடிய சக்தி வாய்ந்தவர்கள், அகக்கண் படைத்தவர்கள்.

Vision என்று சொல்லுவார்கள், அவர்கள் பார்த்தால், அந்த சாகப் போகின்றவர்களின் உடம்பிலிருந்து மற்றொரு உடம்பு வெளியே வரும், ஏறத்தாழ அந்த உடம்பு மாதிரியே இருக்கும். முதலில் தலையிலிருந்து அந்த உடம்பு எழுந்து இருக்கும் கால் வரையில் அது எழுந்து நிற்கும். கால் பெருவிரல் இரண்டிலும் அந்த தொடர்பு இருந்து கொண்டே இருக்கும். பின் அது மேலே போவதற்கு முயற்சி செய்யும். பெருவிரல் இரண்டிலும் இருக்கின்ற தொடர்பு அறுபட்ட உடனே, இது பிணம், அது வேறாக ஓடி விடும். அப்படி ஓடும்பொழுது, இந்த அன்னமய கோசம் ஒன்றுதான் பூமியிலே கிடக்கும். பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் இந்த நான்குடனும் சேர்ந்து உண்மையான உயிர் ஓடி விடும். இங்கே கீழே கிடக்கும் உடம்புக்கு கொஞ்சம் பிரக்ஞை இருக்கலாம். முற்றிலும் சாகாமல் கூட இருக்கலாம். ஆனால் உயிர் அங்கே இல்லை.

ஒரு பல்லி அல்லது அரணையினுடைய வால் துண்டிக்கப்பட்டு விட்டால், அந்த பல்லியோ, அரணையோ ஓடிவிடும். அந்த வால் மட்டும் ஆடிக்கொண்டு இருக்கும். பார்த்து இருப்பீர்கள் நீங்கள், கொஞ்ச நேரம் அதில் உயிர் இருக்கின்றது. அது போல, நம் உடம்பில் இருக்கும் ஒவ்வொரு அணுவிலும் உயிர் இருக்கின்றது. ஆனால் உண்மையான உயிர் அதாவது ஆன்மா என்று சொல்கின்றேன். அது போன பின்பு, இந்த உடம்பிலே கொஞ்சம் பிராண துடிப்பு இருக்கலாம், இதை மண்ணிலே போடக் கூடாது. சில சமயத்திலே, இதை etheric double என்று சொல்லுவார்கள். இது செத்துப்போன பிறகு கூட இதில் இருக்கக் கூடிய பிராண சக்தி, இந்த அரணை வால் துடிப்பது போல வெளியே வந்துவிடும். அது பேயாக வடிவெடுக்கலாம், ஆதலால்

எரித்துவிட்டால், அது அவ்வளவும் அழிந்து விடுகின்றது என்ற தத்துவத்திலேதான் உடலை எரிக்கின்றார்கள். அது வேறு விஷயம். ஆகவே இந்த நான்கு கோசங்களோடு செல்லுகின்ற இந்த ஆன்மா அல்லது உயிர் வேறுவேறு உலகங்களுக்குச் செல்லுகின்றது என்று சொன்னேன். அதிலே அவரவர் செய்த நல்வினை, தீவினையின் பயனாக அவர்களுக்கு உலகங்கள் வந்து வாய்க்கின்றன. ஆகவே, மறு உலகத்திலே எந்த மாதிரி இடம் நமக்கு வேண்டும், இடம் என்று சொன்னால் இந்த மாதிரி ஒரு வரை நான் சொல்லவில்லை. எந்த மாதிரி நிலை வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அதற்கு இப்பொழுதே நீங்கள் வழி வகுத்துக் கொள்ளலாம். பரீட்சை ஏப்ரல் மாதத்தில் நடக்கின்றது என்று சொன்னால், அந்தப் பரீட்சையிலே பாஸ் செய்யவேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருந்தால், அதற்கு வேண்டிய முயற்சியை இப்பொழுதேதான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும், நாளைக்கு பரீட்சை என்று இன்றைக்குப் படித்தால் உங்கள் கதி என்ன ஆகும்? அது போலத்தான் மக்கள் வாழ்க்கையை வாழ்கின்றார்கள். இந்த வயதில் நமக்கு எதற்கு சாமியைப் பற்றி, புண்ணியத்தைப் பற்றி, பாவத்தைப் பற்றி? ஒரு 70, 75 வயதிற்கு மேலே பார்த்துக் கொள்ளலாமே சாமியைப் பற்றி, பூஜையைப் பற்றி, கோவிலைப் பற்றி, புண்ணியத்தைப் பற்றி அதுவரையில் பண்ணாத அக்கிரமம் எல்லாம் பண்ணலாமே — என்று நினைக்கின்றவர்கள்தான் நூற்றுக்கு 99 பேர் இருக்கின்றார்கள்.

'செத்த பிறகு சிவலோகம், வைகுண்டம் சேர்ந்திடலாம்' என்று இருப்பவர் 'பித்தராம் என்று ஊதடா சங்கு' என்றார் பாரதி. அப்படி நினைப்பவர்கள் பைத்தியக்காரர்கள். இன்னும் சில பேரை நான் பார்த்து இருக்கிறேன் இறந்து போனவர்கள் வீட்டிலே, அந்த பிணம் கிடக்கும். அந்த பிணத்துக்கு பக்கத்திலே சுற்றி உட்கார்ந்து கொள்வார்கள் கையிலே திருவாசகம் வைத்துக் கொண்டு, உடனே, 'நமச்சிவாய வாழ்க, தாழ்வாழ்க ; இமைப் பொழுதும் என் நெஞ்சில், நீங்காதான் தாழ்வாழ்க' என்று படிப்பார்கள். 'ஏன் படிக்கின்றாய்?' என்று கேட்டால், இது சொர்க்கத்திற்கு போகுமாம். அட! ஆளுக்கு ரூ. 2½ கொடுத்து ஒரு 20 பேரை வைத்து திருவாசகத்தை கையில் கொடுத்து படிக்க வைத்துவிட்டால், சொர்க்கத்திற்குப் போய் விடலாமே. இதற்கு எதற்கு இத்தனை பாடு வாழ்க்கை முழுவதும்? இது எல்லாம் humbug. இவ்வளவு பித்தலாட்டமும் சமயத்தின் பெயராலே நடக்கின்றது. இருக்கின்றபொழுது கவனிப்பது இல்லை. இவள் எப்பொழுது தொலைவாளோ என்று பார்ப்பது. ஆனால் செத்த பின்பு லட்டு, பாயாசம், வடை; என் அக்காவுக்கு அப்படிப் பண்ணினார்கள். அதனால்தான் சொல்லுகிறேன். என் அக்கா செத்து விட்டாள் போன வாரம். அவளுக்கு கடைசி சிரார்த்தை நடந்தது. போன புதன்கிழமை என்னை சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்றார்கள். போனால், அங்கு லட்டு, வடை, பாயசம் என் அக்கா இருக்கின்றபொழுது வடை, பாயாசம் சாப்பிட்டு இருப்பாளோ என்னவோ, எனக்குத் தெரியாது. இது எல்லாம் வேஷம். இதனாலே நீங்கள் ஒன்றும் தப்பித்துக் கொள்ள முடியாது புரிந்ததா? ஆசையினாலே இருக்கின்றபொழுது, அதுவும் சின்னஞ்சிறிய வயதிலே, பின்னாலோ இல்லை. இப்பொழுதே, ஏன் என்றைக்கு உயிர் போகும் என்று யாருக்குத் தெரியும்?

ஆகவே, 'ஒன்று, அது ஒன்று நன்று அதுவும் இன்று, அதுவும் இன்னே', என்று சொன்னான் கபிலன். இதை நீங்கள் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். செத்துப் போனவர்களைக் கூப்பிடுகிறார்கள், பேசுகிறார்கள். அதுதான் உங்களுக்கு ரொம்ப ஆசையாகக் கேட்கவேண்டும் என்று — கூப்பிடலாம், பேசலாம். ஆனால் நான் முன்னே சொன்னது போல, நேற்று இராத்திரி நீங்கள் எல்லோரும் செத்துப் போனீர்கள். என்ன? ஐயா இப்படி சொல்கின்றாரே? என்று நினைக்காதே. நானும்தான் செத்துப்போனேன். எங்கே கிடந்தேன், எப்படிக் கிடந்தேன் என்று எனக்குத் தெரியாது. நன்றாகத் தூங்கினேன். 4 மணிக்கு மீண்டும் உயிர் வந்தது. விழித்தோம். செத்துச் செத்து விழிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் சாகின்றோம்.

இறக்கின்றோம் சாகின்றோம், பிறக்கின்றோம் அதுபோன்ற ஒரு மாற்றம்தான். இந்த உடம்பிலிருந்து உயிர் போவது ஒரு மாற்றம் அவ்வளவுதான். அதுக்கும் இதுக்கும் வித்தியாசமே கிடையாது. அதனாலே வாழ்க்கை மாறி விட்டது என்று யாரும் நினைக்க வேண்டாம். ஒரு உலோபி, உலோபியாகத்தான் அங்கே போய் இருக்கின்றான். ஒரு கதை, நடந்த கதை, ஒரு கிழவி செத்துப் போனாள். அவள் பணப்பேய் அதற்குப் பிறகு. அவள் என்ன செய்தாள், செத்தபிறகு. ஒரு அம்மையார், உயிருடன் இருக்கின்ற அம்மையார் அங்கு போவார்கள். அது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? போக முடியும்.

'Betwixt Heaven and Earth, அப்படி என்று சொல்லி Ann Briton என்ற அம்மா, செத்தவர்களுடன் பேசக்கூடிய சக்தி உடையவர்கள். அவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். அந்த அம்மா ஒரு நூல் எழுதி உள்ளார்கள். தனக்கும் மாமாவுக்கும் ஒரு வாக்குவாதம் வந்தது. மாமா சொன்னார், செத்தபின்பு நாம் புதைக்கப்பட்ட இடத்தில் தான் இருக்கின்றோம். நாம் எங்கே மற்றொரு இடத்திற்குப் போவது? என்றார். இந்த அம்மா சொன்னாள், 'இல்லை நான் பார்க்கின்றேன், 'செத்தவர்களை எல்லாம் என் முன்னாலே, ஆகவே, செத்தவர்கள் இந்த உடம்பை விட்டுப்போய் மறுபடியும் இங்கு வருகின்றார்கள்' என்றாள் அவள். 'அப்படியானால், நான் செத்தால் உனக்கு வந்து சொல்லிவிடுகிறேன்' என்றார். இவர் இந்த அம்மா சொன்னாள், 'நான் செத்தால் உனக்கு வந்து சொல்லிவிடுகிறேன்' என்று. ஒரு நாள் சனிக்கிழமை இவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரி இல்லை. அப்பா, அம்மா வீட்டை விட்டு வெளியே போய் இருந்தார்கள். திடீரென்று கதவு தானாகத் திறந்தது. 'நான் சொன்ன சொல்லைக் காப்பாத்தி விட்டேன்' என்றார். பார்த்தால் மாமா. அப்படியென்றால் என்ன அர்த்தம்? இவள் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள், அப்பா அம்மா வந்த உடனே, சொன்னாள், இப்படி மாமா இறந்துவிட்டார் என்று 'மாமா வந்து உனக்கு எப்படித் தெரியும்?' 'மாமா விட்டுப் போனார் எங்களுக்குள்ளே இப்படி ஒரு பேச்சு, உடன்படிக்கை இருந்தது' என்று. ஒரு மணி நேரத்தில் தந்தி வந்தது. மாமா typhoid இல் இறந்து விட்டார் என்று. ஆகவே, செத்துப்போன ஒரு மணி நேரத்திற்குள் வந்து சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

இனி, அந்த மாமா இந்தப் பெண்ணைக் கதவை உள்ளே தான் போட்டுக்கொண்டு தூங்கும் போது சூட்சும உடம்பிலே கூட்டிக் கொண்டு போவார். சூட்சும உலகங்களுக்கு அங்கே கூட்டிக்கொண்டு போய் காட்டுவார். இந்த மாமா Pastor ஆக இருந்தவர் என்றால் தெரியுமா? கோவிலிலே கிறிஸ்தவ சமயத்தைப் போதிக்கின்ற போதகராக இருந்தார். ஆகவே அந்த வேலையை அங்கே எடுத்துக்கொண்டார். இந்த அம்மாவைக் கூட்டிக்கொண்டு போவார். இந்த அம்மா கட்டை அங்கே கிடக்கும். ஆனால் அவளுடைய சூட்சும உடம்பு எங்கோ உலகில் சஞ்சரிக்கும். இது இரண்டிற்கும் ஒரு கயிறு இருந்துகொண்டே இருக்கும். இங்கே கிடக்கின்ற உடம்புக்கும், இது எவ்வளவு தூரம் போய் இருந்தாலும், அதற்கும் ஒரு electric current இருக்கும். ஆகையினாலே, இது மூச்சு விட்டுக் கொண்டே இருக்கும். இருதயம் துடித்துக் கொண்டே இருக்கும். திடீரென்று எழுப்பினால், 'டப்' என்று போய் விடும். அந்த கயிறு அறுந்துவிடும். ஆகையால்தான் நம் பெரியவர்கள் கூறுவார்கள், 'தூங்குகின்றவனை எழுப்பாதே ஆயுள் குறைவு' என்று. திடீரென்று தூங்குகின்றவர்களை எழுப்பினால், shock அந்த shock இலே செத்தே போய் விடுவான். ஏனென்றால், அந்த தொடர்பு அறுபட்டு போய் விடுகின்றது. ஆகையால்தான், மெதுவாகத் தட்டி எழுப்பு, திடீரென்று எழுப்பாதே என்று இந்த தத்துவத்தை வைத்துத்தான் ஆயுள் குறைவு என்று சொன்னார்கள்,

ஆக, அந்த அம்மாவை ஒருநாள் அவர் கூட்டிக்கொண்டு போகிறார் என்றால் புரிகின்றதா? அந்த நான்கு கோசங்களுடன் அந்த அம்மா போகின்றாள். இங்கே

அன்னமய கோசம் அல்லது ஸ்தூல உடம்பு உள்ளே கிடக்கின்றது. room-க்குள்ளே, கதவைத் தாள்போட்டுக் கொண்டு இந்த பாட்டி இருக்கின்ற இடத்திற்குப் போனாள். இந்தப் பாட்டி இறந்துபோனவள், அவள் அங்கே நினைத்துக் கொண்டிருக்கிறாள், தான் இன்னும் உயிருடன் இருப்பதாக மடியில் நிறைய sovereign ஐப் போட்டுக் கொண்டு இருக்கின்றாள். ஒரு 10, 20 sovereigns, அது உண்மையான sovereign இல்லை. அவளுடைய கற்பனையிலே, பக்கத்தில் எல்லாம் நின்றுகொண்டு இருக்கின்றார்கள். இறந்து போன ஆட்கள் எல்லாம் அப்பொழுது இந்த அம்மாவிடம் சொல்கின்றார், 'அதோ பார் அங்கே ஒரு கிழவி இருக்கிறாள் அல்லவா? அவள் என்னைக் கண்டால் மிரண்டு கொள்கிறாள். ஏனென்றால், எனக்கு ஒருவிதமான ஒளி இருக்கின்றது. அவள் பார்த்தால், கண் கூசுகின்றது. நீ இப்பொழுதுதான் உலகத்திலேயே இருந்து வருகின்றாய். ஆகையினாலே அவளிடம் பேசு அவள் செத்துப்போய் விட்டாள். இது எல்லாம் காசு அல்ல, அவள் அப்படியும் காசு என்று நினைத்தால் இதை வைத்து ஒரு வீடு கட்டிக் கொள்ளலாமே, வசதியாக இருக்கலாமே, ஏன் இப்படி ஒரு ஓட்டை குடிசையிலே இருக்கின்றாய் அப்படி என்று சொல்லு என்றார். உடனே இவள் போனாள். முதலில் அந்த அம்மாள் மிரண்டு கொள்கிறாள். பின்னாலே தன்னைப் போலவே இருக்கின்றாள் என்று சொல்லி கேட்கின்றாள். அப்பொழுது அந்த கிழவி சொல்கின்றாள், "இதோ பார், இந்த பவுனையெல்லாம் இந்த பக்கத்தில் இருப்பவர்கள் பிடுங்க முயற்சி பண்ணிக்கொண்டு இருக்கிறார்களே" அவ்வளவு பேரும் இறந்து போனவர்கள். ஆனால் உலகத்தில் இருக்கின்ற வரையிலும் இந்த பணம் ஒன்றைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது. ஆகவே, இறந்து போனதற்குப் பின்பும் பணம், பணம், பணம் என்றுதான் அலைகின்றன. ஆகையினாலே, அளவு கடந்து ஒன்றிலும் பற்று வைக்க வேண்டாம். எந்த பற்று இருந்தாலும், அந்தப் பற்றை அனுபவிக்க மறுபடியும் நாம் வந்துதான் ஆக வேண்டும்.

ஆகவே, இந்த அம்மையார் சொன்னார்கள், 'இவ்வளவு பணம் இருக்கின்றதே பாட்டி, நீ ஒரு நல்ல வீடு கட்டிக்கொண்டு சௌக்கியமாக இருக்கலாம், நீ பணத்தைச் சும்மா கையிலே வைத்து இருப்பதினாலே தானே இவ்வளவு பேர் பிடுங்க வருகின்றார்கள்' என்று சொல்லிய பிறகு, 'ஆம் அப்படி செய்கின்றேன்' என்றாள். That is the first lesson she learnt. அப்பொழுது மாமா சொன்னார், 'இனி அவளுக்குக் கொஞ்சம் மேல் உலகம் கிடைக்கும், இப்படி ஒவ்வொன்றாக நாங்கள் சொல்லிச் சொல்லிக் கொடுத்துதான் இந்த உலகத்தில் இருக்கின்றவர்களையும் மேலே நாங்கள் கொண்டு போக வேண்டும். வேறே வழியே கிடையாது', என்று சொல்கின்றார். இதுபோல நிகழ்ச்சி முழுவதையும் 300 பக்கத்தில் எழுதியுள்ளார்கள். அந்த அம்மாள் நிஜமாகவே போய் எங்கெங்கு எல்லாம், என்னென்ன காரியங்கள் செய்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். Betwixt Heaven and Earth by Ann Briton என்ற புத்தகத்திலே.

இப்போ, இந்த புஸ்தகம் சாமி அபேதானந்தா அவர்கள் எழுதியது 'Life beyond Death' மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை எப்படி இருக்கும் என்று சொல்லி, அதிலே இரண்டு. ஒன்று மட்டும் இன்று காட்டுகிறேன். மற்றவை அடுத்த நாள் வைத்துக் கொள்ளலாம். எப்படி பேசுகின்றார்கள் என்பதை நான் நாளைக்கு காட்டுகிறேன். இவர் இந்த ஆவிகளுடன் பேசும் சக்தி உடையவர். ராமகிருஷ்ணா மடத்து சுவாமிஜி அவர் அமெரிக்காவிலே இது குறித்து பெரிய பெரிய சங்கங்கள் இருக்கின்றது என்று சொன்னேன். அவர்கள் மிக அற்புதமான காரியங்களை எல்லாம் செய்வார்கள். ஒரு பெரிய மேஜை இருக்கும். அந்த மேஜையில் ஒரு தகர டப்பா இருக்கும். ஒரு குழல் megaphone. அங்கே ஒரு அம்மா உட்கார்ந்து இருப்பாள். அப்படியே சாமிகள் மயக்கம் போட்டு இருக்கின்ற மாதிரி தன்னை மறந்து உட்கார்ந்து இருப்பாள். உடனே இந்த குழாய் எழுந்திருக்கும். அங்கே ஒரு 20 பேர் உட்கார்ந்து இருப்பார்கள். யாராவது தங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள் இறந்து போனவர்களுடைய

பேச வேண்டும் என்று சொன்னால், உடனே அந்த குழல் அவர்கள் பக்கம் திரும்பும். அதற்கு உள்ளே இருந்து சப்தம் வரும் இவர்கள் கேள்வி கேட்கலாம். பதில் வந்து கொண்டே இருக்கும். அதுவரையில் இந்த அம்மா அப்படி மயக்கத்திலேதான் இருப்பார்கள். அப்படி ஒரு விதமாக இறந்தவர்களுடன் பேசுகின்ற முறை உண்டு இப்படி பல முறைகள் உண்டு. அதிலே இவர் அமெரிக்காவில், இங்கிலாந்தில் எல்லாம் பயிற்சி பெற்றவர்.

ஒரு சமயத்திலே இறந்துபோனவர் ஒருவர். அவர் ஒரு பெரிய சித்திரக்காரர், ஓவியக்காரர். அவர், 'நான் உங்களுக்குக் கிறிஸ்துவினுடைய ஓவியத்தை வரைந்து காட்டுகிறேன்' என்று சொன்னார். செத்துப்போனவர் உயிருடன் இருப்பவர் அல்ல, 'சரி' என்றார். இது அவர் எழுதிய Christ உடைய படம். நீங்கள் இந்த மாதிரி Photo பார்த்திருப்பீர்கள் ஆனால் இது Photo அலல காகிதம் மட்டும் மேஜை மேலே இருந்தது. அந்த காகிதத்தில் யார் எழுதுகிறார்கள் என்பது தெரியாது. அந்த படம் அழகாக அங்கே உருவாகிக்கொண்டே இருந்தது. இறந்து போன ஒருவர், அவர் உயிருடன் இருக்கும் பொழுது பெரிய Painter. இறந்து போன பிறகும் அந்த சக்தி இருக்கின்றது. ஆகவே, நல்லதோ தீயதோ நீ இங்கு சம்பாதிப்பதை எல்லாம் அங்கு கொண்டு போய்தான் ஆக வேண்டும். ஒன்றும் விட்டுவிட்டுப் போக முடியாது. நன்மையைச் சம்பாதித்தாலும் அது அங்கு வரும். தீமையைச் சம்பாதித்தாலும் அங்கே போகும்.

அடுத்தமுறை அவர் கேட்கின்றார், தன்னுடைய நண்பர் யோகேந்திர சுவாமி என்று ராமகிருஷ்ண மடத்து சுவாமி ஒருவர் இறந்து விட்டார். அவரோடு பேசவேண்டும் என்று விரும்பினார். உடனே இரண்டு சிலேட் இது ஒரு slate இது ஒரு slate என்று வைத்தால், இதை மூடி விடுவது. இது மேலே கேள்வியை எழுதி வைத்து விடவேண்டியது. இப்படி நான் வைத்து இருக்கின்ற மாதிரி. அந்த சிலேட்டிற்கு உள்ளே ஒரு பென்சிலை வைத்து விட வேண்டியது. கேள்வி கேட்பவர் slate இனுடைய அடிபாகத்தை பிடித்துக் கொள்வார். அந்த ஆவியை வரவழைப்பவர் மேல்பாகத்தை பிடித்துக் கொள்வார். இனி அந்த கேள்வி முழுவதற்கும் அந்த சிலேட்டிற்குள்ளேயே பதில் எழுதியிருக்கும் அது மாதிரி எழுதிய சிலேட் இது. மூன்று பாஷையிலே இருக்கின்றது. ஒன்று வங்காளி பாஷை, ஒன்று சமஸ்கிருத பாஷை, மற்றொன்று கிரேக்க பாஷை, கீழே கையெழுத்தும் போட்டு இருக்கின்றது. இது அமெரிக்காவிலே நடந்தது. இவர் அமெரிக்கா போனபோது, இந்தியாவில் இறந்த தன் நண்பரோடு பேசுகின்றார். மூடப்பட்ட சிலேட்டிற்குள் பென்சில். அந்த பென்சிலை வைத்து அந்த ஆவி எழுதுகின்றது. மூன்று மொழியில் எழுதியிருக்கின்றது. அப்பொழுது இவர் கேட்கின்றார். சுவாமி அபேதானந்தா, 'என்னுடைய நண்பருக்கு வட மொழி தெரியும், வங்காளி தெரியும், கிரேக்க மொழி தெரியாதே. அப்படி இருக்கும்பொழுது எப்படி கிரேக்க மொழியில் எழுதினார்' என்று சொல்லி உடனே அவரைக் கூட்டிக்கொண்டு வந்த ஆவி சொன்னது, 'கூட பக்கத்தில் ஒரு Greek Philosopher இருக்கின்றார். அவர் கிரேக்க நாட்டு தத்துவ ஞானி. அவர்தான் எழுதியிருக்கின்றார். மேலே இருப்பதை மற்ற இரண்டையும் அவர் நண்பர் எழுதியது' என்று சொன்னார். இது அப்படியே Photo அது. ஆகையினாலே இது சாத்தியம். இந்த அளவிலே நீங்கள் நிறுத்திக் கொள்ளலாம். நாளைக்கு மேலே அதிகமாகப் பார்க்கலாம். மணி 8½ ஆகி விட்டது.

# ஐயாவின் டயரியிலிருந்து . . .

**மார்ச் 1 1967**

என் தகப்பனார் நான் IV பாரம் படிக்கும் போது இறந்து போனார். எப்படியாவது என்னை B.A படிக்க வைத்து விடு என்று என் தாயாரிடம் சொல்லி விட்டு இறந்தார். என் தந்தை இறந்த 15ம் நாள் என் தங்கை இருவரில் ஒருத்தி இறந்தாள். என்னையும் என் தம்பி, என் தங்கை மூவரையும் காப்பாற்றும் பொறுப்பு என் தாயாரைச் சார்ந்தது.

ஒரு அறையில் குடியிருந்து கொண்டு பக்கத்து அறையை 8 ரூபாய் வாடகைக்கு விட்டார்கள். கடலை வறுத்து சந்தைக்குக் கொண்டு போய் விற்று அதனால் வரும் அற்ப ஊதியத்தில் காலம் தாட்ட வேண்டியிருந்தது. தானாக தலையில் மூட்டையைச் சந்தைக்குத் தூக்கிக் கொண்டு போவார்கள். நான் லண்டன்மிஷின் பள்ளியில் படித்து வந்தேன். பள்ளி விட்டதும் வீட்டிற்கு வந்து கடலை வறுப்பேன். தாயார் செய்து வைத்த சாதத்தை கிண்ணியில் போட நான் சாப்பிட்டு விட்டு பள்ளிக்கு ஓடுவேன். S. S. L. C. பரீட்சைக்கு ரூ 12 கட்ட வேண்டியிருந்தது. கையில் பணம் இல்லை. அங்கமுத்து தன் அண்ணியிடம் கேட்டு வாங்கிக் கொடுத்தான். 33 பேர் பரீட்சைக்கு போனதில் 4 பேர் தான் பாஸ் செய்தோம்.

1915 ல் உயர்நிலைப் பள்ளியில் பாஸ் செய்து விட்டு கல்லூரிக்குப் போனேன். அமெரிக்கன் கல்லூரியில் ஒரு வருடத்தில் ரூ 25 சலுகைகாட்டுவதாக எழுதியதால் அங்கு போய்ச் சேர்ந்தேன். பக்கத்து வீட்டில் ரூ 18 மாதம் வாடகை வந்தது. அதை என் தாயார் அப்படியே வாங்கி எனக்கு மணியார்டர் செய்து விடுவார்கள். அதைக் கொண்டு என் கல்லூரி சம்பளம், ஹாஸ்டல் பணத்தையும் கட்டி வந்தேன். இந்த நான்கு ஆண்டுகளில் என் தாயாரும், என் தங்கை மீனாம்பாளும் பட்ட கஷ்டங்களுக்கு அளவே கிடையாது.

1921 ஒத்துழையாமை இயக்கத்தில் ஈ. வெ. ரா. அவர்கள் அழைப்பின் பேரில் ஈடு பட்டேன். இரண்டு ஆண்டுகள் அதில் இருந்தேன். பிறகு மாசன உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினேன். பிறகு 1927 ல் சென்னையில் ஆசிரியர் பயிற்சி எடுத்தேன். 1925 ல் மணம்.

L. T. முடிந்து விட்டு மாசனப் பள்ளியிலே வேலை பார்த்தேன். 1928 ல் சிவகங்கைக்கு வேலைக்குப் போனேன்.

நான் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும்போது Champion எனக்குப் பிரின்சிபாலாக இருந்தார். நான் செக்ரட்டரியாக இருந்தேன். என்னிடம் அவருக்கு அன்பு. எனவே சிவகங்கை ராஜா உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் வேலை காலியான உடன் என்னை சிபார்சு செய்தார். ரூ. 150-10-200 என்ற சம்பளத்தில் E. R. WOOD என்பவர் கலெக்டராக இருந்த போது சேர்த்தப்பட்டேன். 3 வருடம் வேலை பார்த்தேன்.

1932 ஈரோட்டிற்கு மீண்டும் வந்தேன். 1933 ல் தலைமை ஆசிரியரானேன். கல்லூரிப் படிப்புக்கு வாங்கிய கடனைக் கட்டவே முடியவில்லை. வட்டி தான் கட்டிக்கொண்டே வந்தேன். 1945 ல் கலைமகள் கல்வி நிலையம் தொடங்கினேன். 1942 ல் மாசனப் பள்ளியை விட்டு விலகினேன். 1948 ல் பாலாம்பாள் காலமானார்கள்.

கடவுள் கிருபையால் மிஸ் முத்தையா தலைமையாசிரியராக வந்து சேர்ந்தார்கள். பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. கட்டிடங்கள் கட்டப்பட்டன. விரைவில் பள்ளி நல்ல முன்னேற்றமடைந்தது. மனைவியும் மக்களும் செய்யாத அவ்வளவு நன்மையும், பணியும், சேவையும் இவர்கள் செய்தனர். இன்று ஒவ்வொரு பையனுக்கும் ஒரு வீடு கட்டவும், தொழில் செய்யவும் உதவி செய்தவர்கள் அவர்கள்.

# "இறந்தவர்களோடு பேச முடியுமா"?

## 12—10—1968 அன்று உயர்திரு. 'ஐயா' அவர்களின் சொற்பொழிவு (ஒலிப்பதிவு)

நேற்று நாம் பார்த்தோம். சில விஷயங்களை இந்த உடம்பினுடைய நிலையும் அதற்குள்ளே இருக்கிற சரீரங்கள் இந்த உலகைவிட்டு வேறு உலகங்களுக்குப் போகக்கூடிய நிலையையும் அங்கே அந்த ஆவிகள் வாழ்கின்ற ஒரு நிலையையும் — இதையெல்லாம் நேற்று உங்களுக்கு படம் காண்பித்தேன் அதெல்லாம் Photo-க்கள். கையிலே எழுதினவை அல்ல. மிக நுட்பமான போட்டோ படம் பிடித்தால் அந்த ஆவிகளினுடைய உருவமும் அதில் விழும் நீங்கள் இந்த Photo விலே ஒருவரைப் பார்க்கிறீர்கள். அவர் ஒரு வெள்ளைக்காரர். மூக்குக்கண்ணாடி போட்டிருக்கிறார். டை கட்டியிருக்கிறார், Coat போட்டிருக்கிறார். இவர் இறந்துபோனவர். மறு உலகத்திலும் அதே dress-தான். அதே வயசுதான். அதே ஆள்தான் நேற்று நான் சொன்னேனே இந்த புத்தகத்தை எழுதினவர், சுவாமி அபேதானந்தா- அவருடைய நண்பர் ஒருவரைக் கூப்பிட்டார் என்று சொன்னேன். அவரோடு பேச வேண்டுமென்று விரும்பினார். மற்ற ஆவிகள் பேசினவரோடு. அவர் மட்டும் பேசவில்லையாம். உடனே "ஏன் பேசவில்லை" என்று அவர் எழுதிக் காட்டின சிலேட்டை உங்களுக்கு காண்பித்தேன், ஏன் பேசவில்லை என்று நானே யோசித்துப் பார்க்கிற பொழுது அவர் சாகிற போது அவருக்கு double pneumonia. ஜுரம் அவராலே வாய் திறந்து பேசவே முடியவில்லை. அந்த நிலையிலே இறந்துபோனார். ஆகவே இறந்த பிறகும் கூட இன்றும் அவருக்குப் பேச முடியாத ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இந்த உலகத்திலே இருந்து அடுத்த உலகத்துக்குப் போவது என்பது இந்த compound இலே இருந்து விசாலாட்சி கேட்டுக்கு வெளியே போனால் அவள் சுப்புலட்சுமியாக மாறமாட்டாள். அவள் விசாலாட்சிதான். ஆகவே இந்த உலகத்திலே இருந்து ஒரு உயிர் இன்னொரு உலகத்துக்குப் போனால் dress-உம் அப்படித்தான் இருக்கிறது. கீழே ஆங்கிலத்தில் அவர் எழுதியிருக்கிறார். "The portrait of a dis-embodied spirit with spectacles in his eyes before the medium" என்று சொல்லி இதுமாதிரி இதிலே நிறைய இருக்கிறது சிலசமயங்களிலே medium, medium என்று சொன்னால் அந்த ஆவிகளை வரவழைக்கிறவர்கள் சிலர் உண்டு அவர்களிடத்திலே ஒரு சக்தி இருக்கிறது. அந்தசக்தியின் காரணமாக நம்கோவில்களிலே பூசாரி சாமியாடுகிறானே அது போல. அந்தசக்தியின் காரணமாக அந்த ஆவிகள் அங்கே வருகின்றன. ஆனால் இந்த ஆவிகளைக் கூட்டிக் கொண்டு வருவதற்கு சிலர் agent மாதிரி இருக்கிறார்கள் அங்கே இந்த சாமியாடி-அல்லது medium என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோம். அவர் கண்ணை மூடி தன்னோடு உதவி செய்கிற இன்னொரு spirit-ஒரு ஆவியை அழைத்தால் அந்த ஆவி வரும் பின்னர் முன்னாலே உட்கார்ந்திருக்கிறவர்கள் யார் யாரைக் கூட்டிக் கொண்டு வரச்சொல்லுகிறார்களோ அவர்களை இவர் கூட்டிக் கொண்டு வருவார். இறந்து போனவர்தான் அவரும், கூட்டிக் கொண்டு வருவார் பின்னே போகவைப்பார். ஆகவே அப்படியே நாற்காலியில் படுத்துக் கிடப்பார் அந்த மீடியம் என்று சொல்லக் கூடியவர் அந்த மீடியத்தின் மூலமாக மற்றதெல்லாம் நடக்கும். சிலசமயங்களில் 30 பேர் 40 பேர் கூட வந்து விடுவார்கள் அந்த அறைக்கு. இதிலே பார்த்தால் இதுதான் medium. அதோ ஒரு பெண். அவளைச் சுற்றிலும் ஆவிகள் இருப்பதைப் பார்க்கலாம் ஒரு 30, 40 பேர் அந்த அறைக்குள்ளே வந்து விட்டார்கள் போனவர்கள் ஏன் என்றால் அவர்களோடு சம்பந்தப்பட்ட நண்பர்கள் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். அவர்களோடு பேச வேண்டும் என்ற ஆவலினாலே அவ்வளவு பேரும் அங்கே வந்து சேர்ந்துவிட்டார்கள். ஆகவே இறந்து போனவர்களோடு எப்படி நீங்கள் பேச வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களோ அப்படித்தான் அவர்களும் உங்களோடு பேச வேண்டு-

மென்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் நேராக அவர்கள் உங்களோடு பேசமுடியாது அதிலே பயிற்சி பெற்ற ஆசிரியரும் அங்கே இருப்பார். அவர் மூலமாகத்தான் பேசவேண்டியிருக்கும் என்பதற்காக இதை நான் உங்களுக்குக் காண்பித்தேன். இந்த படத்திலே நீங்கள் பார்க்கலாம். ஒரு 5, 6 ஆவிகள் இருப்பதைப் பார்க்கலாம். அவர்களைச் சுற்றி ஒரு புகை மாதிரி வெண்மையாகத் தெரிவதும் உங்களுக்கு இந்த படத்திலிருந்து தெரியும். அதற்கு ஆங்கிலத்திலே ectoplasm என்று பெயர். Ectoplasm என்று சொன்னால் ஒருவர் மயக்கம் போட்டு Chair-லே சாய்ந்து கொண்டு இருப்பார் அவர் மூலமாகத்தான் இந்த ஆவிகள் வந்து எழுதுவதை எழுதும். பேசு என்றால் பேசும், எல்லாம் செய்யும் அவர் உடம்பிலே இருந்து நீராவிபோல ஆனால் கண்ணுக்குத் தெரியாத. இந்த photo -விலே இருக்கிறது — நீராவி போன்ற ஒரு வஸ்து வெளியே வரும். புகை போல இருக்கும் அது. அதற்கு இந்த விஞ்ஞானத்திலே பயிற்சி உள்ளவர்கள் ectoplasm என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த எக்டோபிளாஸத்தை தனக்குப் போர்வையாக போர்த்துக் கொண்டு இறந்து போன ஆவிகள் உருவெடுக்கின்றன. அப்படி உருவம் எடுத்தபிறகு நீங்கள் கை குலுக்கலாம். அவர்களோடு, கட்டிப் பிடித்து பேசலாம். அவர்களோடு கண்ணால் பார்க்கலாம். மேலே இருக்கிற படத்திலே. ஒரு piano இருக்கிறது உங்களுக்குத் தெரியும். ஒரு ஆவி piano வாசிக்கிறது. அதனுடைய கைமட்டும் தெரிகிறது. அந்தக்கை அதற்கு இது materialisation of spirit என்று பெயர். கண்ணுக்குத் தெரியாமல் காதுக்கு மட்டும் சப்தம் கேட்கும். சிலசமயங்களிலே ஆனால் அந்த மீடியத்தினிடத்திலே நிறைய சக்தி இருக்குமேயானால் அந்த மீடியம் இறந்து போனவரை அப்படியே நிஜமாக சாகிறதற்கு முன்பு எப்படி இருந்தாரோ அப்படியே கொண்டுவந்து விடும். அதற்கு materialisation of spirit என்று பெயர். அப்போ நீங்கள் கை குலுக்கலாம் walking போகலாம். எல்லாம் செய்யலாம். செத்துப் போனார்கள் என்று கவலையே பட வேண்டிய அவசியம் இல்லை இது இவ்வளவும் நான் சொல்வது செத்ததற்கு நீங்கள் அழக் கூடாது என்பதற்குத்தான். வருத்தப்படவே கூடாது. இது ஒரு இயற்கை சம்பவம். நான் நேற்று சொன்னாற்போல் படுத்துத் தூங்கி எழுந்தவனைக் குறித்து யார் அழுகிறார்கள்? இல்லை. இது போல் நிறைய படங்கள் இதில் இருக்கின்றன. சுமார் ஒரு 100 புத்தகமாவது நான் படித்திருப்பேன். இதைப்பற்றி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கிறது. இதைப்பற்றி ஒரு மனிதன் இதையே படித்துக்கொண்டிருக்கலாம் என்றால் 50 வருஷத்திற்குப்படிக்கிற அளவுக்கு புத்தகங்கள் இருக்கிறது இது பற்றி. ஆனால் நான் ஒரு 100 புத்தகங்கள் படித்திருக்கிறேன். ஆகையினாலேதான் இதைப்பற்றி உங்களுக்கு சொல்லுகிறதற்கு எனக்குஉரிமை உண்டு. நான் பேசியும் இருக்கிறேன். பல முறைகள் இருக்கிறது பேசுவதற்கு அது எப்படி என்று நான் சொல்லவில்லை. ஒரு சிலேட் மாதிரி இருக்கும். ஒரு பலகை 2½ அடிக்கு 2½ என்று வைத்துக் கொள்ளலாம். அதில் A, B, C, D என்று அந்த எழுத்துக்களை எல்லாம் chalk கட்டியில் எழுதலாம். ஒரு கருப்புப் பலகையிலே centreல் ஒரு coin-ஓ அல்லது இந்த மைக் கூட்டினுடைய மூடி இருக்கின்றதே ink bottle மூடி அதை வைக்கலாம். வடக்கே பார்த்து ஒருத்தர் உட்கார வேண்டும். தெற்கே ஒருத்தர் பார்த்து உட்கார வேண்டும் கொஞ்ச நேரம் தியானம் பண்ண வேண்டும். எவர் வர வேண்டும் என்று நினைக்கிறமோ அவரை நினைத்து தியானம் பண்ணி இந்த விரலை இரண்டு பேரும் பக்கம் பக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கண்ணாடி மேலே - அந்த மூடி மேலே உடனே அந்த மூடி நகர ஆரம்பிக்கும். நீ நகர்த்தவே கூடாது. சும்மா கை அப்படி தொட்டுக்கொண்டு தான் இருக்க வேண்டும். அந்த மூடி நகரும் பக்கத்திலே ஒருத்தர் உட்கார்ந்திருக்க வேண்டும். எந்தெந்த எழுத்துக்கு அந்த மூடி இழுத்துக் கொண்டு போகின்றதோ அதைக்குறித்துக் கொண்டே இருக்க வேண்டும் அப்பொழுது 'a' என்று வந்தால் நீ 'a' என்று எழுத வேண்டும். அடுத்தது இன்னொரு எழுத்து வந்தால் அதைஎழுத வேண்டும். கடைசியில் பார்த்தால் அது வார்த்தையாக இருக்கும். விஷயம் இருக்கும். நான் இப்படி பேசிக்கொண்டு இருந்தேன் ஒருத்தரோட ஒரு ஆவியோட இடையிலே திடீர் கொஞ்சம் break வந்தது. வந்ததும் அடுத்தாற்போல் எனக்கு புரியாத

ஒரு பாஷை வந்து விட்டது. ஆனால் கூட எழுதியவர் அதைக் கண்டுபிடித்தார். எனக்கு அதிலே 'ஹாமரா நாம் ஜாபர் ஹை' என்று வந்தது. நான் தமிழிலே பேசிக்கிட்டு இருக்கேன் - 'ஹாமரா நாம் ஜாபர் ஹை' ன்னா எனக்குப் புரியவில்லை அப்புறம் நான் அந்த ஆவியைக் கேட்டேன் 'இது என்ன குறுக்கே, என்று நானும் நீங்களும் பேசிக்கிட்டு இருக்கிறபோது இன்னொருத்தர் வந்திட்டாரு. அவரு நான் பேசவேண்டும். நான் விலகி நின்னேன். அவர் பேரைச் சொல்லிவிட்டு போய் விட்டார்' என்றான். செத்துப் போனவர் ஒரு முஸ்லீம். அவருக்கு ஒரு ஆசை. நம்மகிட்ட பேசணும்னு பேரை சொல்லிவிட்டு அவர் கிளம்பி விட்டார். இது மாதிரி வேண்டாதவர்கள் எல்லாம் கூட வந்து சேர்ந்து விடுவார்கள் சில சமயங்களில். ஆகவே அவர்களும் நம்மைப் போல குற்றம் குறைபாடு உள்ளவர்கள்தான். பித்ருலோகத்தில் உள்ளவர்கள்தான் இங்கே நாம் வளர்ச்சி அடைவது போல அங்கே அவர்களும் வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள் இங்கே நமக்கு அறிவு பெறுவது போல அங்கேயும் அறிவுப் பெருக்கம் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு ஜென்மங்கள், ஜென்மங்கள் தோறும் படிப்படியாக மனிதன் வளர்ந்து வளர்ந்து கடைசியாக உடலே இல்லாத பரமான்மாவோடு இந்த ஜீவ ஆன்மா ஐக்கியமாகிற நிலை வரையிலும் இது கோடி கோடி வருஷத்திற்கு நடந்து கொண்டே இருக்கிறது. ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. நம்ம நாட்டுக்காரர்க்கு இது ஆச்சரியத்தை ஊட்ட வேண்டிய அவசியமே இல்லை. இதில் பல விதமானவை உண்டு. இப்போ இந்த மேஜை இருக்கிறது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த மேஜை மீது கையை வைத்துக் கொண்டால், இது தானாக 3 அடி. 2 அடி உயர்ந்திடும் — மேலே வந்திடும். 'Table tilting' என்று பெயர் அந்த மேஜை dance பண்ணும் தானாக — அது அந்த ஆவிகளுடைய விஷயம். அது எல்லாம் உட்கார்ந்திருக்கிற அறையில் ஒரு electric bulb மாதிரி ஒரு பந்து — நெருப்புப் பந்து வரும். அது தான் பாட்டுக்கு ஓடும். நினைத்த இடமெல்லாம் சுற்றும். அது சுடாது. அது அந்த ஆவி வந்து இருக்கிறது என்பதற்கு அடையாளம். இப்படி நூற்றுக் கணக்கான அடையாளங்கள் உண்டு அந்த ஆவி வந்திருக்கிறது பேசுகிறது என்பதற்கு. நான் நேற்று சொன்னேனே அந்த megaphoneல்ல பேசறது — அதெல்லாம். Oliver Lodge என்பவர் Sir title வாங்கியவர். Physics இல் அவ்வளவு கெட்டிக்காரர். அவருடைய மகன் இறந்து போனான் முதல் மகா யுத்தத்திலே. அந்த மகா யுத்தத்திலே இறந்த பையனோட இவர் பேசுகிறார். Raymondன்னு பெயர் அவனுக்கு. பெரிய புஸ்தகம் Raymond Revisedன்னு இப்போ வெளி வந்திருக்கிறது. இந்தப் பையன் தகப்பனாரோட பேசறான். எங்களுடைய உலகத்துக்கு ஆயிரக்கணக்கான soldiers வருகிறார்கள். செத்துப் போனவர்களெல்லாம் அங்கே போகிறார்கள். soldier - ஆகத்தான். ஆனால் அங்கே யார் இருக்கிறார்கள் சண்டை போடறதுக்கு? இருந்த போதிலும் அவர்கள் கையிலே gun வைச்சுகிட்டு ஒருத்தனை ஒருத்தன் குத்திக்கொண்டு திரிகிறான். அங்கே gunம் கிடையாது. குத்த வேண்டியதும் இல்லை. இதனுடைய continuity இந்த உலகத்திலே சண்டை போட்ட அதே எண்ணத்திலே அவன் அங்கேயும் வந்து வந்து குத்துகிறான். சண்டை போடுகிறான். நீங்க கொஞ்சம் சொல்லி வையுங்களேன். இந்த உலகத்திலே செத்துப்போன பிறகு இதெல்லாம் ஒன்றும் கிடையாது. ஆகவே இந்த மாதிரி ஏதாவது அவர்களுக்கு ஒரு அறிவைக் கொடுத்தால் இறந்த பிறகு நாம் பல நிலைகளுக்குச் செல்லுகிறோம். இந்த உலகத்திலே எப்படி வாழ்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான் நமக்கு அடுத்த உலகம் அமையும். தீமை செய்தவன் நல்ல உலகத்துக்கும் நன்மை செய்தவன் தீய உலகத்துக்கும் போவதென்பது இயற்கையின் சட்டத்தின்படி அது நடவாத காரியம். இந்தச் சட்டம்தான் அங்கேயும் அமுலாகிறது. இதே கடவுள் தான் அங்கேயும் இருக்கிறார். ஆகையினாலே அங்கே வந்த உடனே ஏதோ தீமைக்கு நன்மை ஏற்படும் என்று யாரும் நினைக்க வேண்டாம் என்று 'Raymond Revised' என்ற நூலிலே அழகாகச் சொல்லுகிறார். இன்னொரு 'On the Border of Etheric' என்ற ஒரு புத்தகம் இருக்கிறது. அதிலே இந்த soldiers சண்டை போட்டு-

கிட்டே இருக்கிறான். திடீர்னு குண்டு பட்டு 'ஒருவன்' செத்து விழுந்து விடுகிறான். பக்கத்திலே இருந்து சண்டை போட்டுகிட்டு இருக்கிறவன் — இப்படி தோளிலே belt போட்டவன் இருப்பான். அதுக்குள்ளே தோட்டா இருக்கும். அவனுடைய தோட்டா எல்லாம் தீர்ந்து விட்டது. உடனே செத்து கீழே கிடக்கிறானே அவனுடைய beltலே தோட்டா இருந்தது. அந்தத் தோட்டாவை உருவுகிறான். உருவுகிறபோது அவனுடைய ஒரு காலித்தோட்டா பையிலே புகையிலை வைத்திருந்தான். அவன் புகையிலை போடற வன் அதையும் எடுத்தான். பக்கத்திலே இந்த செத்துப் போனவனோட ஆவி நின்னுகிட்டு இருக்குது. அவன் dead-body கீழே கிடக்குது. இவன் astral bodyலே நிக்கறான். இவன் புகையிலையை எடுத்தவுடன், ஓ...ங்கி மண்டையிலே அடித்தான்: 'ஏண்டா என் புகையிலையை எடுக்கிறாய்?' என்று. ஆனால் அவனுக்குத் தெரியாது ஆகவே புகையிலை போட்ட அந்த வாசனை அதுக்குப் பிறகும் கூட அந்த புகையிலை-யைத் தேடிக்கொண்டு அங்கே வருகிறது. இது மாதிரி எத்தனையோ ஆயிரக்கணக் கான சம்பவங்கள் நீங்கள் அந்தப் புத்தகங் களைப் படிக்கும்போது இருக்கிறது. நான் உங்களுக்குச் சொல்லப் போகிறது அதிகமாக இதைப்பற்றி நான் விளக்க விரும்பவில்லை. கடைசியாக நான் உங்களுக்குச் சொல்லு-வதை நீங்கள் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இவரே அந்த ஆவிகளோட பேசினவர்னு நான் சொன்னேன். ஆனால் அவர் எழுதினதை நீங்கள் கவனிக்க வேண்டும். அவர் சொல்கிறார், இது மாதிரி நீங்கள் ஆவிகளோடே பேசாதீர்கள், அமெரிக்காவிலே ரொம்ப ஜாஸ்தி இது — செத்தவங்களை கூப்பிட்டுப் பேசறது அது என்ன ஆகிறது உங்களுக்கு என்ன செய்கிறது என்பதை வெகு அழகா அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவங்கள் எல்லாம் உலகத்தோடே தொடர்பு கொண்ட வர்கள்தான் வருவார்கள். இப்போ காந்தி-யைக் கூப்பிட்டா வரவே மாட்டார். அவருக்கு இங்கே வர வேணும் என்கிற அவசியமேயில்லை. அவர் அந்த மேல் உலகத்திலே மிக உயர்ந்த பதவியிலே இருப்பார். 'சுடில்லாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே, என்னுடைய அன்பேன்னு' பாடுகிறார் மாணிக்கவாசகர். அது போல எத்தனையோ stages இருக்கிறது. angelic stage என்று இருக்கிறது. அந்த highest stage. அங்கே angels இருப்பார்கள். அவர்கள் தினம் உங்களுக்கு 'O Lord give me a pepermint' என்றால் ஒரு angel ஐ அனுப்பி ஒரு pepermint கொண்டு வந்து போடுவாரோ, நம்ம பிரார்த்தனை அதுக்குத்-தான் பயன்படும். பெப்பர்மெண்டு கேட்பதற்கும் biscuit கேட்பதற்குமே தான் ஆகிறதே தவிர உன்னோடு, நான் வரவேண்டும் என்று அப்படிக் கேட்க மாட்டோமே. அதைத்தான் சொல்கிறார். "Such earth bound spiritts may take the form of a great wise man or a sage and appear in zeons and pretend to give the highest truth but sensible persons will easily find out how deceitful scme of them are இந்த உலகத்திலே இருந்து அப்படித்தான் போன-வர்கள் அங்கிருந்து வருவார்கள். நான் பெரிய ஞானி, தியாகி, நான் உனக்கு உண்மை சொல்லப் போறேன். அப்படி இப்படின்னு ஆரம்பிப்பார்கள். அவ்வளவும் பொய்யாய்ப் பேசிடுவார்கள். இன்றும் அங்கே பொய் பேச மாட்டாங்கன்னு நினைக்காதே. பொய் பேசிவிடுவார்கள் உங்களை ஏமாற்றி விட்டும் சென்று விடுவார் கள், ஆகையினாலே இதை நம்பாதே. We must be very careful in dealing with the spirits. I have seen people who after investigating spiritualism and seeing all these phenomena have lost all faith and have become atheists in their ideals. அது இப்படி சொல்லுது அப்படி சொல்லுது அந்த spirit அப்படிச் சொல்லுது. நான் சிவபெருமானை நேரப் பார்த்தேன். இன்னைக்குக் காலையிலே போயிருந்தேன். அவர் என்ன பண்ணிக் கொண்டிருந்தார் — அவர் ரிஷபத்தின் மேலே உட்கார்ந்து கொண்டு தியானம் பண்ணிக்கொண்டிருந்-தாராக்கும். ஒரு spirit, நான் கேட்டுக்-கிறேன் அப்படியே, இவர் அங்கே போனாராம், சிவபெருமான் அங்கே உட்கார்ந்திட்டு இருந்தாராம். இன்னொரு spirit வரும். நான் இயேசுநாதரைப் பார்த்-தேன். என்ன பண்ணிக் கொண்டிருந்தார்? அவர் அங்கே உட்கார்ந்து கையை விரித்துக் கொண்டு எல்லாரையும் ஆசீர்வதித்துக்

கொண்டிருந்தார். இப்படி ஒரு கப்சா அடிக்கும் இது மாதிரியெல்லாம் சொல்லும். தான் பெரிய ஆள் என்று காண்பிக்கிறதற்கு இதெல்லாம் ஏமாற்றுவித்தை அப்படிச் செய்துவிட்டா நம்பிக்கையே போய்விடும் சந்நிதியிலே, கடவுளிடத்திலே நம்பிக்கை போகும். The seekers after truth in India have searched and gained experience for thousands of years in studying the character of the earthbound and also the highest spirits. இந்த spiritலேயே பல படிகள் இருக்கு என்று நான் முன்னமே சொன்னேன். இந்த உலகத்திலே மனிதர்களுக்குள்ளே மகாத்துமா இருந்தாரோ அதுபோல அவர்களுக்குள்ளே மகாத்துமாக்கள் இருக்கிறார்கள். நான் உங்களுக்கும் படம் காண்பிக்கணும்னு நினைக்கிறேன். இந்த சாதாரண மனிதனுடைய உருவம். இன்னும் ஞானம் அறிவு வளர்ச்சி பெற்ற உருவம் நீங்கள் பார்த்தீர்களே ஆகவே அதுமாதிரி நிலைமை வரும். The spirits are not angels as the spiritualists claim but they are in reality earth bound spirits. Modern spiritualism encourages the hope of meeting the departed spirits of our friends and relatives and may bring consolation in the minds of those that doubt their existence. அவர்களுக்கு மனதுக்கு சாந்தி நம்மை விட்டுப் போனவர்கள் இன்னும் இருக்கிறார்கள் அந்த நிலையிலே இருக்கிறார்கள் என்கிற சாந்தி ஏற்படுகிறதே தவிர அதனாலே ஒரு பெரிய நன்மை நமக்கு ஏற்படப் போகிறதில்லை. செத்தவர்கள் எங்கேயும் போகவில்லை. இருக்கிறார்கள். விரும்பினால் நம்மிடம் வருவார்கள். நீ தியானம் பண்ணினால் உனக்குத் தெரியாமலே வந்து உனக்கு உதவி செய்வார்கள். நீ கண்ணாலே பார்க்கவேண்டும் என்பது இல்லை. அவர்கள் வருவார்கள் என்று நீ வேண்டும்பொழுது வருவாரம். கண்ணைமூடி தியானத்தாலே பார்க்கலாம். அதிலே சந்தேகம் இல்லாமல் நான் பார்த்திருக்கிறேன் அதுவும் சரி. அது உண்டு உங்களுக்கு ஆனால் நீங்கள் தீமை செய்கிறபொழுது கூட அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். 'அப்பா செத்துப் போய்விட்டார். நான் ஒரு தப்புப் பண்ணினால் அப்பா பார்க்கிறாரா' என்றால் நிச்சயமாகப் பார்க்கிறார். இதில் பெரிய

பெரிய புத்தகங்கள் இருக்கிறது. நீ வளர்த்த நாய் உன்கூட ஓடிவருவதைப் பார்க்கலாம். செத்த பின்பு அந்த நாய் செத்துப்போயிருக்கும். ஆனால் நீ போகிற இடமெல்லாம் அந்த நாய் வரும். ஒரு சமயத்தில் ஒரு குழந்தை கட்டிலில் படுத்து இருந்தது ஆப்பிரிக்கா தேசத்திலே அங்கு ஒரு பெரிய பாம்பு உண்டு. அது அதிகக் கடுமையான விஷம் உடைய பாம்பு. அது கட்டிலுக்கு அடியில் வந்துவிட்டது. தகப்பனார் இல்லை. தாயார்தான் அங்கு இருந்தாள். ஆனால் அந்த அறைக்குள்ளே ஒரு நாய் குலைக்கிற சத்தம் கேட்டது. அங்கு நாய் இல்லை அவர்களிடம். தாங்கள் வைத்திருந்த ஒரு நாய் செத்துப் போய்விட்டது. உடனே ஓடி வந்து பார்த்தால் அந்த கட்டிலுக் கடியில் ஒரு பெரிய பாம்பு படுத்திருந்தது' இந்த நாயினுடைய சத்தம் கேட்டு அது வெளியே போகிறது. இந்த நாய் அவர்கள் வளர்த்த நாய், செத்துப் போய்விட்டது. ஆனால் செத்துபோன பிறகு கூட அக்குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று astral body இல் இருந்து materialise ஆகி நிஜமான நாயாக வந்து துரத்திவிட்டுப் போனது. ஆகவே நாம் வளர்த்த பூனை, நாய் எல்லாம் கூட astral worin இல் இருக்கின்றன. அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். சும்மா உங்களுக்கு ஒன்றிரண்டு உதாரணங்கள் சொன்னேன். ஆனால் இதைப்பழக வேண்டும் என்று நீங்கள் நினைத்தீர்களேயானால் உங்களுக்கு பைத்தியம் பிடிக்கும். ஏனென்றால் உங்களுடைய நரம்பையெல்லாம் அவர்கள் ஆகர்ஷணம் பண்ணித்தான் பேச வேண்டும் ஒவ்வொரு மீடியமும் அப்படித்தான். அந்தமீடியத்தினுடைய வாழ்க்கை வரலாற்றையெல்லாம் நான் படித்திருக்கிறேன். அநேகம்பேர் பைத்தியமாக இருக்கிறார்கள். அநேகம்பேர் ரொம்ப மட்டமானதொரு வாழ்வை நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். பலபேர் குடி-அளவு கடந்த குடியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இன்னும் சிலர் வியாபாரத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆகையினால் இது சரியான முறையல்ல. நமக்குத் தெரியும் - இறந்தவர்கள் வாழ்கின்றனர் என்று. ஆன்மாவுக்கு அழிவே இல்லை என்று தெரியும். ஆகவே நம்முடைய குறிக்கோள் லட்சியம் முழுதும் இறைவனிடத்திலே சேரவேண்டும் அதற்கு இம்மையிலே

தூய வாழ்க்கையை நாம் வாழ்ந்தோமேயானால் மறுமையிலே நமக்கு வீடுபேறு கிடைக்கும் என்பதில் எந்த மதத்திற்கும் சந்தேகம் இல்லை. அது எந்தமதமாக இருந்தாலும் இதைத்தான் சொல்லுகிறது. இம்மையிலே நீ தூய வாழ்க்கை வாழ் அன்பு வாழ்க்கை வாழ் அற வாழ்க்கை வாழ் ஆகவே இங்கே நீ வாழ்ந்தால் இறுதி லட்சியம் உனக்கு நிச்சயமாகக் கிடைக்கும். எட்டும் எட்டும் பதினாறு அதில் ஏதாவது தப்பு இருக்கிறதா? இல்லை பதினாறு என்று சொல்லாதே போனாலும் பதினாறுதான். அதுபோல் ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்தோமேயானால் ஒழுங்கான வாழ்க்கையின் காரணமாக நாம் இறைவனிடத்திலே செல்வது என்பது இந்த கணக்கைப்போல. உண்மையானது. இதில் தவறே இல்லை. ஆகையினால் நீங்கள் அந்த மாதிரி வாழவேண்டும். வாழ்வது கஷ்டமென்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் நீங்கள் வாழ்ந்து பாருங்கள். நான் சொல்லுகிறேன். சில பிள்ளைகளை நான் குற்றாலத்திற்குக் கூட்டிக் கொண்டு போனேன் Teachers கூட வந்திருந்தார்கள். குற்றாலம் அருவி — ஆனால் அது season அல்ல கொஞ்சம்தான் அந்த அருவியிலே தண்ணீர் வந்தது. மேலேயிருந்து தடதட என்று விழுந்து கொண்டு இருந்தது. நல்ல fullseason லே போனீர்களேயானால் அடியிலே நிற்பதற்கு ரொம்ப பயமாய் இருக்கும் அவ்வளவு தண்ணீர் மேலே கொட்டும். ஆனால் இந்தக் கொஞ்சம் தண்ணீர் வருகிறபோது பிள்ளைகளை அடியில் கூட்டிக்கொண்டு போனால் போகமாட்டேன் என்கிறார்கள். அதிலே ரொம்ப பயந்தவர்கள் உங்க teachers 2, 3 பேர்தான் உள்ளேயே அந்த தண்ணீர் உள்ளேயே நுழைய மாட்டேன் என்று விட்டார்கள். ஆனால் ஒருதரம் அந்த தண்ணீருக்கு அடியில் போய்விட்டு அப்புறம் நான் சொன்னேன் 'வாங்க பிள்ளைகளே வெளியே' என்று சொன்னால் வரமாட்டேன் என்கிறார்கள். 'ஐயா! ஐயா! இன்னும் கொஞ்ச நேரம் இன்னும் கொஞ்ச நேரம்' சரி காலையில் ஒருதரம் குளித்தாகி விட்டது. மலையிலும் போகலாம் ஐயா குளிக்க! பின் அடுத்த நாளும் போகலாம் ஐயா அப்புறம் மூணு நேரம் குளிக்க வைத்தேன். அங்கிருக்கிற அந்த season க்குப் போகிறவர்கள் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் குளிப்பார்கள். ஆனால் முதல் முதல் போகிறானே உள்ளே' அவ்வளவுதான் செத்துப்போய் விடுவேனே உள்ளே போனால், என் பிழைப்பெல்லாம் போகுமே, இவ்வளவு தண்ணீர் என் தலையில் விழுமே' என்று கத்துவான். ஆனால் உள்ளே போய்விட்ட பிறகு வெளியே வருவதற்கு விருப்பம் இருக்காது. ஆம். உண்மையும் அஹிம்சையும் அப்படித்தான். வெளியில் பார்க்கிறபோது நாம் பயப்படுவோம். உண்மை பேசினால் நம்முடைய கதி என்ன ஆகும்? அஹிம்சை பேசினால் நம்முடைய கதி என்னவாகும்? ஆனால் அதற்குள்ளே ஒரு தரம் மூழ்கி விட்டோமென்றால் அதை விட்டு வெளியே வருவதற்கு மனது இருக்காது. நீங்களும் செய்து பாருங்கள். நான் செய்துகொண்டே இருக்கின்றேன். அதனால் உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்த உண்மையும் அஹிம்சையும் அந்த அளவுக்கு நம்மை ஈர்த்து விடும். ஆகையினால்தான் நம்முடைய பள்ளியில் படிக்கிற பிள்ளைகளுக்கு இந்தப் படிப்பு ஒரு பக்கம், இந்த உண்மை வாழ்க்கைக்கு வேண்டிய மகாத்துமா காந்திஜிய வாழ்க்கைப் படிப்பு இன்னொரு பக்கமாக நீங்கள் அனுபவிக்க அனுபவிக்க அதனுடைய இன்பம் உங்களுக்குத் தெரியும் என்று சொல்லி இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

## ...லைமகள்' விடுதி மாணவ, மாணவியர்க்குப் பிரதி ஞாயிறன்றும் சர்வோதயப் பிரார்த்தனையின் போது உயர்திரு. 'ஐயா' அவர்கள் வழங்கிய அறிவுரைகளின் சாரம் :

...–11–'71 :

...ள்ளிப்பருவம் உருவாக்கும் பருவம். இதில் ...ல விஷயங்களைத் தெரிந்து கொண்டு ...ற்றை அனுபவமாக்க வேண்டும். மதம் ...ழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் புகுந்து ...யனளிக்க வேண்டும். Theory should be ...t into practice. எல்லா சமயங்களிலும் ...உபவாசம்' என்ற ஒரே கருத்து கூறப்பட்...ள்ளது. 'உபவாசம்' என்ற சொல்லில் ...சம்' என்பது 'வசித்தல்' எனவும் 'உப' ...ன்பது 'சமீபம்' எனவும் பொருள்படும். ...றைவன் சமீபத்தில் நெருங்கி வருதல் ...உபவாசம்'. இவ்வாறே 'யோகம்' என்ற ...சொல் எல்லா மதத்துக்கும் பொது 'Yoke' ...ன்ற வார்த்தை (Anglo saxon) ...ஒன்றுபடுத்துதல்' (to become one) என்று ...பொருள்படும்.

...நான்கு வகை யோகங்கள் உண்டு – இவைகளில் கர்மயோகம், 'கரு' ...ன்ற சொல்லிருந்து பிறந்தது. இதற்கு ...கிரியை' என்ற பொருளுண்டு. இயேசு சீஷ...ர்களின் பாதத்தை கழுவினார். கிருஷ்ணன் ...அர்ச்சுனனுக்குத் தேரோட்டினார். எச்சில் ...டுத்தார் - இவர்களெல்லாம் வாழ வழி ...காட்டினார். தாய் தன் குழந்தையைப் பரா...மரிப்பது, கணவனுக்கு மனைவி பணிவிடை ...செய்வது இவையும் யோகமே. 'கர்மயோகம்' ...என்பது science of action – எல்லா வேலை...யையும் முழுமையாகச் செய்தல் அவசியம். ...கீதையில் 'இறைவனை நினைத்துக் கொண்...டே எல்லா வேலையையும் செய்' எனவும் ...'பிரதிபலனை எதிர்பாராது முழுமையாகச் ...செய்' எனவும் கூறப்பட்டுள்ளது. வேலை, நீ, ...இறைவன் இம்மூன்றையும் தொடர்பு படுத்து...வது கர்மயோகம். Work is worship.

...கடமையைச் செய் ஒத்திப் போடாதே ...கடவுளை நம்பிச் செய் – நம்மூலமாக ...இறைவன் வேலை செய்வார். நாம் அவரது ...கருவிகள். வேலையோடும் இறைவனோடும் ஒன்றுபடுவது கர்மயோகம் - இது நம்மைக் கடவுளிடம் அழைத்துச் செல்லும்.

18–2–'73

உலகத்திலுள்ள 3 பொருட்கள் :

1. புருஷோத்தமன் அல்லது கடவுள்
2. புருஷர்கள் அல்லது மனிதர்
3. சிருஷ்டி அல்லது பிரபஞ்சம்.

இவை சிவன், ஜீவன், மாயை எனக் குறிப்பிடப்படுகிறது. கடவுள் நமக்கு எஜமான், தலைவன். நாம் ஊழியக்காரர். எல்லா சிருஷ்டியும் பூஜைப் பொருளே. யாவும் வழிபாட்டுக் குரியவையே. வழிபாடு எந்த நேரமும எம்முறையிலும் செய்யலாம். 'பார்க்கின்ற மலரில் நீ இருத்தி' சாக்கிய நாயனார் கல்லை மலராகப் பாவித்தார். கண்ணப்பர் பன்றி மாமிசம், பூ, வாயில் நீர் இவற்றைக் கொண்டு பூஜித்தார். தம் கண்களைத் தானம் செய்தார். செருப்புக் காலால் அவர் கண்களிருக்குமிடத்தைத் தடவிப் பார்த்து அறிந்தார். 'நில், கண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல். நில், கண்ணப்ப' என்னும் இறைவனது குரல் கேட்டார். வேடன் 6 நாட்களில் மோட்ச பாக்கியமடைந்தார். செய்யும் காரியங்களில் பாவனை அவசியம். அது பூஜை போன்றது. துறவி லாரென்ஸ் தான் செய்யும் எல்லா வேலையையும் கடவுளுக்கென்று அர்ப்பணித்தார். எல்லாம் சேவைக்குரிய பொருளே.

பைபிளில் 'உன் அயலானை உன்னைப்போல் நேசி' எனக் கூறப்பட்டுள்ளது. யார் யாருக்கு உன் உதவி தேவையோ அவன் உனக்கு அயலான். இதை இயேசு, நல்ல சமாரியன் கதை மூலம் விளக்குகிறார். வேலூர் மருத்துவமனையில் நான் பார்த்தது இத்தகைய பயன்கருதா சேவை. அங்குள்ள தாதிமாரும் வைத்தியரும் தினமும் காலை 7 மணிக்கு முன் கூட்டுப் பிரார்த்தனை

செய்கின்றனர். நாம் கவனிக்கும் வியாதிக்காரருக்கு நடு இரவிலும் சேவை செய்யக் காத்திருக்கின்றனர், கடமை உணர்ச்சியோடு எந்நேரமும் புன்முறுவலுடன் சேவை செய்கின்றனர். கடவுளை மனப்பூர்வமாக நேசிப்பதனால் மக்களைத் தன்னைப்போல் நேசிக்க முடிகிறது.

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் குஷ்டரோகியைக் கவனித்தார். குஷ்டரோக ஆஸ்பத்திரியில் தினமும் 2 மணி நேரம் சேவை செய்தார். தம் ஆசிரமத்தில் குஷ்டத்தால் பிடிக்கப்பட்ட ஒரு சமஸ்கிருத பண்டிதரைக் கடைசிவரை வைத்துக் காப்பாற்றினார். சேவைக்குரியவர் கடவுள். சேவைசெய்பவர் நாம் - தாய் தகப்பனுக்குச் செய்யும் சேவை கடவுளுக்குச் செய்யும் தொண்டைப் போன்றது. சிரவணன் போன்று. பெற்றோர்க்குச் சேவை செய்வதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். சேவை செய்வதில் தினந்தினம் பயிற்சிபெறு. சேவை உனக்காக எந்நேரமும் காத்திருக்கிறது.

---

'நல்வழி' டிசம்பர், 1964 இதழில் வெளியிடப்பட்ட உயர்திரு. 'ஐயா' அவர்களின் கட்டுரை

## வெற்றியா? தோல்வியா? (மாணவர்களுக்கு)

(திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி. ஏ, எல். டி.,)



உன் வாழ்வில் நீ வெற்றிபெற விரும்புகின்றாயா, அல்லது தோல்வியடையப் போகின்றாயா? இதற்குப் பதில் உன் மனநிலையைப் பொறுத்திருக்கின்றது என்னால் முடியும், நான் செய்வேன் ( I can and I will ) என்ற மன உறுதியோடு ஈடுபட்டால் வெற்றி நிச்சயம்.

துருவ மண்டலக் கடல்களில் மிதந்து வரும் பனிப் பாறையின் ஒன்பதில் எட்டுப்

பாகம் நீரினுள் மறைந்திருக்கும். ஒரு பாகம் மட்டும் நீருக்கு வெளியில் தெரியும் அது-போல், உனக்குள் உன்னை அறியாமலேயே எட்டுப்பங்கு சக்தி மறைந்திருக்கின்றது. உன்னிடம் உள்ள அறிவிலும் ஆற்றலிலும் நீ ஒரு பங்குதான் பயன்படுத்துகின்றாய். இந்தப் பேருண்மையை உணர்ந்து கொண்டால், நீ ஒரு புதிய மனிதனாகி விடுவாய். எடுத்த காரியம் யாவிலும் வெற்றி. எங்கு நோக்கிலும் வெற்றி முயன்று பார். இடை-விடாது பல நாட்கள். பல மாதங்கள் ஏன், பல வருடங்கள் முயன்றுபார் வெற்றி நிச்சயம்.

நாளைக்கே ஒரு நோட் புத்தகத்தில் நீ உன்னிடம் காணும் குறைபாடுகளை வரிசை-யாக ஒன்றன் கீழ் ஒன்றாக எழுது. ஆஜர்ப் பட்டி (attendence register) போல, கோடு போட்டுக்கொள். வீண் பேச்சு ஒத்திப்போடு-தல் அதிக தூக்கம். வீண் செலவு பெருந்தீனி, புகைபிடித்தல், பொடிப் போடுதல், பொய் பேசுதல் என்று உன்னிடம் உள்ள குறை-பாடுகளை, உன் உள்ளத்தை நீயாகச் சோ-தித்து எழுதிக்கொள் இது குறித்து உன்-நண்பர்களிடம் கூட நீ பேசாதே. உன்னிடத்-தில் வியக்கத்தக்க மாறுதல்களைப் பார்க்கும் உன் நண்பர்களும் தாங்களும் உன்னைப்-போல் ஆக வேண்டும் என்று விரும்பிக்-கேட்கும் போது சொல்லு. இல்லாவிட்டால், உன்னைக் கேலி செய்து உன் முயற்சியைச் சிதறடித்து விடுவார்கள். பெஞ்சமின்-பிராங்லின் என்ற அமெரிக்க மேதையின் வாழ்க்கை வரலாற்றைப் படி. அவர் எப்படி தன் குறைகளைப் போக்கிக் கொண்டார் என்று தெளிவாக எழுதியிருக்கின்றார். ஒரு மாதத்தின் முதல் தேதியில் இத்திட்டத்தைத் தொடங்குவதாக வைத்துக் கொண்டால், எந்தத் தேதியிலாவது நீ விலக்கிக்கொள்ள உறுதி பூண்ட குற்றத்தைச் செய்தால் அன்று இப்படி X ஒரு குறி போட்டுக்கொள். மீண்டும் அம்மாதிரி குற்றம் நிகழாமல் பார்த்துக்-கொள். இம்மாதிரி ஒருமாதம், இரண்டுமாதம் அல்ல, பல மாதங்கள் நீ பிரயாசைப்பட வேண்டியிருக்கும். ஆனால் விடாப்பிடியாக ஒவ்வொரு நாளும் நீ படுக்கப் போகுமுன் உன் குறிப்பேட்டில் ஒளிக்காமல் குறிப்பிடு.

காந்திஜியின் சத்திய சோதனையைப் படி. தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எப்படிக் காப்பாற்றினார் என்று படித்துப்பார். இளமையில் பல தவறுகள் செய்ததாகத்-தானே எழுதுகிறார், ஆனால் சத்தியத்தை-யும் அஹிம்சையையும் கடைப்பிடித்து, அவர் சாதித்த காரியம் சாமானியமானவையா? அவர் என்றும் தோல்வியை ஒப்புக்கொண்ட-தில்லை. "செய் அல்லது செத்து மடி" என்ற முடிவு எடுத்து, நாற்பது வருடங்-களுக்கு மேல் ஒரு சாம்ராஜ்யத்தையே எதிர்த்துப் போராடவில்லையா? இன்பத்தில் இன்பம் விழையாத காரணத்தால் துன்பத்தில் துன்புறவில்லை. "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற பொய்யா மொழியைக் கடைப்-பிடித்தார்.

உச்சி மீது வானி டிந்து
வீழு கின்ற போதிலும்
அச்சமில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே
பச்சை யூன்இ யைந்த வேல்
படைகள் வந்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்ச மென்ப தில்லையே

என்று பாரதியார் பாடியது போல், அச்சத்தை அடியோடு அகற்றி வாழ்ந்தார்.

ஒரு எச்சரிக்கை, இப் பெரும் முயற்சியில் ஈடுபடும்போது, சாத்தான் உங்களை அடிக்-கடி சோதிப்பான். 'சாத்தானே, அப்பாலே போ" என்று தைரியமாகக் கூறுங்கள். வெற்றி திண்ணம்.

குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

ஒரு காரியத்தைச் சாதிப்பேன் என்று உறுதி பூண்ட ஒருவனுக்கு முன்னின்று தெய்வம் வழிநடத்தும் என்கின்றார் வள்ளுவர்.

சரித்திரம் காட்டும் உண்மை யென்ன? இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக வழி-கண்டுபிடிக்க பார்த்தலாம்யூடையஸ் மிகப் பிரயாசைப் பட்டு ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென்கோடி முனை வரை வந்தார். கடும்புயல் வீசியதின் காரணமாக, அம்முனைக்கு புயல் முனை (Cape of Storms) என்று பெயர் வைத்து

விட்டு, தன் நாட்டிற்குத் திரும்பிச் சென்றார். ஆனால் வாஸ்கோடகாமா இதே முயற்சியில் வெற்றி கண்டு, புயல் முனையை நன்னம்பிக்கை முனையாக (Cape of Good Hope) மாற்றி விட்டார்.

உலகம் உருண்டை, புறப்பட்ட இடத்திலிருந்து மேற்கில் சென்றாலும் கிழக்கில் சென்றாலும் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரலாம் என்ற உண்மை கிறிஸ்ட்டபர் கொலம்பசைத் தூங்கவிடவில்லை. மேற்குக் கடல் கடந்து, இந்தியாவிற்கு வர கப்பல்களில் புறப்பட்டு விட்டார், அவரோடு சென்ற ஆட்கள் எவ்வளவு தொல்லை கொடுத்தனர்! கடலில் தூக்கி எறியவும் முற்பட்டு விட்டனர்! மனந்தளரவில்லை. முடிவு என்ன? இந்தியாவிற்கு கடல்வழி காண வேண்டும் என்ற அவரது நோக்கம் நிறைவேறவில்லை எனினும் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டறிந்தார். ஒருவனின் தீரச்செயல் சரித்திரத்தின் போக்கையே மாற்றிவிட்டது. அல்லவா?

பத்துப் பன்னிரண்டு முறை இமயத்தின் உச்சியை எட்டிப்பிடிக்க முயன்றான் டென்சிங், ஒவ்வொரு முறையும் இமயம் அவனை விரட்டியடித்தது ஆனால் அவன் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தான். "என்னால் முடியும், நான் செய்வேன்" என்று சபதம் செய்துகொண்டான் முன்பின் தெரியாத ஒரு மலையேறி உலக சரித்திரத்திலேயே இடம் பெற்றான். "நீ ஏன் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிக்க அத்தனை பாடு பட்டாய்? என்று ஒருவர் கேட்டபோது, அவன் சொன்னான். "அந்தச் சிகரம் 'என்னை வெற்றிகொள் பார்க்கலாம்' என்று சவால் விடுவது (challange) போல இருந்தது. அந்தச் சவாலை நான் ஏற்றுக் கொண்டேன்" என்றான். எனவே சவாலைக் கண்டு ஓடாதீர்கள், மனங்கலங்காதீர்கள், எதிர்த்துப் போராடுங்கள், வெற்றி நிச்சயம்.

செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செயகலா தார்.

செயற்கரிய காரியங்களைச் செய்து முடித்துப் பெரும் புகழ் ஈட்டிய பெரியவர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தினமும் படியுங்கள்.

மனிதன் வானில் கனவில் தான் பறந்தான் அக்கனவை நனவாக்கினார்கள் ரைட் சகோதரர்கள் இன்று மணிக்கு 18,000 மைல் வேகத்தில் விண் வெளிக் கப்பல்களில் மனிதன் சிகரங்களைப் பிடிக்க முயலுகிறான். "முடியும்" என்று முடிவும் கட்டிவிட்டான்.

கம்பி இல்லாமல் செய்திகளைக் கடல் தாண்டி அனுப்ப முடியும் என்று நம்பினார், முயற்சி செய்தார், வெற்றி பெற்றார் மார்க்கோனி இந்த ஒரு மனிதனின் முயற்சியின் பயனாக, மனித சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள நன்மைகளை அளவிட முடியாது.

சந்தைக்குப் போகும் வழியில் ஒரு நீக்ரோ அடிமைப் பெண்ணை தன் நாட்டு மக்கள் ஏலம் போடுவதைப் பார்த்து மனம் புழுங்கிய 19 வயது இளைஞன் 'நான் இந்த நாட்டின் ஜனாதிபதியானால் முதல் வேலை இந்த அடிமைத் தளையைப் பொடியாக்குவேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அப்படியே அமெரிக்கக் குடியரசின் தலைவரானார் ஆபிரகாம் லிங்கன் அடிமைகளுக்குப் புனர் வாழ்வளித்தார் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதனால் என்ன? பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதிதானே! அவர் புகழை யார் கொல்லமுடியும்? உலகம் உள்ளளவும் அது நிலைத்து நிற்பது உண்மை அல்லவா?

ஹெலன் கெல்லர் என்ற அற்புதப் பெண்மணியைப் பற்றிப் படித்திருக்கிறீர்களா? படியாதிருந்தால் 'என் கதை' என்ற ஹெலன்கெல்லர் எழுதிய நூலின் தமிழ்மொழி பெயர்ப்பை 75 பைசா கொடுத்து வாங்கிப் படியுங்கள். ஒரு வயதுக் குழந்தையாக இருக்கும் போதே பிணிவாய்ப்பட்டு கண்- இழந்து, காதுஇழந்து, ஊமையாகிவிட்ட ஹெலன் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றாள் என்றாள். இந்த வெற்றிக்குக் காரணங்களை நூலிலிருந்து கண்டுபிடியுங்கள்.

Lives of great men all remind us
We can make our lives sublime

மகான்களின் வாழ்க்கை வரலாறுகள் நாமும் மேதைகளாக முடியும் என்ற நம்பிக்கை ஊட்டுகின்றன.

"விதி" என்றும், "அதிர்ஷ்டம்" என்றும் சொற்களைப் பொருள் தெரியாது சொல்லிச் சொல்லி, சோம்பித் திரியவேண்டாம். "இவ்விரு அரச குமாரர்களில் இளையவன் தான் தங்களுக்குப்பின் நாடாள்வான் ஜோசியம் அப்படித்தான் சொல்லுகிறது" என்று சேரன் செங்குட்டுவனை நோக்கிச் சொன்னான் ஜோதிடன். இளையவன் இதைக்கேட்டுக் கொண்டிருந்தான். தனக்கு அரச பதவி கிடைக்கும் என்று எண்ணி இறுமாந்திருக்க வில்லை, சிங்கம் போல் எழுந்து நின்றான். "ஜோதிடனே, உன் ஜோதிடத்தைப் பொய்யாக்குவேன், இதோ இன்றே இப்போதே விதியை வெல்லுகிறேன், பார்" என்று சொல்லிவிட்டு, வெளியே ஓடி, கஷாய உடை தரித்து, உள்ளே வந்தான். கண்ணகிக்குச் சேரன் எடுத்த கற்கோயில் எது என்றே தெரியவில்லை. ஆனால் இளங்கோ எடுத்த சொற்கோவில் — "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" — என்றும் அழியாது நிலைத்து நிற்கின்றது

---

## தலைமகள் கல்வி நிலைய விடுதி மாணவ, மாணவியர்க்குப் பிரதி ஞாயிறன்றும் சர்வோதயப் பிரார்த்தனையின் போது உயர்திரு. 'ஐயா' அவர்கள் வழங்கிய அறிவுரைகளின் சாரம் :

24—2—'73

கடவுள் நம் எஜமான். எஜமான் உண்மையும், உத்தமமுமான ஊழியக்காரனை நேசிப்பான். ஆகவே நாம் கடவுளிடம் வஞ்சனையின்றி, கபடின்றி நடந்து கொள்ள வேண்டும். நெஞ்சமாகிய பாத்திரத்திலுள்ள கசடை அகற்றிவிட்டு இறைவன் திருவருளுக்குக் காத்திருக்க வேண்டும். மண் நிறைந்த பாத்திரத்தைச் சுத்தம் பண்ணிவிட்டு சர்க்கரையை நிரப்புவது போல இதயத்தை இறைவன் வசிக்கத் தகுந்த இடமாகமாற்று. பாம்புள்ள அறையில் எவரும் படுக்கமாட்டார். இருளும், ஒளியும், பாவமும், புண்ணியமும் ஒரே இடத்தில் தங்காது. உள்ளம் தூய்மையானால் தான் இறைவன் இதயத்தில் குடியேறுவான். இதுவே சமயங்களின் சாரம். பூஜை செய்வது ஓர் அடையாளம் (Symbolic). உடைக்கும் தேங்காய்க்குள்ளிருக்கும் பருப்பு, நீர், ஆகாயம், போன்று, அறிவு, அன்பு, ஞானம் நம் பிராண மயக்கோசத்தினுள்ளடங்கியுள்ளன. வெண்மையான கற்பூரம் எரிந்தவுடன் காணாமற் போகிறது. கற்பூரம் சுத்தமான அறிவு.

இறைவனது அருள் நெருப்புப்போன்றது. உன் அறிவு இறைவனருளால் விழுங்கப்பட-வேண்டும் அறிவுப் பொருள் புரிந்து கொள்ளக் கூடிய சித்துப் பொருளாகும். அறிவற்ற ஜடப் பொருளை நாம் ஏவ முடியாது. கற்றுக் கொடுக்க முடியாது. புரிந்தும் கொள்ளாது தானும் உணராது. அறிவித்தாலும் அறிந்து கொள்ளாது. இப்-பிரபஞ்சம் முழுவதும், இயற்கை முழுவதும், நிலம், நீர், காற்று, சூரியன் இவைகளை இயக்குவது சித்து. அறிவற்ற இயற்கையைத் தொழிற்படுத்துவது சித்து. ஈசன் என்றால் எல்லாப் பொருட்களிலும் தங்கியிருப்பது என்பது பொருள். இறைவன் எங்குமுள்ளவர். ஜடத்திலும் சித்துப் பொருளிலும் உள்ளவர், அவரே 'சென்று உருளும் கதிர் இரண்டும் விசும்பில் வைத்தார்', சந்திரனுக்கு சுய ஒளி கிடையாது. 'அருக்கனில் ஜோதி அமைத்தவன் காண்க' என்கிறார் மாணிக்க வாசகர். இறைவனுக்குத்தான் ஒளி உண்டு சூரியன் கூட அவரிடமிருந்தே ஒளி பெறுகிறது. [மாண்டிச்சோரி குழந்தை பெரிய கணக்குகளை அறியாது. பெரிய வார்த்தைகள் எழுத முடியாது. எல்லோருக்கும் சமத்துவமாக அறிவு கிடையாது 5 வயது குழந்தைக்கும் 50 வயது மனிதனுக்கும் ஒரே அறிவல்ல. அறிவு வளரும் ஒன்று 'நுண்மாண் நுழைபுலம்' எனவும், சென்ற விடத்து செலவிடாது நன்றின்பாலுய்ப்பது அறிவு எனவும் குறிப்பிடப்படுகிறது. படிப்படியாக அறிவு வளரும்]

[செடிகளுக்கு ஓரறிவு மிருகத்துக்கு ஐந்தறிவு, இறைவன் வாலறிவன் சர்வக்ஞன், எல்லாம் அறிந்தவன், அறிவற்றது தனி. உயிர்களும் இறைவனும் ஒரே ஜாதி - ஆகவே இறைவன் உணர்த்த நாம் உணரச் சித்தமாக வேண்டும்

'உண்ணாது உறங்காது இருந்தாய்
போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் நீ'

நம்மிடமுள்ள உடம்பு ஜடம், உள்ளிருக்கும் சித்துப் பொருள் அறிவு, சித்துக்குள்ளிருந்து செயல்படும் பேரறிவும் இருக்கிறது. அது இறைவன்; (கருவிலிருக்கும் குழந்தைதான் உருவாவதை அறியாது.

'உருத் தெரியாக் காலத்து உட்புகுந்து
உளம்மன்னி
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையி-
னால் ஆண்டு கொண்டான்'

கண்ணோடு உயிர் கலந்தால் தான் அது பார்க்கமுடியும். உயிரும் ஒளியும் சேரவேண்-டும். நாம் செய்யும் பாவத்துக்குக் காரணம், ஊனான இயக்கும் உயிரின் தன்மையை அறியாதது. சிற்றறிவு, பேரறிவு ஆகவேண்-டும். உடம்பு இறைவனை நாடப் பயன்பட வேண்டும். வீண் ஆடம்பரங்களுக்கல்ல.

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம்
சேரவுமாட்டார்'

சுத்த அறிவை பாச அறிவு [மாயம், ஆணவம், கன்மம்,] மறைத்து விட்டது.

வேடனால் வளர்க்கப்பட்ட அரச குமா-ரனின் உண்மையான வாழ்வு ராஜவாழ்வு, ஆனால் வாழ்ந்ததோ வேடர் வாழ்வு. ஐம்புல வேடரிடம் சிக்கித் தவிக்கிறது நம் ஆன்மா. நாம் போகவேண்டிய இடம்வேடர் சேரியல்ல 'நான் எவ்வாறு உங்கள் கால்களைக் கழுவி-னேனோ, நான் எவ்வாறு உங்களில் அன்பு செலுத்தினேனோ அவ்வாறே நீங்களும் ஒரு-வரிலொருவர் அன்பு செலுத்துங்கள்' எனக் கிறிஸ்து கூறினார். பரிசுத்தமான ஆனந்தத்-தை அடையப்பிறந்தவர்கள். நாம் தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாசையும், மறுதலித்த பேதுருவையும் கிறிஸ்து அறிவார். அறிவினால் மட்டும் எல்லாவற்றையும் சாதிக்க முடியாது. உணர்வும் ஞானமும் வரவேண்டும்.

## 4—3—'73

இருவகை தர்மங்கள் நமக்குண்டு 1 தனி மனிதனின் தர்மம் 2. சமூகத்தில் வாழும்-போது நடந்து கொள்ள வேண்டிய தர்மம். [ Individual and Social ] படிப்பது சுயநல-னுக்காக; ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு குணம் உண்டு. பொருள்களிலும் அதேபோல் ஒவ்-வொரு குணம் உண்டு. அது 'சுபாவம்' எனப் படும். அது பொருளினுடைய சிறப்பியல்பு. பாலில் சர்க்கரை இருக்கிறதா என ருசித்துப் பார்க்கமுடியுமே தவிர விரலை விட்டு அறிய முடியாது ஆகவே சுபாவம் என்பது ஒவ்-வொன்றுக்கும் தனியாக உள்ள ஒரு ஆற்றல்.

சமுதாயத்தில் வாழும் போது பிறருடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது 'சுதர்மம்' - ஒரு நல்ல ஆசிரியனோ, வியா-பாரியோ, விவசாயியோ தன் கடமையைச் சரி-வரச் செய்யாவிடில் சமுதாயம் சீர்குலையும். ஒவ்வொருவரும் சுத்த மனச்சாட்சியோடு வேலை செய்ய வேண்டும்.

ஐவகை எனும் பூத ஆதியை வகுத்து
அதனுள் அசர, சரபேதமான
யாவையும் வகுத்து
நல்லறிவையும் வகுத்து,
சைவ முதலாம் அளவில் சமயமும்
வகுத்து
மறையாது நூலையும் வகுத்து,
சமயம் கடந்து மோன சமரசம்
வகுத்து

எனப் புலவர் பாடுகிறார். நல்லறிவான ஆறாவது அறிவில்லாவிடில் அது புக்கறிவு அவரவர் தகுதிக்குத் தக்கசமயமும் வகுத்தார்.

...யத்தைக் கடந்த மோன நிலையும் ...டுத்தார்.

'உனை நான் அணுகவும் கண்ணருள்
வருக்க விலையோ?
பேரின்பப் பெருவாழ்வைப்
பெறவேண்டிய
பொய்வளரும் நெஞ்சினர் தம் காணாத
காட்சியை
பொய்யில்லாதவர் உள்ளத்தில்
ஒருகணமும் நீங்காதவர்'

...எனக் கூறுகிறார். நாமோ இருட்டு வீட்டில் ...றுப்புப் பூனையைத் தேடிய குருடர் போல் இறைவனைத் தேடுகிறோம். நமக்கு உடலும் அறிவும் ஏன் கொடுக்கப்பட்டுள்ளது? தினந்தினம் மேலே உயர்ந்து போகவேண்டும். ...நிமிடமாவது காதலால் கசிந்துருகி, கண்ணீர் மல்கி இறைவனைத் தேடவேண்டும். தனக்கும் சமுதாயத்துக்கும் செய்யும் கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும்.

28-1-'73

எதையும் தானாகக் கற்றுக்கொள்ள முயற்சிசெய்யவேண்டும். இதற்கு 3 படிகள் தேவை. 1. கூர்ந்துகவனித்தல் (Observation) 2. ஞாபகம் வைத்தல் ( Remembering ) 3. ஒத்துப்பார்த்தல் (Comparing) கேள்விகள் கொடுக்கப்பட்டால் விடையைத் தானாகவே கண்டுபிடிக்க வேண்டும்.

கீதையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் விதைபோன்றவை. விதை மண்ணில் போடப்படாவிடில் பலன் தராது. அதுபோலவே கருத்துக்களையும் அனுபவத்திற்குக் கொண்டு வராவிட்டால் அவை பயனளிக்கா.

சம்ஸ்காரம் :

பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ள நீண்ட நாளாகும். ஆனால் ஒருவன் அறியாமலிருக்கும் போதே அப்பழக்கம் மூளையில் தங்கிவிடும். தேங்கி நிற்கும் தண்ணீர் நாள்தோறும் பள்ளத்தை அரித்துப் பெரிதாக்குவது போல அச்சடங்காசாரம் வாழ்நாள் முழுவதும் நம்முடன் தங்கும். இவையே சம்ஸ்காரங்கள். சிவலிங்கத்தின் மீது சொட்டு சொட்டாக விழச்செய்யும் வாளி நீர் போன்று படிப்படியாகச் செய்யும் காரியம் பயிற்சி மூலம் மனதில் தங்கும். பிரார்த்தனை செய்யாத அன்றிரவு காந்திஜி நடுஇரவில் எழுந்தார் 'பொய்சொல்லாதே. திருடாதே' என்பவை நல்ல சம்ஸ்காரங்கள். கெட்ட சம்ஸ்காரங்களும் உள. மனச்சாட்சியின் குரல் நாளடைவில் அமைதியாகிவிடும். பதிவு செய்யப்பட்ட கிராம போன் ரிக்கார்டுகள் போன்று இந்த சம்ஸ்காரங்கள் நம் வாழ்வில் தங்கும்.

பைபிளில் கூறப்பட்டது அன்பு. இதுவே காந்திஜி தம் வாழ்க்கையில் கண்டுபிடித்த அன்பு. பாவத்தை வெறு. பாவியையல்ல. தாஜ்மகாலில் இலட்சக்கணக்கான கண்ணாடிகளில் எரியும் ஓரே மத்தாப்பு. பிரதிபலிப்பதைப் போன்று, இறைவன் ஒருவனாயினும், அவன் அநேகனாகிறான். 'அன்புக்குண்டோ அடைக்கும் தாழ்.'

தாவரங்களிடத்திலும், நீரிடத்திலும் செலுத்தும் அன்பு பூதயக்ஞம் எனப்படும். 'தாயைப்பிழைத்தாலும் தண்ணீரைப் பிழைக்காதே.' பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நன்று. இது ஜீவயக்ஞம் எனப்படும். ஆவுராய்கல் பசுவுக்காக வைக்கப்பட்டது. மனிதருக்குச் செய்யும் சேவை நரயக்ஞம், முன்னோருக்குச் செய்யும் சேவை பிதுர்யக்ஞம். கடவுளுக்குச் செய்வது தேவயக்ஞம். இந்த 5 வகை யக்ஞங்களையும செலுத்தமறவாதே குரானில் கொடுக்கப்பட்ட 10 கட்டளைகளையும் கடைப்பிபிடி.

## உயர்திரு. 'ஐயா' அவர்களின் பாராட்டு விழாவின்போது 'ஐயா'வின் பதிலுரை (22—8—'70)



இவ்வளவு தூரம் நீங்கள் என்னைப் பாராட்டியதற்கு இரண்டொரு வார்த்தையாவது நன்றிசொல்லாமல் இருந்தால் அது நன்றி கொன்றதற்கு ஒப்பாகும். முதலிலே நான் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டவேண்டியது காலஞ்சென்ற எனது அருமைத்தாயாரை. அவர்களுக்கு எழுத்து வாசனையே கிடையாது. ஆனால் என் தகப்பனார் நான் III rd Form படிக்கும்போது, காலஞ்சென்றார். அதற்கு ஒரு மணிக்கு முந்தி என் தாயாரை அழைத்து, "இவனை எப்படியும் B. A. படிக்கவைத்துவிடு" என்று சொன்னார். B A. படிப்பதற்கு வேண்டிய எந்தவித வசதியும் இல்லாதிருந்தும் கூட என் தாயார் மரணப்படுக்கையில் இருந்த என் தந்தைக்கு, ''நிச்சியமாக நான் படிக்க வைக்கிறேன்'' என்று வாக்குறுதி கொடுத்த பிறகு தான் அவருக்கு உயிர் போயிற்று அதை அவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள் என்று சொன்னால் அது ஒரு பெரிய கதை, ஒரு பெரிய புத்தகம், அவ்வளவு கஷ்டத்திற்கிடையே என்னைப் படிக்க வைத்தார். ஆனால் அவர்களுக்கு நான் செய்ய வேண்டியதை, நான் செய்யாததற்கு முன்னே அவர்கள் இறந்துவிட்டபடியால் பெண்கள் குலத்திற்கு என் தாயின் பெயரினாலே ஒன்று செய்யவேண்டும் என்ற எண்ணத்தினாலேதான் இந்தக் கலைமகள் கல்வி நிலையம் உருவாக்கப்பட்டது. ஆகவே அவர்களுக்கு முதலில் நான்என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மனிதன் எவ்வளவுதான் பெரியவனாக இருந்தாலும், எவ்வளவு வல்லமை உடையவனாக இருந்தாலும், எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் கடவுளுடைய அருள் இல்லாவிட்டால் எந்தக் காரியமும் நடவாது என்பது என்னைப் போன்ற சாதாரண மனிதனுயைய நம்பிக்கை. அந்தமுறையிலே என்னை வழிகாட்டி நடத்திப்போகின்ற பொருள் ஒன்று உண்டு அதன் பின் சென்று இந்த உடலும் உயிரும் உடமை எல்லாம் அவனுடையதாக தத்தம் பண்ணி அந்தவழியிலே செல்லும்வாய்ப்பு எனக்கு சிறு வயதிலே இருந்து என தருமைத்தமிழ்ப் பண்டிதர் காலஞ்சென்ற உயர்திருவாளர்

...த இருதயப்பிள்ளை அவர்களின் பாத
...லே கற்றுக்கொண்ட பாடமாகையாலே
...த வழியிலே நான் இன்றும் செயல்பட்டுக்
...ண்டு வருகிறேன். என்னுடைய வாழ்க்-
...ன் இலட்சியத்தை நான் உங்கள்
...னால் வைக்கிறேன். நான் படித்தது
...டு, அதன்படி நடக்க முயன்றதும்
...டு. 'மனமே பிறக்கும் போது நீ
...தாய்' — ஒரு குழந்தை பிறந்தால் அது
...வேண்டும். அப்போதுதான் அதற்கு
...ல் முறையாக மூச்சு வெளியே போய்
...ளே வருகிறது. தாயின் கர்ப்பப்பையில்
...க்கின்றவரை குழந்தை மூச்சு விடுவதில்லை
...பது நீங்கள் அறிவீர்கள். ஆகவே
...ந்தை அழத்தான் வேண்டும். அதை ஒட்டி
...ச் சொல்லுகிறார். நீ அழுதாய் — ஆனால்
...துப்பதினைந்து வருடம் குழந்தை இல்லை
...று ஏக்கம் கொண்டிருந்த தாய் தந்தையர்
...குழந்தை பிறந்தது என்றால் எவ்வளவு
...ழ்ச்சி கொண்டாடுவார்கள். அதுபோல
...றவர்களெல்லாம் சிரித்தார்கள். நீ
...தாய். ஆனால் நீ சாகும்போது நீ சிரித்-
...க்கொண்டே இறந்து போ மற்றவர்கள்
...வர் இன்னொரு நான்கு அல்லது ஐந்து
...ண்டுகள் இருந்திருந்தால் நான்கு பேருக்கு
...பகாரமாக இருந்திருக்குமேயென்று அழட்-
..., என்று சொன்னார். எனது வாழ்க்கை-
...ல் இதை நான் எப்பொழுதும் மறந்ததே
...டையாது. நான் அத்தகைய வாழ்க்கை
...டத்துவதற்குப் போதுமான திறமை இல்லா-
...திருந்தும் கூட, இதை ஒருசிறந்த லட்சியமாக
...வைத்துக் கொண்டு எனது வாழ்க்கையை
...டத்த முயன்று கொண்டே இருந்திருக்-
...றேன்.

இன்றைக்குப் பாராட்டினவர்களை
...லாம் நான் என்னவென்று சொல்வது!
...வர்கள் பெயரையெல்லாம் சொல்லி,
...ங்களையெல்லாம் சொல்லி நான் இங்கே
...றி கூற விரும்பவில்லை. அவர்கள் என்
...லிலே சாதாரணமாகக் கொண்டுள்ள ஒரு
...மானத்தின் காரணமாக, — தமிழிலே ஒரு
...மொழி உண்டு பூனைக்குப் பொற்றாலி
...டினது போல என்று. அதுபோல என்னை
...அதிகமாகப் புகழ்ந்து பாராட்டிவிட்டார்கள்.
...து தமிழ் நாட்டினுடைய பண்பு. கொடுக்கா
...தவனைப்பாரியே என்றும், மிடுக்கிலாதவனை

வீமனே என்றும், வில்லே தெரியாதவனை
விஜயனே என்று பாராட்டுவதும் நமது நாட்-
டினுடைய வழக்கம். அதை ஒட்டித்தான்
அவர்கள் எல்லாம் என்னைப் பாராட்டினார்-
கள். நான் இந்தப் பாராட்டு விழாவிற்கு
முன்னமே சொன்னேன், 'நான் ஒரு சின்ன
பலூன், அதை அதிகமாக ஊதாதீர்கள். அது
வெடித்து விடும்'' என்று — அவர்கள் கேட்-
கவில்லை. அதிகமாகவே ஊதி விட்டார்கள்.
நான் என்ன செய்வது. வேறு வழி இல்லாமல்
ஒப்புக்கொண்டேன். அவ்வளவு பேருக்கும்
எனது உளங்கனிந்த நன்றியைத் தெரி-
வித்துக் கொள்கிறேன். என்னுடைய
படத்தைத் திறந்து வைத்தார்கள் மலரை
வெளியிட்டார்கள். ஒவ்வொன்றாகச் சொல்லி
என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இது
சந்தர்ப்பமில்லை. மனத்தினுடைய நிறைவு
அங்கு இருக்கிறபடியால் அதை அவர்கள்
உணர்ந்து நான் விரிவாகப் பாராட்டவில்லை
யென்று வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டார்-
கள் என்று எனக்குத் தெரியும்.

இனி நான் இங்கு சொல்லிக் கொள்ள
வேண்டியது இந்தப் பெருமையெல்லாம்
எனக்குச் சேர்ந்தது அல்ல. என்னுடைய
ஆசிரியைகள், தலைமை ஆசிரியை குழந்-
தைகள், பெற்றோர்கள் பொதுமக்கள் —
நான் ஏதோ ஒரு நிறுவனத்தை நடத்திக்
கொண்டு வருகிறேனே தவிர, இந்த நிறுவ-
னத்தினுடைய உயிர் நாடியாக இருப்பவர்கள்
இவர்கள் ஆகையினாலே நான் ஒன்று
செய்து வைத்திருக்கிறேன். அதை இந்த
சந்தர்ப்பத்திலே உங்களுக்குச் சொல்ல
வேண்டும். This is no more a private
property இந்தப் பள்ளியைப் பொதுமக்கள்
பள்ளியாக்கி வைத்திருக்கிறேன். இது தான்
என்னால் செய்யமுடியும், ஆகவே நான் உங்-
களை ஒன்று கேட்டுக் கொள்வது உண்டு.
நீங்கள், தென்காசிக்குப் போனால் தென்காசி
கோபுரத்திற்கு அடியிலே ஒரு கல்வெட்டு
இருக்கிறது. இந்தக் கோவிலுக்கு ஏதாவது
இடையூறு நேருமேயானால், 'எனக்குபின்-
னாலே வந்து யாராவது திருப்பணி செய்தால்
அவர்களுடைய திருவடி என் தலைமேல்''
என்று அப்போது அந்த திருப்பணியைச்
செய்த பாண்டிய மன்னன் எழுதி வைத்திருக்
கிறான். அதுபோல் இந்தப் பள்ளிக்குப் பின்-

ணாலே நீங்கள் உறுதுணையாக நின்று — தலைமையாசிரியை — அவர்களை நான் Correspondent ஆகப் போட்டிருக்கிறேன். சகல பொறுப்புக்களையும் நான் அவர்கள் கையிலே ஒப்படைத்திருக்கிறேன். இந்த அளவுக்குப் பரிபூரணமான நம்பிக்கை எனக்கு அவர்களிடத்திலே உண்டு. எங்கள் 105 ஆசிரியைகளும் என்னுடைய உயிரைப் போல — அவர்கள் எப்பொழுதும் இந்தப் பள்ளி நலனுக்காக உழைத்து வருபவர்கள் அந்த நம்பிக்கையும் எனக்கு உண்டு நீங்கள் — பொது மக்களாகிய நீங்கள் உங்கள் கையிலே ஒப்படைத்திருக்கிற இந்தப் பள்ளியை அதற்கு எந்தவித இடையூறும் வராமல் காப்பாற்ற வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு. 72 வயது எனக்கு — இன்னும் எத்தனை நான் இருப்பேன் என்று சொல்ல முடியாது. ஆகவே இப்பொழுது நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த பள்ளிக்கு எந்த வகையிலும் ஊறுநேராதபடி ஒரு சிறு துரும்பை நீங்கள் அதற்காக உதவி செய்தாலும் கூட என்னுடைய ஆன்மா சாந்தியடையும். உங்களுக்கு இப்போதே நான் வாழ்த்துக் கூறிக் கொள்கிறேன். பழையகால சாசனங்களிலே எழுதுவது உண்டு. "இந்த அரசுக்கு யாராவது ஊறு விளைவித்தார்களேயானால் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்திற்கும்......" என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போய் அவ்வளவு சாபமும் அவர்களுக்குச் சாரும் என்று சொல்வார்கள். அதே மாதிரிதான் நானும் சொல்கிறேன். இந்தப் பள்ளிக்கு யாராவது இடையூறு நினைத்தால், யாராவது கெடுதி நினைத்தால் அவர்கள் குடும்பம் பழைய கால சங்க இலக்கியத்திலே சொன்னபடிதான் சாபத்திற்கு உள்ளாகும். எனக்கு இதை விடச் சிறந்த இலட்சியம் ஒன்றுமே இல்லை.

என்னுடைய உயிர் முழுவதும் இதுதான். இறந்த பின்னும் கூட நான் இதைக் கண்காணித்து வருவேன் என்று எனக்கு நன்றாகத் தெரியும். Life after death பற்றி நூற்றுக்கணக்கான புத்தகங்கள் படித்தவன் நான். எனக்குத் தெரியும். அதனால் தான் நீங்கள் கடைசி வரை இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், Today it is your property. Every brick is yours. Everything belongs to you, to the public. ஆகவே நீங்கள் தயவு செய்து நான் மறைந்த பிறகும் கூட இந்தப் பள்ளிக்கு உறுதுணையாக நின்று இதைக் கட்டிக்காக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. எங்களுடைய தலைமையாசிரியை என்னுடைய மனநிலைமை அறிந்து, இதை எந்தவிதமான அரசியல் சார்போ, சமயச் சார்போ இல்லாமல் நேர்மையான நடு நிலைமையில் நின்று நடத்தக் கூடியவர்கள், திறமை படைத்தவர்கள், நல்ல உள்ளம் படைத்தவர்கள் ஆகவே அவர்கள் கையிலே 15 ஆண்டுகள் நான் அவர்கள் வேலைத் திறமையையும் உள்ளத்தையும் கண்ட பிறகுதான், இந்த ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் எல்லாப் பொறுப்பையும் அவர்கள் கையிலே கொடுத்தேன். அவர்களுடன் சேர்ந்து இங்கு பணிபுரியும் 105 ஆசிரியைகளிடம் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கை உண்டு. சின்னஞ்சிறு குழந்தைகள் இங்குவந்து பேசினது, செய்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும் நான் இந்தச் சிறு குழந்தைகள் — அவர்களிடத்திலே இருந்து பெற்றுக் கொள்கிற பெரிய ஆற்றல், ஒரு பெரிய அன்பு. அமைதி தான் என்னை இவ்வளவு காலம் வரை இந்த உடலிலே உயிர் இருக்குமாறு செய்திருக்கிறது. எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையிலே நான் நிற்கின்ற தரையே பிளந்து நான் உள்ளே போவேன் என்று அவ்வளவு பயங்கரமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த காலத்திலும் கூட, குழந்தைகள் முகத்தைப் பார்க்கும் போது எல்லாவற்றையும் நான் மறந்துவிட்டு நானும் குழந்தையாக மாறிவிடுவேன். ஆகவே அந்தக் குழந்தைகளுக்கு ஊறு செய்கிறவர்கள் வாழவே முடியாது. ஒருக்காலும் வாழ முடியாது. நான் அதிகம் பேச விருப்பவில்லை. நான் எனது இலட்சியத்தையும் சொன்னேன். ஒரு வேண்டுகோளையும் விடுத்தேன். இந்தக் கல்வி நிலையத்தின் எதிர்காலத்தையும் உங்களுக்குச் சித்தரித்து வைத்தேன். இவ்வளவு பேரும் சேர்ந்து நீங்கள் இந்த நிலையத்திற்கு இவ்வளவு உதவியிருக்கிறீர்கள் என்றபோது ஒரு மன நிம்மதி கிடைக்கிறது. உங்களுக்கு நன்றி.

## தலைமகள் கல்வி நிலைய விடுதி மாணவ, மாணவியர்க்குப் பிரதி ஞாயிறன்றும் சர்வோதயப் பிரார்த்தனையின்போது உயர்திரு. 'ஐயா' அவர்கள் வழங்கிய அறிவுரைகள்.

## Oct, 1970 to March, 1973

-10—70

இறைவனின் தன்மைகள் :-

இறைவன் ஆதியும் அந்தமு மற்ற எங்கும் நிறைந்த பொருள். சர்க்கரையும் பாலும் ஒன்றோடொன்று கலந்திருப்பது போல இறைவன் நம்முடன் ஒன்றாகி இருக்கிறார். தண்ணீரில் சூடு பரவி ஒன்றாகி வெந்நீராவது போல் இறைவன் நம்முடன் ஒன்றாகி இயைந்திருக்கிறார். சூரியன் நம்மிலிருந்து வேறாகி இருப்பினும் நமக்கு ஒளிதருவதுபோல இறைவன் வேறாகி இருக்கிறார். சூரியன் வேறாகி இருந்தும் அதன் ஒளி நம் கண்ணில் பட்டு உடனாகாவிடில் பொருட்களைக் காணல் இயலாது. அது போன்று இறைவனும் நம் உடனாகி நம்மை இயங்கச் செய்கிறார். நம் உயிரோடு உயிராக இறைவன் கலந்திருக்கிறார். தண்ணீரானது பனிக்கட்டி, தண்ணீர், ஆவி ஆகிய மூன்று நிலைகளிலும் காணப்படுவது போன்று இறைவனும் ஒன்றாகி, வேறாகி, உடனாகி நின்று செயல் படுகிறார். உடனாகுதல் இயங்குவதற்குச் செலுத்துதல் என்று பொருள். ஆகவே 'நான்' என்ற ஆணவத்தை ஒழித்து அவனன்றி அணுவும் அசையாது, என உணர்ந்து நாம் வாழ வேண்டும்.

-10—70

இறைவன் நமக்குச் செய்வது என்ன ?

1) படைத்தல் :- படைப்பு சதா நடைபெறுகிறது. தினத்தினம் படைக்கிறார்.

2) காத்தல் :- சிருஷ்டித்ததை இறைவன் எப்போதும் காப்பாற்றுகிறார்.

3) அழித்தல் or ஒடுக்குதல் :- படைக்கப்பட்ட சிருஷ்டிகளை அழிக்கிறார். இம்மூன்று தொழில்களும் ஏககாலத்தில் நடைபெறுகிறது. எல்லாம் சக்திமயம்.

4) மறைத்தல் :- நடந்ததும் நடக்கப் போவதும் தெரியாது. துன்பங்களை மறைக்கும் சக்தி தருபவர் இறைவன். அவன் ஒருவனே இன்பத்துக்கும் காரணம். தேனைச் சுவைப்பது போன்று இறைவனைச் சுவைத்தல் வேண்டும். அவன் திருவருள் எங்குமுள்ளது.

5) அருளல் - இறைவன் திருவருளைப் பெற எப்போதும் திறந்த நெஞ்சத் தோடிருக்கவேண்டும். உண்மையான இன்பத்தை வேண்டிய இடத்தில் தேடவேண்டும். ( ஊசியைத் தேடின பாட்டி )

உயிர் இறைவனோடு ஒன்றி இன்பத்தை அநுபவிக்க வேண்டும். இரகசியமாக இறைவனுடன் உறவாடு. இறைவன் கேட்பது பரிசுத்தமான வெள்ளை உள்ளம். ஆசை துன்பத்துக்குக் காரணம். 'வேண்டாம்' என்பதே செல்வம். இறைவன் சத்தத்தைக் கேட்காதபோது துன்பம் ஏற்படுகிறது. இறைவனின் ஐந்தொழிலை எண்ணியே பஞ்சகிருத்திய தாண்டவம் நடைபெறுகிறது.

15—11—70

இறைவன் நம்மைச் செலுத்துகிறான் என்ற எண்ணமின்றி நாம் அவரை அலைக்கழிப்பதால் சில சமயங்களில் நம் காரியங்கள் சரியாக நடை பெறுவதில்லை. டிரைவர் வாகனத்தைச் சரியான வழியில் செலுத்துவான் என நம்பியிருப்பதவசியம்.

கடவுள் உண்டு என நிருபிப்பதற்கு மும்முறைகள் :-

1) காண்டல் அளவை :- கண்ணால் பார்த்து உண்டு எனச்சொல்தல்—இது பிரத்தியட்ச பிரமாணம்—பஞ்ச இந்திரியங்களால் கண்டு உணர்ந்து ஒன்று உண்டு என நிதானிப்பது—இறைவன் உலகெல்லாம் நிறைந்-

திருந்தும் ஞானக்கண்ணால் பார்க்க இயாலாதவன்.

2) அனுமானப் பிரமாணம் :- (கருதல் அளவை)

சூட்சுமப் பொருட்கள் காட்டமுடியாதவை. அவைகளை யூகிக்கிறோம். மண்குடம் குயவனால் செய்யப்படுகிறது எனவும் நகை தட்டானால் செய்யப் படுகிறது எனவும்அனுமானிக்கிறோம்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'

'அ' என்ற உயிரெழுத்து வேறாகி நிற்கிறது.

க் + அ = க — மெய்யோடு 'அ' கலந்து ஒன்றாகிறது.

கட்டம் எல்லா எழுத்துக்களோடும் இயைந்து உடனாகிறது.

இரும்பை ஈர்க்கும் பொருளைக் காந்தம் எனவும், காந்தத்தால் ஈர்க்கப்படும் உலோகத்தை இரும்பு எனவும் கருதுகிறோம். ஆகவே இது கருதல் அளவை.

3) ஆகமப் பிரமாணம் :- லண்டனில் தேம்ஸ் நதி ஓடுகிறது எனவும், நிலவில் மனிதன் இறங்கினான் எனவும் நூல்களின் மூலம் படித்தறிகிறோம். இது நூல் அளவை எனப்படும். சமயத்தலைவர்கள் எழுதிவைத்த அனுபவங்களிலிருந்து இறைவனை அறிகிறோம். ஒவ்வொரு சமயத்திலுமுள்ள வழிகாட்டிகள் Railway Guide போன்றவர்கள். அவர்கள் கூறுவதை நம்பி இறைவனை அவர்கள் கூறும்வகையில் வழிபட வேண்டும். முஸ்லீம்கள் ரம்ஸான்போது விரதம் காப்பதைப் போன்று, ஒவ்வொரு சமயத்தினரும் புலன்களை ஒடுக்கி, நோன்பு மேற்கொள்தல் அவசியம்.

10—1—71

மண்ணில் போடப்பட்ட விதை என்றாவது, ஒருநாள் பலன்தரும். சர்வோதயப் பிரார்த்தனையின்போது வாசிக்கப்படும் கீதை, குரான், பைபிளிலுள்ள வசனங்கள் விதைகளாகும். நல்ல நிலத்தில் போடப்பட்ட விதைகள் பயனில்லாது போகாது. சிறுவயதிலேயே சமயத்தைப் பற்றிய அறிவு ஏற்படவேண்டும்.

நம் உடல் பஞ்ச பூதங்களாலானது. பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இவைகளாலான உடம்பு ஸ்தூலமானது. ஆனால் ஆன்மா அழிவற்றது. ஐன்ஸ்டீன் அனுமானத்தின்படி பொருட்கள் அணுக்களாலானது. அணு, சக்தியிலிருந்து ஏற்பட்டது எல்லாம் சக்திமயம் (atom) மூலப்பொருள் சூட்சுமமானது. கண்ணுக்குத் தெரியாது, எழுத்துக்களுக்கு ஒலிவடிவமும் வரிவடிவமும் உண்டு. வரிவடிவம் பல பாஷைகளில் வேறுபட்டது (அ, a). ஒலிவடிவம் ஒன்றே இது சூட்சுமமானது. மௌனத்தில் தெளிகிற தெளிவு ஞானம் எண்ணம் சூட்சுமமானது இது அதிர்ச்சியின் காரணமாக எண்ண அலைகள் பலவகை நிறம் எடுக்கும்.

அறிவு — மஞ்சள், பக்தி — நீலம் பொறாமை — கறுப்பு, கோபம் — சிவப்பு எண்ணம் வடிவமெடுக்கிறது. தியானம் தாமரை மொக்கு வடிவமாகிறது. பல்வேறு எண்ணங்கள் தியானத்தை அலைக்கழிக்கிறது. உள்ளத்தைச் சமர்ப்பிப்பது பிரார்த்தனை. நாம, ரூப, பேதங்களுக்கு அப்பாற்பட்டது எண்ணம். இதுவே ஆன்மநேய ஒருமைப்பாடு. சமயத்தை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டு வரவேண்டும் ரமண மகரிஷி 'நான் யார்?' என்ற ஒரே கேள்வியை ஆய்ந்து ஞானம் பெற்றார். 'நான்' அதி சூட்சுமமானது. ஆன்மா பிறப்பும் இறப்புமற்றது.

கீதை :-

பழத்திலுள்ள விதை முதிர்ச்சியடைவது போல, வயதாக ஆக அறிவு முதிர்ச்சியடைய வேண்டும்,

பைபிள் :-

கண், கை இடறலுண்டாக்கினால் 'அதைத்' தறித்துப்போடு

ரான் :-

ீ விதந் தொழுகை.

1—1—71

தை :-

செய்யும் சேவையைத் தெய்வத்துக்கு அர்ப்பணி.

Bible :-

விதைகள் உவமை.

Koran :-

தேடும் பணத்தையும், கல்வியையும் தகுந்த முறையில் உபயோகிக்க வேண்டும்

யா :-

அவரவர் சமயத்தோடு நெருங்கிய தொடர்பும், சமயத்தைப் பற்றிய அறிவும் சிறுவயதிலிருந்தே ஏற்பட வேண்டும். தற்காலத்தில் ' கடவுளை நம்புபவன் முட்டாள் ' என்ற நிலை ஏற்பட்டுள்ளது. 92 % இந்துக்களுள்ள இந்திய சமுதாயத்தில் சமயத்தைப்பற்றிய அறிவைப் பரப்ப எடுத்துக்கொள்ளும் முயற்சி என்ன ? இறைவழிபாடு என்பது இறைவனிடத்தில் மனதை ஒப்படைப்பது. வீடுகளில் மதபோதனை கிடையாது. சமயம் எங்கே, எப்பொழுது ஆரம்பிக்க வேண்டும்? கம்யூனிஸ்டு நாடுகளான ரஷ்யாவில் உள்ள 20 கோடி மக்களுக்கும், சீனாவில் உள்ள 70 கோடி மக்களும், போலந்து முதலிய பிற நாடுகளிலுள்ள 20 கோடிமக்களும் தற்போது நாஸ்திகர். ' சமயம் ' வீடுகளில் தொடங்க வேண்டும். 3000 ஆண்டுகட்கு முன்னுள்ள மக்கள் எதைச் சொன்னாலும் நம்பினர். ஆனால் பகுத்தறிவு வளர்ந்துள்ள இக்காலத்தில் ' ஏன் ' என்ற காரணகாரியத்தோடு எல்லாவற்றையும் கற்கவேண்டும். வீடுகளில் அதிகாலையில் எழுந்து இறைவழிபாடு செய்ய வேண்டும். பூஜை அறை தனியாக அமைந்திருக்க வேண்டும.

21—2—71

கீதை :-

மானிடர் யாவரும் கடவுளின் பிம்பங்கள்

பைபிள் :-

சரீரம் ஒன்று ஆனால் அவயவங்கள் வெவ்வேறானவை. ஒவ்வொரு அவயவமும் தனக்குரிய வேலையைச் சரிவரச் செய்தல் வேண்டும்.

குரான் :-

அல்லாவின் அருள் தாயின் அன்பை ஒத்தது.

ஐயா :-

கீதை அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. கிருஷ்ணரிடம் சுய உருவத்தைக் காட்டக்கேட்டபோது இறைவன் ஒருபெரிய இராட்சத உருவமாகக் காட்சியளித்தார். அகில உலகமும் அவர் வாயினுள் அடக்கமாயிற்று. பல்வேறுபட்ட ஜாதி, மதம், நாட்டார் யாவரும் கடவுளின் அங்கங்கள் திருநாவுக்கரசர், 'அப்பன் நீ, அம்மை நீ, துய்ப்பனவும் உய்ப்பனவும் நீ' எனக்கூறியது போன்று இறைவன் அனைத்துமாகி, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நம்மைக் காக்கிறார்.

மேற்கு வங்கத்தில் நடைபெறும் பயங்கரக் கொலைகட்குக் காரணம் கடவுள் நம்பிக்கையற்ற கட்சிகள் அங்கு செயல்படுவதே. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் சமயமே கிடையாது. மனிதன் மிருகமாகிறான் கம்யூனிசம் நாஸ்திகப் பிரசாரத்திற்கு ஆதரவளிக்கிறது. தோன்றாத் துணைவனான இறைவன் நம்மோடிருக்கையில் நாம் சாவுக்குங்கூட அஞ்சவேண்டியதில்லை. 'If God be for us who can be against us' உடம்பு பழைய கந்தை போன்றது. செய்யும் காரியத்தை இறைவனுக்கு அர்ப்பணி. இறைவனுக்குப் படைப்பது நல்லகுணம், நல்ல பேச்சு, நல்ல செய்கை. நல்லவைகளையே கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய-வேண்டும்.

14—3—71

ஐயா,

ரதோற்சவத்தில் பிரமாண்டமான தேர் பிரபஞ்சத்தின் உருவத்தைக் குறிக்கும் மையத்தில் இறைவனின் இருப்பிடம் உள்ளது. Man — $A_2$ G S — Animal — 2 parts, God — 1, & soul — 1. மனிதன் விலங்கிலிருந்து தோன்றியவன். மனிதனின் உண்மை வடிவம் ஆன்மா. கடவுள் உடம்பையும் ஆன்மாவையும் இயக்குபவர்

கையில் முதல் 3 விரல்கள் $A_2$ — அடுத்தவிரல் — S. பெருவிரல் — G மூன்றும் சேர்ந்து இயங்கினால் மட்டுமே வேலை நடைபெறும்.

உபாசனம் என்பதற்கு ' அருகாமையில் அமர்ந்திருப்பது 'என்பது பொருள். அது சகுன உபாசனை நிஷ்ட உபாசனை என இருவகைப்படும். சகுன உபாசனைக்குக் கண் காது முதலிய ஐம்பொறிகள் அவசியம் கடவுளிடம் போகப் பஞ்சேந்திரியங்கள் துணை செய்கின்றன. பார்ப்பானாகிய பிரமனகத்தில் ஐம்பொறிகளாகிய பசுக்கள் உண்டு. பொறிகளை அடக்கினால் பெறுவது பேரின்பம் உலகமாகிய வீடு தற்காலிகமான குடியிருப்பு. உயர்ந்தவன் தாழ்ந்தவனுக்குச் செய்வது சேவை. மற்றது வேலை. தன்னைக் காட்டிக் கொடுப்பவன் காலையும் கழுவுகிறார் இயேசுநாதர். எச்சிலை எடுத்தார் கிருஷ்ணர். வாழ்க்கையோடு இயைந்தது சமயம். இறைவன் எப்போதும் நம் அருகில் இருக்கிறார். அவருக்குகந்தவர்களாக ஜீவிக்க இதயத்தில் மாற்றம் அவசியம். ஒன்றாகி, வேறாகி, உடனாகி இருக்கும் இறைவனை ஒரு கணமும் மறத்தல் கூடாது.

11—4—71

ஐயா :-

இவ்வருடக் கடைசி சர்வோதயப் பிரார்த்தனை, குழந்தைகள் வீட்டிலும் இறைவன் அருகிலிருக்கும் உணர்ச்சியோடு செயல்பட வேண்டும். இறைவன் தந்தை, தாய் போல நெருங்கியிருக்கிறார். அவரிடம் மனங்கசிந்து நல்லதைக் கேட்கவேண்டும் சடங்குகள் அவசியமில்லை. கிராமபோன் ரிகார்டுகள் பார்வைக்கு ஒன்று போலிருந்தாலும் அவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பாட்டுக்கள் வெவ்வேறாகும். அப்பதிவுதான் சம்ஸ்காரம்.

கீதை நல்லதையே பேசவும், யோசிக்கவும், செய்யவும் போதிக்கிறது உள்ளத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் எனப் போதிக்கிறது பைபிள். கீதையிலுள்ள 18 அதிகாரங்களைத் தினமும் ஒவ்வொரு அதிகா.மாக வாசித்து தியானி அது தாய் போன்றது எனக் காந்திஜி கூறுகிறார்.

1971 - '72

13—6—71

வருடத்தின் முதல் சர்வோதயப் பிரார்த்தனை.

கீதை :-

புலன்களை அடக்கி, ஆண்டவனுக்கு அர்ப்பணி.

குரான் :-

கல்வியின் அருமை.

Bible :-

தீமையை நன்மையினாலே வெல்லு.

ஐயா :-

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது.

கல்வியைவிட நல்லொழுக்கமே உயர்வானது. ஐம்புலன்களும் கத்தி, பேனா போன்ற கருவிகளாகும். அவைகளைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்தே அவைகளின் சிறப்பு அமைந்துள்ளது. இறைவன் இருக்கிறான் என்ற எண்ணம் இருந்தால்

வயிராது. கடவுள் தான் அடிப்படைத்-தத்துவம். கடவுளில்லாதவன் எதையும் செய்யத் துணிவான். இறைவன் கண்காணி போன்றவர் - அவரில்லாத இடமேகிடையாது அவர் எல்லாவற்றிலும் கலந்து நிற்பவர் 'நான்' என்பது எஜமான். மனசு - கடிவாளம் ஐஞ்சேந்திரியங்களும் குதிரைகள் கடிவாளத்-தைக் கொண்டு குதிரைகளை அடக்கி ஆளலாம்.

20—6—71

கீதை :-

வாழ்க்கையே கர்மம் - ஆண்டவனின் நினைவோடு செய்யும் சிறிய காரியமும் புனிதமாகிறது'

பைபிள் :- மத் 5 : 39 - 48

தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம் சத்துருக்களை சிநேகியுங்கள்.

குரான் :-

அழகு தரும் நகை எது?

ஐயா :-

எக்காரியத்தையும் கடவுளுக்குச் செய்வதாகப் பாவித்துச்செய். பாவனை இல்லாதவர்கள் மிருகத்துக்கு ஒப்பானவர். பார்க்கின்ற உருவில் இறைவன் இருக்கின்றான். சினிமா படம் வெறும் திரையும் நிழலுமானாலும், பாவனையில் மனதைப் பறிகொடுக்கிறோம். ரூ 100 நோட்டு ஒரு காகிதமானலும் அதற்குள்ள மதிப்பு வேறு. பாவனையின் மூலம் அன்பு செலுத்த வேண்டும். கண்ணால் காண்பதெல்லாம் இறைவன் கையால்தொழில் பண்ணுவது பூஜை. பஞ்சபூதங்கள் யாவும் அவர் வடிவே. காதால் கேட்பவைகளைச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

18—7—71

ஐயா :-

மதங்கள் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டவை. ஓரறிவுள்ள பொருட்களிலிருந்து ஆறறிவுள்ள மாக்கள்வரை சிந்தனை கிடையாது. மக்களுக்கு ஆறாவது அறிவான சர்ச்சைசெய்யும் அறிவு, பகுத்தறிவு உண்டு Man is the only thinking animal. மனிதன் தான் யார் மரணத்துக்குப்பின் தான் எங்கே போவேன் என ஆராய்கிறான். இக்கேள்விகளுக்குப் பதில்தான் 'மதம்' புத்தர் போன்ற ஞானிகள் உலகில் துன்பம் அகலக் காரணம் என்ன எனச் சிந்தித்து ஞானோதயம் பெற்று துக்க நிவாரணத்தைக் கண்டடைந்து சமயத்தை ஏற்படுத்தனர்.

வாழ்க்கைக்கு வழிகாட்டுவது சமயம்- இதன்படி வாழ்ந்தால், மனிதன் அடையவேண்டிய இடத்தை அடைவான். வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும். மிருகவாழ்வு, தன்னைக் குறித்தே சிந்திப்பதொன்றாகும். ஆனால் மனிதவாழ்வு அன்பு நிறைந்தது 'உன்னைப் போல் பிறனை நேசி' எனக்கூறுகிறது விவிலியம் அன்பு எனும் புள்ளி, பெரும் வட்டமாகப் பரந்துவிரிய வேண்டும். அப்போது அன்பு அருளாகும்.

கடவுளை நேசிப்பதும், பிறனை நேசிப்பதும் இருகண்களாகும். அன்பே சிவம், அன்புடையர் என்றுமுரியர் பிறர்க்கு, அன்பிலதனை அறம் காயும். ஆகவே தன்னை வருத்திக் கொண்டாவது பிறர்க்கு உதவி செய்ய வேண்டும். வீட்டிலே அன்பு தொடங்கினால், நாட்டின்மேல் அன்புவரும் தாராளமாகப் பிறர்க்கீந்து, அவ்வின்பத்தை அனுபவிக்க வேண்டும்.

25—7—71

Iyyah :- Be Kalaimagal children கலைமகளின் குறிக்கோளுக்கு ஒத்துவராதவர்களுக்கு இங்கு இடமில்லை. லட்சியபுருஷர்களாக வெளிச் செல்ல வேண்டும். நாட்டின் நல்ல குடிமக்களாக உருவாக, அதிகப்படியான பயிற்சி பள்ளியில் பெறவேண்டும். நல்ல சூழ்நிலையில், லட்சியத்தைத் தெரிந்து கொண்டு செயல்படவேண்டும். Be where you are and serve the society and be examples for others ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்து உயரிய சேவை செய்ய வேண்டும். மாணிக்கக்கல் தெருவில் கிடைக்காது. பெரியமுயற்சி செய்து ஆழமாகச் செல்லவேண்டும். விவிலியத்தில்

கூறப்பட்டுள்ளபடி. ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட தாலந்துகளைச் சரியான முறையில் பயன் படுத்த வேண்டும்.

இறைவன் உருவமற்றவன். உருவமில்லாத ஒன்றை மனம் நினைப்பதில்லை உறுப்புக்கள் மூலம் கடவுளைத் தியானித்தல் சகுன உபாசனை. செய்யும் சேவையைக் கடவுளுக்குத் தத்தம் பண்ணவேண்டும். தாலந்துகள் கடவுளால் கொடுக்கப்பட்டவை. அவைகளைக் கொடுத்தவனுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். உலகமாகிய நந்தவனத்தில், நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி கொண்டு வந்தான் ஒரு தோண்டி. அது கூத்தாடிப் போட்டு உடைப்பதற்கல்ல.

காந்திஜி இரவு 12 மணிக்குப் பாத்திரம் தேய்ப்பார். கை, வேலை செய்வதற்காகக் கடவுளால் படைக்கப்பட்டது. நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் நெஞ்சார உருகி பாடிப்பாடி இறைவனுக்குத் தொண்டு செய்தனர். நாவுக்கரசரின் பணி ஒரு மாற்று உயர்ந்தது. வாய்த்தொண்டு மட்டுமல்ல. கைத்தொண்டும செய்தார்.

நிர்க்குண உபாசனை என்னும் பெருநிலையைத் தவமியற்றிப் பெறவேண்டும் பாலைவனச் சோலையாகக் கலைமகள் திகழ வேண்டும். ஒழுக்கத்தினின்றும் பிறழாத நிலை ஏற்பட வேண்டும். வினோபாஜி தெருக்களைச் சுத்தம் செய்தார். சிரமதானம் கேவலமல்ல. விவேகமும் வைராக்கியமும் இருகண்கள். செய்யத்தக்கது இது என்பது விவேகம். தகாதது இது. இது தீமை-இதைச் செய்ய மாட்டேன் என்பது வைராக்கியம். தாலந்துகள் கடவுளால் கொடுக்கப்பட்டவை. அவைகளைத் தகுந்தபடி உபயோகிக்க வேண்டும்.

## 5—9—71 Teachers' Day

**Iyyah :** டாக்டர் ராதாகிருஷ்ணனின் 88 வது பிறந்த நாள் விழா-தாய், தகப்பன் ஆசிரியர் கடவுளுக்குச்சமானமானவர். எழுத்தறிவித்தவன் இறைவன். அறிவுவளர, அறியாமை தேய உதவுவர் ஆசிரியர் மனிதர்களாக்கி, பயனுள்ளவர்களாக ஆக்குபவர் ஆசிரியர். அதற்குக் கைம்மாறு செய்யும் வகையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட வேண்டும். நன்றியில்லாதவன் மனுஷனல்ல அஞ்ஞானமாகிய இருளைப் போக்கும் ஆசிரியர்களுக்குச் சாகும் வரை நன்றியுடையோராயிருக்க வேண்டும். குருகுல வாசத்தில் மாணவன் குருவின் வீட்டிலேயே 5 வயது முதல் 21 வயது வரை தங்கிக் கற்றுப் பின் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டான்.

மாணவப்பருவம் பிரமசரியம் ஆகும். இதற்குக் கடவுள் அருகிலிருப்பவர் என்பது பொருள். இவ்விரதங்காக்க நல்ல ஒழுக்கமுடையோராயிருத்தல் வேண்டும். குருவுக்குப் பணிவிடை செய்வதில் இன்பம் கொள்ள வேண்டும். ஏகலைவன், துரோணருக்குத் தன் இடது கைப் பெருவிரலைக் காணிக்கையாக்கினான்.

பெரும் பாலும் ஏழ்மை நிலையிலுள்ள ஆசிரியரிடம் அன்பும் நன்றியும் உடையோராயிருந்து தினந்தினம் படுக்கைக்குச் செல்லுகையில் அவர் நலனுக்காகப் பிரார்த்திப்பது கடமை.

## 3—10—71 Reopening Day

**Iyyah :** வேலையைப் பிரார்த்தனையோடு தொடங்கவேண்டும். ஒருவரது வாழ்க்கையில் தொடர்பும் பயிற்சியும் அத்தியாவசியமானது. நல்லவரோடு தொடர்பு கொண்டால் நல்லவராயிருக்கலாம். படிக்கும் புத்தகங்களுடன் நல்ல தொடர்பு கொள்ளலாம். தைலதாரை போன்று இடைவிடாது இறைவனிடம் தொடர்பு கொள்ள வேண்டும் தீய எண்ணங்கள், தீய செயலைக் கொண்டு வரும் தீய பேச்சு இவைகளை அகற்ற வேண்டும். காந்தம், ஊசியைக் காந்தமாக்குவது போல செயல், பேச்சு யாவும் சக்தியுடையது. சார்வதின் வண்ணமாகும் உயிர். மிருகங்களுக்குக் கல்வி, போதனை ஒன்றும் தேவையில்லை. மக்களுக்கு இறைவனுடன் தொடர்பு கொள்ள ஆவலுண்டு. தீயிலிடப்பட்ட இரும்பு நெருப்பாகிறது. எண்ணங்களை அடக்கியாள வேண்டும். அதற்குப் பயிற்சி தேவை. மனம் பாதரசம் போன்றது. புலன் மூலம் ஓடிக்கொண்டிருக்கிறது. பற்றுதல் உண்டாகும்

போது காமம், வெகுளி உண்டாகும். இதை நீக்கினால் உயிரைப் பற்றிய நோய்போய்விடும்.

தேனீ மலரில் உட்காரும். ஈயோ எல்லிடத்திலும் உட்காருகிறது. ஞானத்தினால் மனதைத் தன்வயப்படுத்துவது பயிற்சி. ஜீவாத்மா, பரமாத்மா ஆக சமயங்கள் வழிகாட்டுகின்றன. தன்னை வென்றவன் மகாத்மா ஆகிறான். காந்திஜி உலகில் வாழ்ந்து கொண்டே தன்னை வென்றார். 'Ruskins Unto this Last' என்ற நூலைப் படித்ததிலிருந்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அத்தகைய தொடர்பும் பயிற்சியும் நமக்குத் தேவை.

## 10—10—71 - Iyyah :-

நாம் உடம்புக்கு வேண்டிய தேவைகளைத் தினமும் நிறைவேற்றுவதிலேயே வாழ்நாளைச் செலவிடுகிறோம். பெரியவர்களும், அரசும் பெற்றோரும் கூடக்கடவுளைப் பற்றிச் சொல்வதில்லை. உடம்பு இருதன்மைகளுக்கு நிலைக்களன். அவை இன்ப துன்பம். நல்ல உணவு, நல்ல உடை முதலியவை லௌகிக விஷயங்களில் இன்பத்தை அளிப்பவை. இன்பத்தை அடைந்த உடம்பு துன்பத்தையும் அடைகிறது. இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன கடவுள் கொடுத்த பொறிகளை அவன் சேவைக்கென அர்ப்பணிக்க இயலுமா எனக் காண்பதிலேயே உண்மை இன்பம் அடங்கியுள்ளது. லௌகிக இன்பத்திற்கு எல்லைஉண்டு. இறைவனைப்பற்றி எண்ணுவதும், சொல்வதும் திகட்டாதது.

ஆன்மபசி, அருள் தாகம் இவற்றைத்தீர்க்க பெற்றோர் உதவி செய்ய வேண்டும். குழந்தைகளிடம் கடவுளைப்பற்றிப் பேசவேண்டும் குடும்பப் பிரார்த்தனை செய்ய வேண்டும். மாணிக்க வாசகர் கூறிய, 'சித்தமழுகு' நிரந்தரமானதல்ல, 'உள்ளம் கோவில், ஊனுடம்பு ஆலயம்' ஆகவே உடம்பைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்வது அவசியம் ஆனாலும் விடுமுறையிலுங்கூட இறைவனைப்பற்றி எண்ணவேண்டும். நன்மை செய்யவும், தீமை செய்யவும் ஒரே பொறிதான் உபயோகமாகிறது. சொர்க்கத்துக்கு ஒடுக்கமானவழி உண்டு. காலை, மாலை தொடர்ந்து பிரார்த்தனை செய்து, உள்ளத்தில் நல்ல சிந்தனையோடு இருந்தால் இவ்வழியில் செல்லலாம். தீபாவளியில் ஊரில் உள்ள ஏழைகளுக்கு இயன்ற அளவு உதவி செய்யவேண்டும்.

## 24—10—71 - ஐயா :-

வெவ்வேறு மதத்திலுள்ள மகான்கள் ஒரே சத்தியத்தை வெவ்வேறு மாதிரியில் விளக்குகின்றனர். தாய் தன் குழந்தையைக் கடவுளாகப் பாவித்துப் பிரதி பலன் கருதாது ஊழியம் செய்கிறார்கள். இமாலயமலையிலே தாய்க்குருவியின் வரவை எதிர் பார்த்துக் காத்திருக்கும் குஞ்சுகளைக் குறித்து சாது சுந்தர் சிங் கூறுவது போல, இறைவன் நம்மைக் காப்பான் என்ற உணர்ச்சியும், தனக்கு வேண்டிய யாவையும் கொடுப்பான் என்ற நம்பிக்கையும் உடையோராய் இருக்கவேண்டும். கடவுளை மனுஷன் பார்ப்பதில்லை ஆனால் தாய் போல உதவுகிறான். உணவு, உடை, இருப்பிடம் அவன் தந்தது. எப்போது, எங்கிருந்து, எப்படி எனத் தெரியாது. ஆனால் அதில் சந்தேகமில்லை.

தாயைவிட அன்பாக நம்மைப் பாதுகாக்கும் இறைவன் அருள் நிறைந்தவன். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். தற்கால மனிதருக்குக் கடவுளிடம் தகுந்த நம்பிக்கையில்லாததால், சினிமா நட்சத்திரங்களைப் பார்ப்பதில் பிரேமை போன்ற தீய வேட்கை உண்டாகிறது. மனுஷன் மிருகநிலைக்கு இறங்கிக் கொண்டிருக்கிறான். பாம்பும், புலித்தோலும், மண்டைஓடும் அணிந்து சுடுகாட்டில் இருக்கும் சிவன் தியாகத்தின் உருவம் நம் எண்ண அலைகளுக்கு நிறங்களுண்டு. கோபத்திற்கு சிவப்பு நிறமும், வெறுப்பிற்கு கறுப்பு நிறமும், பக்திக்கு நீலநிறமும் உண்டு. தியானத்தில் மனம் ஒருபடும் போது தாமரை போன்ற உருவம் வெளிப்படும். கோபிக்கும் போது சிவப்பு அம்புகள் போன்ற உருவம் வெளிப்பட்டு, புறப்பட்ட இடத்திற்கே திரும்பும். நல்லஎண்ணங்களே நம்மிடமிருந்து வெளிப்படவேண்டும். அவை பிறரை நன்மக்களாக்கும்.

## 1972—'73 - 25—6—72

பலபெயர்களுள்ள ஒரேபொருள் போன்று எந்த நாமத்தைக் கொண்டு அழைத்தாலும் இறைவன் ஒருவரே. எல்லா சமயங்களும்

கடவுளிடம் நடத்துகின்றன. பிற சமயங்களைக் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். தேனைச் சுவைப்பது போன்று கல்வி, அனுபவக் கல்வியாக வேண்டும். உள்ளத்தைத் தட்டித் தேடி இறைவனைக் கண்டுகொள் என்று வேதம் சொல்கிறது. முதலில் தன்னைத்தானே திருத்திக்கொள். மனிதப்பிரயத்தனம், முயற்சியின்றி கடவுளுடைய ஆசீர்வாதம் கிட்டாது. நாம் ஓர் எட்டு கடவுளை நோக்கி எடுத்துவைத்தால், கடவுள் நம்மை நோக்கி 2 எட்டுகள் எடுத்து வைத்து நெருங்குகிறார். உள்ளமாகிய அறையை அடைத்து வைத்தால் கடவுள் அருள்கிட்டாது. மனத்திலுள்ள மாசை அகற்றி இறைவன் அருளுக்குக் காத்திரு. லகானைக் கடவுளிடம் கொடுத்து அவரிடம் சகலகாரியத்தையும் அர்ப்பணி. எல்லாம் இறைவனின் செயல் எனக்கருதுவர் பக்தர்.

## 2—7—72

நேற்றிருந்தவன் இன்று இல்லல என்னும் பெருமையுடையது இவ்வுலகம். உடம்பு ஜடப்பொருள். உயிர் அழிவற்றது. உயிர் இல்லாவிடில் உடம்பு இயங்காது. உடல் தத்துவம் வேறு. உயிர் தத்துவம் வேறு. ஆன்மா அழிவற்றது. ஆன்மாவைப் பாழாக்காமல் வாழ வேண்டும். இம்மை வாழ்வு மறுமை வாழ்வுக்காக புல்லையும் பூவை உடுத்துவிக்கும் இறைவன் இருக்கும் போது ஏன் உடைக்காகக் கவலைப்பட வேண்டும்? ஆன்ம சுகம்தான் இன்பத்திற்கு வழி கோலுவது – உயிருக்கு அழிவு கிடையாது. கடவுள் தத்துவமே உயிர். சர்வம் பிரம்மம் மயம் ஜகத் - ஆகவே அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

## 16—7—72

உணவு, வாய்க்குணவு. செவிக்குணவு எனப்படும். செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம். இதற்கு முதலிடம் தர வேண்டும். செவி தோட்கப்பட்ட செவியாக இருக்க வேண்டும். கேட்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். குழந்தை, கருவில் கடுகளவுதானிருக்கும். பின்புதான் அவயங்கள் வளருகின்றன. உயிர் அணுவைப்பிடித்து பிடித்து 'எங்கே போகிறாய்?' — 'உன்னைக் கண்ணுக்கு யார் போகச் சொன்னது?' எனக் கேட்டால் இந்த இரகசியத்தை வெளியிட மாட்டோம் என்று சொல்லிற்று. ஒரு செங்கல் பல காரியங்களுக்குப் பயன்படுவதுபோல, அணுக்கள் ஏன் வெவ்வேறு அவயங்களாகின்றன என்பது புரியாததுதாயின் வயிறாகிய இருண்ட குகைக்குள் கண்களும் நுரையீரலும் உருவாக்கப்படுகின்றன. யார் இவ்வாறு சிந்தித்துச் செயலாற்றுவது? நம்மிடத்தில் அளவற்ற கருணையுடைய இறைவனின் செயல் இது. உருத்தெரியாக் காலத்து உட்புகுந்து உருவேற்றுகின்றான். ஏகனாகி நிற்றலும் இறைபணி நிற்றலும் இறைவனின் படைப்பினைச் சிந்திப்பதன் மூலமே வரும் — பகுத்தறிவைத் தவறாகப் பயன்படுத்துகிறோம். தாயை இழந்து பரிதவித்த பன்றிக்குட்டிகளுக்குத் தாய் உருவமெடுத்துப் பால் கொடுத்த இறைவனின் கருணை உள்ளத்திடம் நம்பிக்கை ஏற்பட்டால்தான் பக்தி வரும். பக்திக்கடலில் நீந்தினால்தான் அதன் சுவை தெரியும். கீதை படிக்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியது மாணாக்கியர்க்குப் பெரும்பேறு — இதைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

## 6—8—72 - Iyyah :

ஜெபமாலையையோ, 108 மணிகளுள்ள ருத்திராட்ச மாலையையோ உருட்டிக்கொண்டோ, கிழக்கு அல்லது வடக்கு நோக்கியோ உட்கார்ந்தோ மனதில் இறைவனின் உருவத்தை நிறுத்தி மௌனமாக ஜெபிப்பது அவசியம். 10 வயதிற்குள்ளாகச் சிறுவர்களின் முன் நல்ல கருத்துக்களை வைக்க வேண்டும். 1 நிமிடமாவது உடம்பை அசைக்காமல் உட்கார்ந்து விலங்கு நிலைக்குச் செல்ல விழையும் மனத்தை அடக்கி தியானம் செய்யப் பயிற்சி செய்வது நல்லது.

மாணாக்கர்களிலே தலை, இடை, கடை என்ற 3 வகை மாணாக்கர்கள் உண்டு. தாமே கற்றுத் தெளிந்து செய்பவர் தலை மாணாக்கர் பூனையைக் கட்டிப் போட்ட குருவின் செய்கையை ஏனென்று புரிந்து கொள்ளாமல் பின்பற்றிய சிஷ்யனைப் போன்றவர் கடை மாணாக்கர். அவர்களுக்கு சாப்பிடுவதிலும், தூங்குவதிலும் தவிர எதிலும் விருப்பம் கிடையாது. இதைப் போன்றே 3 வகை மக்களுண்டு குறைந்தபட்சம் 2 வேளையாவது பிரார்த்தனை செய்து, எல்லா வேலையையும் பூஜையாகவும் வழிபாடாகவும் பாவித்து, தங்களை வெறுப்பவர்களை சிநேகிப்பவர்கள் முதல் தரமான மக்கள். இவர்கள் மிகச் சொற்பமானவர். பூனையிடம்

வந்து ஒன்றியுள்ளது. இறைவனுக்கு உன்னைக் காணிக்கையாக அர்ப்பணி. வழிபாடு என்பது சடங்கல்ல பேரின்பப்பெரு-வாழ்வு பெற இறைவனை வழிபடு - துன்பம் நன்மைக்கே வரும். செய்த பாவங்கட்கு மன்னிப்புக் கேட்க, இறைவனை வழிபடு-நன்றி சொல்ல அவரை வழிபடு.

27—2—72

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இளவயதி-லிருந்தே ஒரு லட்சியத்தில் பற்றுக்கொண்-டவர். இருபதுபேர் ஒருகுதிரையை நீருற்றுக்கு நடத்திச்செல்லலாம். ஆனால் ஒருமனிதனா-லும் அதனைத் தண்ணீரைப் பருகச் செய்ய இயலாது. லட்சியமின்றி ஒருவரும் செயல்பட முடியாது. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், செய்தல் இவை மிக அத்தியாவசியமானவை. உண்மையைக் குறித்துச் சிந்தித்துத் தெளிவு ஏற்படல் வேண்டும். முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சும் கருவிலிருக்கும் குழந்தையும் வெளி-வந்தேயாக வேண்டும். உடம்பு ஒரு கூடு-இது ஒரு கருவி - இதில் புறக்கருவி, அகக்-கருவிகள் உண்டு ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளன. படிப்பு வெறும்சுமை-யல்ல. படித்தவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வருவது அவசியம். உண்ணும் உணவு செரிக்கப்படுவது போல, அறிவு-வாழ்க்கையோடு கலக்க வேண்டும். அறிவு, ஒழுக்கமாகவும் பக்தியாகவும் மாறவேண்டும். அறிவு பெருகிய அளவுக்கு அன்பும் பக்தியும் வளர வேண்டும். நிட்டை கூடல் அல்லது அனுபவம் பெறுதல் என்ற நிலையை அடைய வேண்டும்.

9—3—72

பழக்கம் கொடிது. பாறை கிழிக்கும்கோழி போன்று பயனற்ற பழக்கத்தைக் கடைப்-பிடிப்பதில் பயனேதுமில்லை. தீயபழக்கங்-களைக் கற்றுக் கொள்வது மிகச்சுலபம். நல்ல பழக்கங்களை நாம் கைவிடக்கூடாது. அறிவு இருந்தால் மன நிறைவும், ஓர்வழியும் கிட்டும். துன்மார்க்கர் வழி நரகத்தில் சேர்க்கும். இம்மையில் துன்பத்தைக் கொடுக்கும். சன்மார்க்கர் வழி மறுமையில் சொர்க்கத்தை-யளிக்கும். நீச்சல் கற்றுக் கொள்வது போல நல்ல பழக்கங்கள் முதலில் கடினமாகத் தோன்றினாலும் பின்பு நன்மை பயக்கும். பின்னர் வாழ்க்கையில் இன்பம், அமைதி கிட்டும். இறைவன் எல்லாப் பொருளிலும் உள்ளார். கோவிலில் உலகை மறக்க சந்தர்ப்பம் கிட்டுகின்றது. உள்ளம் பெருங் கோவில் - ஐம்புலன்கள் விளக்குகள் - வாய் கோபுரவாசல். அகக்கண்ணால் நாம் பார்க்க வேண்டும். நம்மை நடத்தும் ஒளி இறைவன் திருவருள். உண்மையாய் அவரை நம்பினால் ஒருபோதும் கைவிடமாட்டார். காந்தம் வடதிசையைக் காட்டுவது போல் உள்ளம் இறைவன் பால் செல்ல வேண்டும். அதுதான் உண்மைவழி. பாவத்துக்கு இடங் கொடுக்கக் கூடாது. காலையிலும் மாலையிலும் பிரார்த்-தனையை மறந்து விடாதே.

26—3—72

கற்றதன்படி ஒழுகுதல் அவசியம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது- படித்தவை களை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும். குருவிகள் எவ்வித அதிருப்தியுமின்றி அமைதியும் அடக்கமுமான வாழ்க்கை வாழவேண்டும். மனிதன், திருப்தி-யற்றவன். ஆன்ம வளர்ச்சிக்கெனத் தேவை-யானவைகளைச் செய்ய வேண்டும். ஜெர்மானிய மிஷனரி 1000 குழந்தைகளைப் பேணி வளர்க்கிறார். அத்தகைய அன்பு பிறர் மீது ஏற்பட வேண்டும்.

1972—'73

25—6—72

பலபெயர்களுள்ள ஒரேபொருள் போன்று எந்த நாமத்தைக் கொண்டு அழைத்தாலும் இறைவன் ஒருவரே. எல்லா சமயங்களும் கடவுளிடம் நடத்துகின்றன. பிற சமயங்-களைக் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். தேனைச் சுவைப்பது போன்று கல்வி, அனுபவக் கல்வியாக வேண்டும். உள்ளத்தைத் தட்டித் தேடி இறைவனைக் கண்டுகொள் என்று வேதம் சொல்கிறது. முதலில் தன்னைத்தானே திருத்திக்கொள். மனிதப்பிரயத்தனம், முயற்சியின்றி கடவுளு-டைய ஆசீர்வாதம் கிட்டாது. நாம் ஓர் எட்டு

கடவுளை நோக்கி எடுத்துவைத்தால், கடவுள் நம்மை நோக்கி 2 எட்டுகள் எடுத்து வைத்து நெருங்குகிறார். உள்ளமாகிய அறையை அடைத்து வைத்தால் கடவுள் அருள்கிட்டாது. மனத்திலுள்ள மாசை அகற்றி இறைவன் அருளுக்குக் காத்திரு. லகானைக் கடவுளிடம் கொடுத்து அவரிடம் சகலகாரியத்தையும் அர்ப்பணி. எல்லாம் இறைவனின் செயல் எனக்கருதுவர் பக்தர்.

## 2—7—72

நேற்றிருந்தவன் இன்று இல்லை என்னும் பெருமையுடையது இவ்வுலகம். உடம்பு ஜடப்பொருள். உயிர் அறிவற்றது. உயிர் இல்லாவிடில் உடம்பு இயங்காது. உடல் தத்துவம் வேறு. உயிர் தத்துவம் வேறு. ஆன்மா அறிவற்றது. ஆன்மாவைப் பழாக்காமல் வாழ வேண்டும். இம்மை வாழ்வு மறுமை வாழ்வுக்காக புல்லையும் பூவை உடுத்துவிக்கும் இறைவன் இருக்கும்போது ஏன் உடைக்காகக் கவலைப்பட வேண்டும்? ஆன்ம சுகம்தான் இன்பத்திற்கு வழி கோலுவது — உயிருக்கு அறிவு கிடையாது. கடவுள் தத்துவமே உயிர். சர்வம் பிரம்மம் மயம் ஜகத் — ஆகவே அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

## 16—7—72

உணவு, வாய்க்குணவு, செவிக்குணவு எனப்படும். செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம். இதற்கு முதலிடம் தர வேண்டும். செவி தோட்கப்பட்ட செவியாக இருக்க வேண்டும். கேட்டு வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டும். குழந்தை, கருவில் கடுகளவுதானிருக்கும். பின்புதான் அவயங்கள் வளருகின்றன. உயிர் அணுவைப்பிடித்து பிடித்து 'எங்கே போகிறாய்?' — 'உன்னைக் கண்ணுக்கு யார் போகச் சொன்னது?' எனக் கேட்டால் இந்த இரகசியத்தை வெளியிட மாட்டோம் என்று சொல்லிற்று. ஒரு செங்கல் பல காரியங்களுக்குப் பயன்படுவதுபோல, அணுக்கள் ஏன் வெவ்வேறு அவயங்களாகின்றன என்பது புரியாதது. தாயின் வயிறாகிய இருண்ட குகைக்குள் கண்களும் நுரையீரலும் உருவாக்கப்படுகின்றன. யார் இவ்வாறு சிந்தித்துச் செயலாற்றுவது? நம்மிடத்தில் அளவற்ற கருணையுடைய இறைவனின் செயல் இது. உருத்தெரியாக் காலத்து உட்புகுந்து உருவேற்றுகின்றாக். ஏகனாகி நிற்றலும் இறைபணி நிற்றலும் இறைவனின் படைப்பினைச் சிந்திப்பதன் மூலமே வரும் — பகுத்தறிவைத் தவறாகப் பயன்படுத்துகிறோம். தாயை இழந்து பரிதவித்த பன்றிக்குட்டிகளுக்குத் தாய் உருவமெடுத்துப் பால் கொடுத்த இறைவனின் கருணை உள்ளத்திடம் நம்பிக்கை ஏற்பட்டால்தான் பக்தி வரும். பக்திக்கடலில் நீந்தினால்தான் அதன் சுவை தெரியும். கீதை படிக்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியது மாணாக்கியர்க்குப் பெரும்பேறு — இதைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

Iyyah :

## 6—8—72

ஜெபமாலையையோ, 108 மணிகளுள்ள ருத்திராட்ச மாலையையோ உருட்டிக் கொண்டோ, கிழக்கு அல்லது வடக்கு நோக்கியோ உட்கார்ந்தோ மனத்தில் இறைவனின் உருவத்தை நிறுத்தி மௌனமாக ஜெபிப்பது அவசியம். 10 வயதிற்குள்ளாக சிறுவர்களின் முன் நல்ல கருத்துக்களை வைக்க வேண்டும். 1 நிமிடமாவது உடம்பை அசைக்காமல் உட்கார்ந்து விலங்கு நிலைக்குச் செல்ல விழையும் மனத்தை அடக்கி தியானம் செய்யப் பயிற்சி செய்வது நல்லது.

மாணாக்கர்களிலே தலை, இடை, கடை என்ற 3 வகை மாணாக்கர்கள் உண்டு. தாமே கற்றுத் தெளிந்து செய்பவர் தலை மாணாக்கர். பூனையைக் கட்டிப் போட்ட குருவின் செய்கையை ஏனென்று புரிந்து கொள்ளாமல் பின்பற்றிய சிஷ்யனைப் போன்றவர் கடை மாணாக்கர். அவர்களுக்கு சாப்பிடுவதிலும், தூங்குவதிலும் தவிர எதிலும் விருப்பம் கிடையாது. இதைப் போன்றே 3 வகை மக்களுண்டு. குறைந்தபட்சம் 2 வேளையாவது பிரார்த்தனை செய்து, எல்லா வேலையையும் பூஜையாகவும் வழிபாடாகவும் பாவித்து, தங்களை வெறுப்பவர்களை சிநேகிப்பவர்கள் முதல் தரமான மக்கள். இவர்கள் மிகச் சொற்பமானவர். பூனையிடம்

ாட்டிய இரக்கத்திற்காகப் பக்தர்க்குச் சொர்க்கத்திலே இடம் கிடைத்தது. தர்மர் வைகுண்டம் சென்றபோது தன் பின்னே ஓடி வந்த நாய்க்குட்டிக்கு அங்கு இடமில்லை-யெனில் தனக்கும் வேண்டாமென்றார். இவர்களெல்லாம் தலையாய மக்கள்.

இதுபோன்றே தலையாய, இடையாய, கடையாய ஸ்தாபனங்களுண்டு. தாகூர் என்ற ஞானி ஏற்படுத்திய சாந்தி நிகேதன் இத்தகைய தலையாய ஸ்தாபனம். அது வெறும் ஏட்டுப்படிப்புக்கென்று ஏற்பட்ட-தல்ல. மனிதனை முழு மனிதனாக்குவதற்கு, உள்ளத்திலே ஆன்மாவிலே மலர்ச்சி உண்-டாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அரவிந்தர் அரசியலில் பங்கு கொண்டு அலிபூர் ஜெயிலில் தள்ளப்பட்டவர். 'பாண்டிச்சேரிக்குப் போ' என்ற குரல் கேட்டு வந்தார். புத்தர் தர்மத்தை உபதேசித்தார். அவர் சங்கத்தார் அதை உலகத்தில் பரப்பினர். இவர்கள் போன்ற தலையாய மக்களால் தோற்றுவிக்கப்பட்டவை தலை-யாய ஸ்தாபனங்கள். ஸ்தாபனத்தைத் தோற்றுவிப்பவன் உப்புக்கல்லைப் போன்ற-வன். உப்பு கரைந்து பொருளுடன் ஐக்கியமானால்தான் பயனைபடும். எந்தத் தத்துவத்-தின் பேரில் ஒரு ஸ்தாபனம் எழுந்ததோ அது ஸ்தாபனத்தார் உள்ளங்களில் பரவ வேண்டும். கேம்ப்ரிட்ஜ், ஆக்ஸ்பர்ட் பல்கலைக்கழகங்களிலும், Eton, Rugley பள்ளிகளிலும் பயின்றவர்கள் தனிப்பிறவி-கள். இவ்வாறே கலைமகளுக்கும் ஒரு தத்துவம் உண்டு. இயேசுநாதருக்கு 12 சீஷர்களே இருந்தனர். அவர்கள் மூலம் பெரிய காரியங்களைச் சாதித்தார். உலகம் முன்னேறியது மிகச் சிலரது தத்துவத்தால்-தான் — அவர்களது கருத்துக்கள், தியாகத்-தால்தான். அவ்வாறு சமுதாயத்தை மாற்றிப் படைக்கக்கூடிய சிறு குழுவினராக, மனவுறுதி படைத்தவராக இருக்க வேண்டும் கலைமகள் மாணாக்கியர். இங்கு கற்பது ஒரு வாய்ப்பு, இதை நழுவ விடக்கூடாது. கலைமகள் என்ற தனி முத்திரை வேண்டும். நாம் அதிமனிதர்கள் என்ற ஒழுக்கத்தால் வரும் பெருமையைப் பெற்றிருக்க வேண்டும். கலங்கரை விளக்கம் இதைக் காட்டி நிற்கிறது. மலரெல்லாம் தாமரை மலரல்ல — பாலெல்லாம் ஆவின் பாலல்ல — 4 வேதங்-களைப் பாராயணம் செய்த நாடு நம் நாடு. 2 லட்ச சுலோகங்களைப் பாராயணம் செய்த நாடு — நாடு உங்களைப் பற்றிப் பெருமைப்-படும் வகையில் முதல் மாணாக்கியர்களாகத் திகழ வேண்டும்.

20—8—72

**Iyyah:**

திரையில் ஓடிய நிழல், நிஜ உருவத்தின் பாவனை — ஆனால் மனிதன் உணர்ச்சி வேகத்தில் அறிவை இழக்கிறான் — பாவ-னையைக் கண்டு ஏமாறுகிறான். உலகமே மாவனைதான். அறிவைக்கொண்டு பார்க்-கிறவன் ஞானி — அவனுக்கு விருப்பும் வெறுப்பும் கிடையாது. தச்சனுக்கும் அவன் மகனுக்கும் மரத்தை மறைதத மாமத யானை போன்றும், மரத்தில் மறைந்த யானை போன்றும் ஞானி எங்கும் இறைவனைக் காண்கின்றான். இன்னாத உலகத்தில் இனியவை காண வேண்டும் — கீதையில் வாசித்தது போல மக்காச்சோளம் அரைத்த-வுடன், பொரித்தவுடன் மென்மையடைகிறது. பாவனையில் தேசியக்கொடி வணக்கத்துக்-குரிய நாட்டின் சின்னமாகிறது — மதிப்புப் பெறாத சிறு காகிதம் ரூ. 100 மதிப்புப் பெறுகிறது. உணர்ச்சியின் மூலம் — பாவனை கொடுக்கும் இடம் உணர்ச்சி — அறிவு உப்புப் போல — வேண்டிய அளவுதான் சேர்க்க வேண்டும் — உப்பு குறைந்தாலும் மிகுதியானாலும் உபயோகமில்லை. உணர்ச்சி-யும் அறிவும் அந்தந்த அளவு உபயோகிக்கப் பட வேண்டும்.

'ஏகம் சத்' — உள்ளது ஒரே பொருள் — அதுவே பலவிதமாக அறிஞர்களால் கூறப்-படுகிறது. இயேசுநாதர் சீஷர்களைக் கடவு-ளாகப் பாவித்துக் கால்களைக் கழுவுகிறார். கோவிலிலும் உருவத்திலும் பாவனையில் இறைவனைக் காண்கிறாய் — கண்ணால் காண்பது நின் காட்சி, கையால் செய்வது நின் பூஜை — பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்த இறைவனைக் காண் — மகான்கள் இவ்வாறே செய்தார்கள்.

## 24—9—72

நாம் பெருங்காயம் அல்லது கற்பூர டப்பாக்கள் போன்றவர்கள் — நம்மில் தீய எண்ணங்கள் இருந்தால் தீய சக்திகள் வெளி வரும். விளக்கிலிருந்து ஒளி வருவது போல — நல்ல அலைகள் வெளிவந்து சூழ இருப்பவரைத் தொடும். ஆனால் தீய எண்ணங்கள் நிறைந்த சிலர் இருந்தால் கூட, இருக்குமிடம் கெட்டு விடும் — நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களும் ஒலி, ஒளி அலைகள், ஆகாசம் மூலம் நம்மிடம் வருவது போல வரும். கோப அலைகள் சிவப்பு நிறமாகவும் பக்தி நீலமாகவும், அறிவு மஞ்சள் நிறமாகவும் உருவம் படைத்த அலைகளாக உன்னிடமிருந்து பரவி, பிறர் உள்ளங்களைத் தொடும். ஒவ்வொருவருக்கும் Physical body, Mental body and Spiritual body என மூன்று உடம்புகள் உண்டு. அவரவர் அனுப்பிய தீமை அவரவரிடம் திரும்பி வரும் — மலரின் மணம் வீசிக்கொண்டிருப்பது போல — உன் எண்ணங்களால் நீயும் வாசனையை விட்டுச் செல்வாய். தீய காரியங்கள் செய்கிறவர்களை விட்டு விலகு. மகான்கள் முழுவதுமாக வளர்ச்சியடைந்தவர்கள். அவர்கள் பார்த்த அளவில் நல்ல கதிர்கள் சுற்றிலும் பரவுகின்றன. Polygraph மூலம் செடிகளுக்கும் உணர்ச்சி, எண்ணம் இவைகளை உணரும் சக்தி உண்டு என்று தாவர இயல் நிபுணர்கள் அறிந்துள்ளனர். தண்ணீர் ஊற்றும்போது திருப்தியும், மற்றொரு செடியைக் கொன்ற மனிதனைக் காணும்போது அச்சமும் செடிக்கு ஏற்படுகிறது. E. E. G. மூலம் மூளையில் ஏற்படும் உணர்ச்சிகள் அளக்கப்படுகின்றன. ஸ்காட்லந்து அரசியான மேரியைக் கொன்ற இரகசியம் 348 வருடங்களுக்குப் பின், 1948-ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடிதம் அவள் எழுதியது அல்ல என நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடவுள் நம் கண்காணி. அவர் இல்லாத இடமில்லை. விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்றோர் ஹஸ்ததீட்சை கொடுத்து வந்தனர். சக்ஷு தீட்சை, திருவடி தீட்சையும் மகான்களால் கொடுக்கப்பட்டு வந்தது. எண்ணங்கள் மூலம் மகத்தான சக்தி கிட்டும்.

## 15—10—72

நவராத்திரி கொலுவிலுள்ள பொம்மைகள் தத்துவக் கருத்துக்கள் நிறைந்தவை. அமைதியாக இருக்கும் அவை வெளியிடும் கருத்துக்கள் ஆழமானவை. காந்திஜியின் மூன்று பொம்மைகள் கேட்க வேண்டியவைகளைக் கேள், பார்க்க வேண்டியவைகளைப் பார், பேச வேண்டியவைகளைப் பேசு — மற்ற நேரங்களில் பொறிகளை மூடிக்கொள் எனப் போதிக்கிறது.

உழைக்காமல் உண்ணாதே என விவிலிய நூலும், பிறர் பங்கைத் திருடாதே எனக் கீதையும் கூறுகிறது. எங்கும் நிறைந்த இறைவன் அகத்தையும் புறத்தையும் காண்பவன் — பிறர் பொருளை இச்சிப்பவன் பாவம் செய்கிறான். தன் பொருள் மீது பற்று இருப்பது அவா எனப்படும். பிறர் பொருளை இச்சிப்பது ஆசை. கடவுள் யாரையும் வெறுப்பதில்லை. கெட்ட குமாரன் மீது அன்பு வைத்த பிதா — அவர் பார்வையில் யாரும் பாவி அல்ல — நோயாளிகளுக்கே மருத்துவர் தேவைப்படுகிறார். வெயில் தாங்காமல் புழு இறக்கிறது. சூரியன் அதைக் கொல்வதில்லை.

'என்பிலதனை வெயில் போலக்
காயுமே
அன்பிலதனை அறம்.'

அறம் என்பது நீதி, நியாயம், சத்தியம். கடவுள் கருணைக்கு யாவரும் இலக்காவர்.

## 14—1—73

விளையாடுமிடத்திற்குப் புறாக்கள் வருகின்றன — இதை உணர்வதற்கு அறிவு தேவையில்லை. இது ஒரு தெரிந்துகொள்ளும் விஷயம் (Information) மட்டுமே ஆகும். தற்போதுள்ள புத்தகங்கள் யாவும் இவ்வித விஷயங்களைத் தருவனவே தவிர (informative), அறிவைத் தூண்டுபவையல்ல. கீதை, குரான், பைபிள் இவை நம் அறிவைத் தூண்டுபவை. 'நாம்' என்பது உயிர், உடல் இரண்டும் சேர்ந்த வஸ்து. உடல் அழியும் பகுதி, உயிர் அழியாப் பகுதி. உயிர் சூட்சுமமானது — காண முடியாதது. நாம் காணக்

உடைய பகுதி உடல் — ஆகவே நாம் உயிரைப் பற்றி எண்ணுவதில்லை. உயிரற்ற உடல் சவமெனத் தூக்கியெறியப்படும்.

நெருஞ்சி முள்ளில் 3 முனைகள் உள்ளதைப் போன்று மக்களில் மூவகைக் குணமுண்டு. தமோ குணம், ரஜோ குணம், சாத்விக குணம் — இவைகளைக் குறித்து கீதை சொல்கிறது. உடம்பையே நாமென்று நினைப்பதால் தமோ குணம் உண்டாகிறது. வேலையிலும், உணவிலும் தமோ குணம் கூடாது. ரஜோ குணம் அழிவை உண்டாக்குகிறது. வீரம், சுறுசுறுப்பு ரஜோ குணங்கள் — இது ஓரளவுக்குத் தேவை.

பைபிளில் உன் கண், கை இடறலுண்டாக்கினால் அதைத் தறித்துப் போடு என்று இயேசு கூறுகிறார். பார்க்கத்தகாதவைகளைப் பார்க்காதே. உடம்பு நமக்குத் தரப்பட்டது நன்மை செய்யவே. கடவுளை வணங்கக் கொடுத்த அவயங்களைப் பாழாக்காதே என்று திருவரங்கமாலை கூறுகிறது. சமயக் கருத்துக்கள் விலை மதிப்பற்ற முத்துக்கள். அவைகளை ஆழமாகப் போய்த்தேடிக் கண்டுபிடி.

பழம் சாப்பிட்டு, ரசத்தைச் சுவைத்துக் கொட்டையை எறிவதுபோல நல்ல விஷயங்களைச் சமய நூல்களிலிருந்து அறிந்து கொண்டு அதன்படி ஒழுகு. இப்பொழுது அனுபவிக்கும் இன்பதுன்பம் இனிவரும் தன்மை தீமைக்கு உதவும். இம்மையில் நல்ல வனுக்கு மறுமையில் இன்பமுண்டு. ஆகவே உயிரை அழித்துக் கொள்ளக் கூடாது.

## 10—1—72

மண்ணில் போட்ட விதை முளைக்கும் என்ற நம்பிக்கையுண்டு. அதுபல வருடங்கள் கழித்துப் பலன் தரும். கீதை, குரான், பைபிளில் உள்ள நல்லவசனங்கள் விதைகள். அவை நல்ல நிலத்தில் போடப் பட்டால் பயனில்லாது போகாது. சிறுவயதிலேயே சமயத்தைப் பற்றிய அறிவு ஏற்படவேண்டும். உடம்பு பஞ்சபூதங்களாலானது ஆன்மா அழிவற்றது. சூட்சுமமானது. அவ்வாறே மூலப் பொருள் சூட்சுமமானது. எல்லாம் மாயை. எல்லாம் அழிந்து சூட்சுமமாகும். மௌனத்தில் தெளிகிற தெளிவு ஞானம். எண்ணம் சூட்சுமமானது. அறிவு மஞ்சள், பக்தி நீலம், பொறாமை-கறுப்பு, கோபம்-சிவப்பு நிறமெடுக்கும். Thoughts take form. உள்ளத்தைச் சமர்ப்பிக்கக் கோவிலுக்குச் செல்கிறோம், ஒருவன் தான் விதைத்த விதையை அறுப்பான். சமயத்தை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும். ரமண மகரிஷி 'நான் யார்?' என்ற கேள்வியினால் ஞானம் பெற்றார்.

## 31—1—72

எல்லாச் சமயங்களும் நம்மை இறைவனிடம் வழி நடத்துகின்றன. காந்திஜி தான் ஏன் ஒரு ஹிந்து என எழுதுகிறார். மதவெறியர்கள் அவரைக் கொன்றனர். கடவுள் அனுபவத்திற்காக ஏற்பட்டவர். இறைவனை மறவாதிருந்தால் அவர் அருள் கிட்டும்.

## 19—3—72

கப்பலில் திசை காட்டும் கருவி போல, சமயங்கள் எண்ணிறந்தனவாயினும் மகான்கள் காட்டிச்செல்லும். மார்க்கம் ஒன்று. சந்தோஷமாக இருக்க வழி, எல்லா உயிர்களிலும் இறைவனைப் பார்ப்பது. இறைவன் ஒருவராயினும் எல்லோர் மனத்திலும் ஒளிமயமாகத் திகழ்ந்து வழிகாட்டியாய் இருக்கிறான். மிருகங்களுக்குப் பகுத்தறிவு கிடையாது. கடவுள் நம் மனதில் இருந்து மனச்சாட்சி மூலம் நன்மை தீமையைக் காட்டுகிறார். உள்ளத்திலும் புறத்திலும் இறைவன் இருக்கிறார். இறைவனை வழிபடுவது எதற்காக? இம்மை மறுமைக்குரிய வாழ்க்கைக்காக - எங்கும் இறைவனைப் பார். அவர் சர்வவியாபி— ஜடமாகிய உடம்பின் மேல் சித்தாகிய உயிர் வந்து ஒன்றியுள்ளது. இறைவனுக்கு உன்னைக் காணிக்கையாக அர்ப்பணி. வழிபாடு என்பது சடங்கல்ல. பேரின்பப்பெருவாழ்வு பெற இறைவனை வழிபடு - துன்பம் நன்மைக்கே வரும். செய்த பாவங்கட்கு மன்னிப்புக் கேட்க, இறைவனை வழிபடு- நன்றி சொல்ல அவரை வழிபடு.

## 27—2—72

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இளவயதிலிருந்தே ஒரு லட்சியத்தில் பற்றுக்கொண்டவர். இருபதுபேர் ஒருகுதிரையை நீரூற்றுக்கு நடத்திச்செல்லலாம். ஆனால் ஒரு மனிதனாலும் அதனைத் தண்ணீரைப் பருகச் செய்ய இயலாது. லட்சியமின்றி ஒருவரும் செயல்பட

முடியாது. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், செய்தல் இவை மிக அத்தியாவசியமானவை. உண்மையைக் குறித்துச் சிந்தித்துத் தெளிவு ஏற்படல் வேண்டும். முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சும் கருவிலிருக்கும் குழந்தையும் வெளிவந்தேயாக வேண்டும். உடம்பு ஒரு கூடு-இது ஒரு கருவி -இதில் புறக் கருவி, அகக்கருவிகள் உண்டு. ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளன. படிப்பு வெறும் சுமையல்ல. படித்தவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வருவது அவசியம். உண்ணும் உணவு செரிக்கப்படுவது போல, அறிவு வாழ்க்கையோடு கலக்க வேண்டும். அறிவு, ஒழுக்கமாகவும் பக்தியாகவும் மாறவேண்டும். அறிவு பெருகிய அளவுக்கு அன்பும் பக்தியும் வளர வேண்டும். நிட்டை கூடல் அல்லது அனுபவம் பெறுதல் என்ற நிலையை அடைய வேண்டும்.

26—3—72

கற்றதன்படி ஒழுகுதல் அவசியம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது—படித்தவைகளை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும். குருவிகள் எவ்வித அதிருப்தியுமின்றி அமைதியும் அடக்கமுமான வாழ்க்கை வாழவேண்டும். மனிதன், திருப்தியற்றவன். ஆன்ம வளர்ச்சிக்கெனத் தேவையானவைகளைச் செய்ய வேண்டும். ஜெர்மானிய மிஷனரி 1000 குழந்தைகளைப் பேணி வளர்க்கிறார். அத்தகைய அன்பு பிறர் மீது ஏற்பட வேண்டும்.

---

## ஐயாவின் கடிதம் . . .

தேதி : 14—8—69

நாளுக்குநாள் உடல் நலம் குன்றி வருகிறது. எனவே என் மறைவுக்குப் பின்னால் நிலையத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்று இரவு ஒரு மணிக்கு இதை எழுதுகிறேன்.

இறைவன் திருவருளால் நிலையம் இன்று தமிழகத்தில் மிகச்சிறந்த நிலையில் இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்விப்பணி புரிந்து வருகின்றது. இதை இந்நிலைக்குக் கொண்டு வந்த அனைவருக்கும் என் நன்றி. இதைப்போல் இனியும் தொடர்ந்து டிரஸ்டிகளும்; தலைமையாசிரியையும் ஆசிரியைகளும் பெற்றோர்களும் பொதுமக்களும் நன்கு கண்காணித்து வளர்த்துமாறு அன்போடு அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இதன் சேவை என்றும் குன்றாதிருக்க வேண்டும் என்பது எனது இச்சை. இந்நிலையம் நடத்தி வரும் ஸ்தாபனங்களிலிருந்து வரும் வருமானங்கள் அனைத்தையும் இந்நிலைய வளர்ச்சிக்கே செலவு செய்யவேண்டும்.

நிலைய வருவாயைத் தனிப்பட்ட யாருடைய நலனுக்கும் செலவிடக்கூடாது. இது ஒரு கோயிலாகக் கருதப்பட வேண்டும். என் தாயார் நினைவில் ஏழை மாணவிகளுக்கு உதவி செய்யலாம்.

என் மக்களோ உற்றார் உறவினர்களோ இந்நிலையத்தில் எந்த வித உரிமையும் கொண்டாடக்கூடாது. இதைப் பொது மக்களுக்கு அர்ப்பணித்து விட்டேன். இவர்கள் உதவி செய்ய வேண்டுமே தவிர எந்த உதவியையும் எதிர்பார்க்கலாகாது.

இந்த அருமையான ஸ்தாபனத்திற்கு ஊறு செய்பவர்கள் விர்த்தியடைய மாட்டார்கள். நான் இறந்து போன பிறகும் இந்த நிலையத்தின் நலனில் அக்கறை காட்டுவேன்.

அரசாங்கம் இம்மாதிரியான சிறந்த தனியார் பள்ளிகளை எடுத்தால் நாட்டுக்குப் பாதகமே தவிர நன்மை ஒன்றும் விளையாது.

பெற்றோர்களும் பொது மக்களும் இன்று போல என்றும் இதற்கு ஆதரவு தரவேண்டுமெனக்கேட்டுக் கொள்கிறேன். யாதானும் தொல்லைகள் வந்தால் அப்போதெல்லாம் முன்னின்று உதவுவோர்கள் அனைவருக்கும் இப்போதே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமையாசிரியை அவர்களும் ஆசிரி-
யைகளும் இப்பள்ளியை கட்டிக்காத்து வர-
வண்டும் இங்கு பணிபுரியும் எல்லோரும்
ன் வாழ்த்துக்குப் பாத்திரமானவர்கள். கல்வி
யிலும் எல்லோரும் ஒழுக்கசீலர்களாக,
ாட்டின் நன்மக்களாகப் பயிற்சி பெற்று
வளியேற வேண்டும். நீங்கள் உங்கள்
ாழ்க்கை முழுவதும் கலைமகள் குழந்தை-
களாக வளர வேண்டும் என்பது என ஆசை.

டிரஸ்டிகள் இன்றுபோல் அன்பும் ஆதரவும் காட்டி வருவார்களாக கடவுள் எல்லோருக்கும் அருள் பாலிப்பாராக.

(ஒம்.) எஸ். மீனாட்சிசுந்தரம்
14 / 8 / 69

---

Erode.
31—08—1972

rom
Principal & Managing Trustee,

'o
The Friends and well-wishers of
Kalaimagal.

'riends,

All of you know how our Nilayam started 27 years ago with 77 pupils and 2 teachers, has now grown up into one of the prime institutions of Tamil Nadu.

The services of our Headmistress, sincere and hard working staff, the public co-operation, departmental and government help have all contributed to this growth.

Now as I am of uncertain health, I am anxious that after me this good institution should maintain its record of all round achievement. I fear that certain elements may try to disrupt the smooth working of the Nilayam. In all cases of expediency I want you to stand by the Nilayam.

I want to inform the public through this letter that Kalaimagal Kalvi Nilayam is now managed by a Public Trust consisting of 7 members. I am the Managing Trustee at present and after me the Headmistress and Correspondent of the Nilayam, Miss. M. Muthiah. B. A., B. T., will become the Managing Trustee also as per the Registered Trust Deed for in the last 17 years, she has been working heart and soul for the fruition and welfare of the Nilayam. I have full faith in her efficiency and integrity. I can't find a better person more efficient, sincere, honest and devoted to the welfare of the Nilayam.

Mrs. Balambal was Secretary, Correspondent and Headmistress from the time the Nilayam was founded in 1945 till the time of her demise in 1948.

Now I want the Nilayam to be managed entirely by ladies ( teachers ) in course of time. The Nilayam is a Public property cent persent and no one in my family now or hereafter can claim any right in its property or management. Neither the sites have been purchased nor the buildings put up from my ancestral property for I had no ancestral property whatsoever.

I want the name ' Kalaimagal Kalvi Nilayam ' to be continued after me. The spiritual or religious tolerance, Communal harmony and sincere devotion should prevail for ever.

(Sd.) S. Meenakshisundaram

## From Iyyah's Will

The Kalaimagal Kalvi Nilayam is my life work and I am deeply interested in its future welfare. I have made adequate provision for the efficient running of the Nilayam after my demise. The following will take effect after my death.

I have the fullest confidence in the nembers of the Kalaimagal Kalvi Nilayam Trust. I request them to carry on my wishes without fear or favour.

During the last fifteen years I have been watching the work of the Headmistress of the Kalaimagal Kalvi Nilayam, Selvi. M. Muthiah, B. A., B. T., and the Nilayam has won fame and name due to her organising ability, her spirit of service and sacrifice, her tact and skill in getting the cooperation of the staff. The public have fullest confidence in her

Because I felt sure that the future of the Nilayam will be safe in her hand, I have made her the Correspondent, Managing trustee and manager. I want this arrangement to be continued till Selvi. Muthiah's death. Even after her retirement as Headmistress she should continue to be the Correspondent, Managing trustee and manager.

As I have settled my family affairs fully and satisfactorily to all the members of my family they can have no claim over the running of the Nilayam or its assets.

The name of the Kalaimagal Kalvi Nilayam should not be changed for any reason even to honour me. I have dedicated the Nilayam to the Public of Erode.

Let the Nilayam be run as it is being run at present. Besides training the mind and the body, Character training and spiritual training also should be given as at present.

Let no party politics enter into the Nilayam for that is bound to affect the smooth running of the Nilayam.

I request my teachers to extend the same hearty cooperation to the Headmistress as they are doing at present. God will surely bless them for their dedicated service.

I want the public to render all help for the welfare of the Nilayam for I have dedicated it to them.

Let the pupils be proud of their Alma Mater and the Alma Mater will be proud of them.

I invoke the blessings of the Almighty on all connected with the Kalaimagal Kalvi Nilayam.

(Sd.) S. Meenakshisundaram.

# 22—8—1970-இல் நடைபெற்ற 'ஐயா'-வின் பாராட்டு விழாவின்போது அனுப்பப்பட்ட அறிஞரின் கடிதங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை :-

ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தின் நிறுவனர், உயர்திரு. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் கல்வித் தொண்டினை யாரே அறிவார்? இயற்கையிலேயே ஆற்றல் மிக்க ஆசிரியராகிய அவர் கல்வியின் வளத்திற்கும் தரத்திற்கும் அரும்பாடுபட்டு வரும் பெரியாருள் மிகச் சிறந்த ஒருவர் ஆவார்.

**திரு. சை. வே. சிட்டிபாபு**
பள்ளிக் கல்வி இயக்குநர்
சென்னை - 6.

ஈரோடு திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் தமது வாழ்நாட்களை ஆசிரியராகப் பணிசெய்து கழித்தார். ஆசிரியர் வேலையைத் தாமாக விரும்பி எடுத்துக் கொண்டாரா அல்லது அவ்வேலை அவரை வந்தடைந்ததா என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை

ஆனால் ஒன்று மட்டும் திண்ணமாகச் சொல்ல முடியும். அவர்கள் ஒரு சிறந்த ஆசிரியராகவும், வெற்றி மிகுந்த தலைமை ஆசிரியராகவும் பணி செய்து விட்டு ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆனால் விட்டால்தானே! கல்வி அவரைப் பின்னும் கவ்விக் கொண்டது! ஓய்வுடன் வாழக்கூடிய வாழ்நாளின் பிற்பகுதியை ஒரு சிறந்த கல்விக் கட்டுக்கோப்பாக மாற்றி அமைத்து விட்டார்.

**திரு. நா. மகாலிங்கம்**
சக்தி நிலையம்
பொள்ளாச்சி.

ஐயா அவர்களின் தன்னலமற்ற சேவையின் சின்னமாகக் கலைமகள் கல்வி நிலையம் சென்ற 25 ஆண்டுகளாக ஆற்றியுள்ள பணிகள் நம் வார்த்தைகளுக்கு அடங்காதவை. காந்திஜியின் உயர்ந்த லட்சியங்களையும் கருத்துக்களையும் நடைமுறையில், இளம் சிறார்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதியவைக்க எடுத்துள்ள சாதனை பாராட்டுக்குரியது. வருங்கால யுவதிகளுக்கு இது ஒரு கலைக் கூடமாக, ஆலயமாக அமைந்துள்ளது.

**திருமதி சரோஜினி வரதப்பன்**
சென்னை - 4.

ஈரோடு ஸ்ரீ சி. மீனாட்சி சுந்தர முதலியார் கல்விக்குச் செய்திருக்கும் சேவை பெரிது. அவரே மிக நல்ல ஆசிரியர். நல்ல ஆசிரியருக்கு வேண்டிய குணாதிசயங்கள் அனைத்தும் அவரிடம் நிறைந்திருக்கின்றன.

அவருக்கு குழந்தைகளிடத்தில் இருக்கும் பேரன்பும், கல்வி போதிப்பதில் இருக்கும் உற்சாகமும் அவரைக் கலைமகள் கல்வி நிலையத்திற்குச் சென்று பார்த்தவர்கள் தான் உணர முடியும். பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் அவர் கவனம் சென்று சுத்தமாக இருக்கிறது. செய்ய வேண்டிய ஒவ்வொரு காரியமும் அவர் உள்ளத்தைக் கவருகிறது. பிள்ளைகளிடம் காண்பிக்கும் பரிவும், அன்பும் அப்பள்ளிக்கு அடிப்படையாக இருந்து அப்பள்ளியை நம் நாட்டில் மிகச்சிறந்த பள்ளியாகச் செய்திருக்கிறது.

**திரு. தி. சு. அவினாசிலிங்கம்**
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோவை.

Thiru. S. Meenakshisundara Mudaliar is a remarkable man in many ways.

I have known him intimately for many years and we have had so many discussions.

He has made a mark in various fields of activity. He has played a prominent part in public and political life and has been a distinguished Municipal Chairman. As a scholar, orator, social reformer and leader, he is famous. But as the founder of a fine high school, as a teacher – head master and as an educationist he had attracted me most.

**Mr. V. T. Titus,** M. A., M. Litt., B. T.,
Director of Collegiate Education
Madras-6.

Shri. Meenakshisundaram is a veteran educationist and a great Tamil scholar who was dedicated his life to the cause of education in our country and, even at the age of 72, is still actively inspiring teachers and students with his vision and tireless pursuit of knowledge.

Mr. V. K. R. V. Rao,
Education Minister, India
New Delhi.

Sri S. Meenakshisundaram Mudaliar is an impressive and unique figure in the educational world of Tamilnadu His personality is a happy synthesis of bhakti, gnana and karma. He combines in himself ancient wisdom and modern science. His long and devoted service to the cause of education is a source of inspiration to one and all.

Dr. M. Aram,
Director,
Peace Centre, Kohima,
Nagaland.

Mr Mudaliar is an eminent teacher of a higher order and stands as a model to the present day teachers. He has a rare genius for friendship and has acquired a good number of friends. I am fortunate enough to be one of his old friends, enjoying his constant counsel and confidence.

Mr. V. R. Kuttiappa Gounder,
B. A., L. T.,
Retd. District Board,
Educational Officer,
Bhavani

Thiru. S. Meenakshisundaram, B. A., L. T., Founder of the Kalaimagal Kalvi Nilayam at Erode, is a born teacher and a great educationist. I had the pleasure of working under him as an Assistant, when he came to Sivaganga as Headmaster, Rajah's High School, Sivaganga in 1928 and during the four years he was here he had transformed the school into an abode of social activity, service and usefulness. His participation in Sports and Games, his eloquence at Public meetings, his entertaining conversation at Rajah Doraisingam's parties with friends and his inspiring and awe striking personality made his presence at Sivaganga an ennobling example for others to follow.

Mr. R. Narayananservai, M.A., L.T.,
Former Headmaster &
Correspondent,
Rajah's High School,
Sivaganga.

Iyya reads, observes, discusses and thinks – he passes on his findings to others through Conferences, Seminars and Workshops. He attends them in various places; he convenes or stages them in his school.

Mr. Chinnaswami Naidu, M. A., L. T.,

Erode is fortunate to have Thiru. S. Meenakshisundaram, B. A., L.T., (S. M.) as a citizen in whom it has found a never – failing friend, a well – balanced politician, a humble social worker, an outstanding scholar, an eminent educationist, respecter of all religions and a firm believer of God

Mr. John Sundararaj, B. A., B. T.,
Headmaster,
C. S. I. Boys' High School,
Erode.